

# வானொலியில் விளையாட்டுக்கள்


ஸ். நவராஜ் செல்லையா
M.A., D.P.E., M.P.ED.

# வானொலியில் விளையாட்டுக்கள்

மூன்று முறை தேசிய விருதுபெற்ற நூலாசிரியர்

எஸ். நவராஜ் செல்லையா
M.A., D.P.E., M.P.Ed.

ராஜ்மோகன் பதிப்பகம்
8, ரெங்கநாதன் தெரு
தி. நகர், சென்னை-17

## BIBLIOGRAPHICAL DATA



| | | |
|---|---|---|
| Titlo | — | Vanoliel Vilaiyattukkal |
| Author | — | S. Navaraj Chelliah |
| Language | — | Tamil |
| Edition | — | First |
| Date of Publication | — | September 1984 |
| Copy Right | — | S. Navaraj Chelliah |
| Paper Used | — | 10.9 Kg. White Printing |
| Size | — | 17.5X12C.m. |
| Type Point | — | 10 Point |
| Pages | — | 144 |
| Copies | — | 1000 |
| Printer | — | Grace Printers<br>27, Subbareddy Street.<br>West Mambalam,<br>Madras - 600 033. |
| Publisher | — | Rajmohan Pathippagam<br>10, Ranganathan Street<br>T. Nagar, Madras-600 017. |
| Prico | — | **Rs. 10-00** |
| Special Information | — | Good guide for School Children & Youngsters. |

# முன்னுரை

விளையாட்டுத்துறை தமிழ் இலக்கியத்தில் நூல்கள் அதிகமாக எழுத வேண்டும், வெளியிட வேண்டும் என்று எனக்கு ஏற்பட்ட ஆவல் இப்பொழுது நூறு நூல்களாகப் பூர்த்தி பெற, நான் இருபது ஆண்டுகளுக்கு மேல் கடினமாக உழைக்க வேண்டியிருந்தது. 'இந்த இலட்சியம் தான் என் வாழ்க்கை' என்று நான் எண்ணித் துணிந்து விட்டதால், எதிர்வந்த இன்னல்களும், ஏளனங்களும் என்னை எதுவும் செய்திடவில்லை.

எதிர்பார்த்ததற்கு மாறாக, நான் தீவிரமாக இந்தப் பணியில் ஈடுபட்டேன்.

இதனால், நான் வகித்துவந்த நல்ல வருமானம் தருகின்ற உத்தியோகங்களையெல்லாம், உதறித் தள்ளி விட்டு வெளியே வந்தேன்.

முழு நேர விளையாட்டுத்துறை எழுத்தாளனாக என்னை மாற்றிக் கொண்டேன்.

பிறர் என்னைப்பார்த்துப் பரிதாபப்படும் அளவுக்கு என் இலட்சிய வாழ்க்கை என்னை மற்றவர்கள் முன்னே தாழ்த்திக் காட்டியது.

இருந்த போதிலும் தாழ்ந்து போகவில்லை. பிழைத்துக் கொண்டேன்.

'ஒரு எழுத்தாளன் எழுத்தை நம்பி இந்த நாட்டில் வாழ முடியாது. அதுவும் தமிழ் நாட்டில் வாழ முடியாது' என்று எழுத்தாளர்கள் நம்பினர். எல்லோரும் அதையே திரும்பத் திரும்பக் கூறி வந்தனர். அதனால் எழுத்தை ஒரு பொழுது போக்காக, இரண்டாவது பணியாகக் கொண்டு பல எழுத்தாளர்கள் இருந்த நேரத்தில், எனது முழு நேரப்பணியாக அதிலும் யாரும் ஏறெடுத்தும் பார்க்காத, இறங்கத் துணியாத விளையாட்டுத் துறையில் நான் எழுதும் முயற்சியில் ஈடுபாடு கொண்டதைக் கண்டு, என்னைப் பார்த்தவர்கள் எல்லோருமே பரிதாபப் பட்டது இயற்கைதான்.

கஷ்டப்பட்டு எழுதி, கஷ்டப்பட்டுப் பணம் சேர்த்து புத்தகம் வெளியிட்டு, அதனை அச்சிட்டு, விற்கின்ற எல்லா பொறுப்புகளையும் நானே ஏற்றுக் கொண்டதால், எனது இலட்சியத்தை இன்று ஓரளவு எட்ட முடிந்திருக்கிறது.

எழுத்தோடு என்பணி நின்றுபோய்விடக் கூடாது என்று நினைத்த வானொலி நிலையத்தினர், அவ்வப்போது என்னை அழைத்து, விளையாட்டுக்கள் பற்றி பேசுமாறு பணித்தனர்.

முதன் முதலாக எனக்கு இந்த அரிய ஆதரவை அளித்தார் திரு. கிருஷ்ணசுவாமி அவர்கள். சென்னை வானொலி நிலையத்தில் வானொலி இயக்குனராகப் பதவி வகித்திருந்த அவர்கள் என் ஆர்வத்தையும், என் எழுத்தாற்றலையும் கண்டு, வானொலியில் தொடர்ந்து பேசிடும் வாய்ப்பினை அளித்து, வாழ்த்தித் தொடங்கி

வைத்தார். அவரது அன்பு இதயத்திற்கு என் அன்பார்ந்த வணக்கத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அவரது பரிந்துரையை ஏற்று, எனக்கு முதன் முதலாக வாய்ப்பளித்த நண்பர் திரு. வெ. நல்லதம்பி அவர்களையும் இந்த நேரத்தில் நன்றியுணர்வுடன் நினைத்து மகிழ்கிறேன்.

கோவை வானொலி நிலையத்தில் தொடர்ந்து 10 வாரங்கள், விளையாட்டுக்கள் பற்றிப் பேசிட வேண்டு மென்று என்னை வரவழைத்துப் பேசவைத்து மிகப் பெரிய பெருமையை எனக்களித்த மேன்மைமிகு இயக்குனர் திரு. கோ செல்வம் அவர்களை நெஞ்சார வாழ்த்தி மகிழ்கிறேன்

எழுதிப் பேசியதைத் தவிர, அநேக முறை வினாடி வினா நிகழ்ச்சிகள் நடத்தியுள்ளேன். நேர்முகக்காணல் நிகழ்ச்சிகள் பலவற்றிலும் பங்கு கொண்டுள்ளேன். அவையெல்லாம் இதில் இடம் பெறவில்லை.

என்றாலும், விளையாட்டுக்களைப் பற்றி நிறைய எழுத வேண்டும் பேசவேண்டும் என்ற எனது ஆசையும் விருப்பமும் தொடர்ந்து நிறைவேறி வந்திருக்கிறது. இன்னும் அதிக அளவில் ஈடுபட வேண்டுமென்று முயல்கிறேன்.

சிறந்த விளையாட்டுத்துறை நூல்கள் எழுதியதற்காக, மூன்று முறை தேசிய விருதினைப் பெற்றிருப்பதும் என்னை மேலும் உற்சாகப்படுத்துகிறது.

எனக்கு ஆதரவளித்த சென்னை, கோவை வானொலி நிலையத்தார்க்கு என் மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இதனை அழகுற அச்சிட்டுத்தந்த **கிரேஸ் பிரிண்டர்சுக்கும்**; அச்சுவேலைகளை சிறப்பாக செய்த திரு. R. சாக்ரட்டீசுக்கும் எனது நன்றியும் வாழ்த்துக்களும்.

எனது நூல்கள் அனைத்தையும் வாங்கி ஆதரித்து அன்புகாட்டி ஊக்குவித்துவரும் அனைவருக்கும் என் அன்பார்ந்த நன்றி.

அன்பன்,

ஞானமலர் இல்லம்,
சென்னை - 17

**எஸ். நவராஜ் செல்லையா**
24-9-84

# ஆசிரியரின் பிற நூல்கள்

| | | |
|---|---|---|
| விளையாட்டுத் துறையில் ஆங்கிலம் தமிழ் அகராதி | 15 | 00 |
| விளையாட்டுக்களின் கதைகள் (மத்திய அரசு பரிசு பெற்ற நூல்) | 15 | 00 |
| விளையாட்டுக்களின் வழி முறைகளும் வரலாறும் (மத்திய அரசு பரிசு பெற்ற நூல்) | 11 | 00 |
| ஒலிம்பிக் பந்தயத்தின் கதை (மத்திய அரசு பரிசு பெற்ற நூல்) | 5 | 00 |
| கிரிக்கெட் ஆட்டத்தின் கதை | 4 | 50 |
| விளையாட்டுகளுக்கு பெயர் வந்தது எப்படி ? | 3 | 00 |
| விளையாட்டு உலகில் வீரக் கதைகள் | 3 | 00 |
| வழிகாட்டும் விளையாட்டு வீரர்கள் | 3 | 25 |
| கேரம் விளையாடுவது எப்படி ? | 6 | 00 |
| சதுரங்கம் விளையாடுவது எப்படி ? | 4 | 00 |
| கால்பந்தாட்டம் | 4 | 00 |
| கைப்பந்தாட்டம் | 4 | 00 |
| கூடைப்பந்தாட்டம் | 4 | 00 |
| வளைகோல் பந்தாட்டம் | 4 | 00 |
| கிரிக்கெட் ஆட்டத்தின் கேள்வி பதில் | 4 | 00 |
| பூப்பந்தாட்டம் | 5 | 00 |
| மென்பந்தாட்டம் | 6 | 00 |
| வளையப்பந்தாட்டம் | 2 | 50 |
| விளையாட்டுக்களின் விதிகள் | 14 | 00 |
| நீங்களும் ஒலிம்பிக் வீரராகலாம் | 6 | 00 |
| ஒரு நூறு சிறு விளையாட்டுக்கள் | 5 | 50 |
| கூடி விளையாடும் குழு விளையாட்டுக்கள் | 4 | 00 |
| பொழுது போக்கு விளையாட்டுக்கள் | 3 | 50 |
| விளையாட்டு விருந்து | 5 | 00 |
| விளையாட்டு விழா நடத்துவது எப்படி? | 5 | 00 |
| விளையாட்டு அமுதம் | 3 | 50 |
| விளையாட்டு உலகம் | 3 | 50 |
| விளையாட்டுச் சிந்தனைகள் | 3 | 00 |
| விளையாட்டுகளில் வினாடி வினா விடை | 3 | 50 |
| விளையாட்டுத் துறையில் சொல்லும் பொருளும் | 4 | 50 |
| விளையாட்டு உலகில் சுவையான சம்பவங்கள் | 5 | 00 |
| வாழ்க்கைப் பந்தயம் | 6 | 00 |
| பாதுகாப்புக் கல்வி | 2 | 50 |
| சிந்தனைச் சுற்றுலா | 4 | 50 |

| | | |
|---|---|---|
| தெரிந்தால் சமயத்தில் உதவும் | 5 | 00 |
| விளையாட்டு ஆத்திசூடி | 5 | 50 |
| விளையாட்டுக்களில் விநோதங்கள் | 6 | 00 |
| இந்தியாவில் ஆசிய விளையாட்டுக்கள் | 6 | 50 |
| நீங்களும் மகிழ்ச்சியாக வாழலாம் | 5 | 50 |
| நீங்களும் நோயில்லாமல் வாழலாம் | 5 | 00 |
| Quotations on sports and Games | 7 | 00 |
| General Knowledge in Sports and Games | 1 | 25 |
| How to Break Ties in Sports and Games | 3 | 00 |
| பயன் தரும் யோகாசனப் பயிற்சிகள் | 8 | 00 |
| இந்திய நாட்டுத் தேகப் பயிற்சிகள் | 6 | 00 |
| நீங்களும் உடலழகு பெறலாம் | 5 | 00 |
| நீங்களும் உயரமாக வளரலாம் | 4 | 50 |
| பெண்களும் பேரழகு பெறலாம் | 4 | 00 |
| உடலழகுப் பயிற்சி முறைகள் | 3 | 25 |
| தொந்தியைக் குறைக்க சுலபமான வழிகள் | 5 | 00 |
| நல்ல கதைகள் பாகம் I | 3 | 00 |
| நல்ல கதைகள் பாகம் II | 1 | 50 |
| நல்ல கதைகள் பாகம் III | 1 | 50 |
| கடவுள் கைவிடமாட்டார் | 2 | 00 |
| பண்புதரும் அன்புக் கதைகள் | 3 | 00 |
| நல்ல நல்ல கதைப் பாடல்கள் | 3 | 00 |
| நல்ல பாடல்கள் | 1 | 75 |
| செங்கரும்பு | 2 | 00 |
| மாணவர்க்கேற்ற மேடை நாடகங்கள் | 3 | 75 |
| நவனின் நாடகங்கள் | 5 | 00 |
| நல்ல நாடகங்கள் | 2 | 25 |
| நவரச நாடகங்கள் | 8 | 00 |
| சுவையான நாடகங்கள் | 4 | 00 |
| வேஷங்கள் விளையாடுகின்றன (சிறுகதைத் தொகுப்பு) | 6 | 00 |
| தெய்வமலர் (சிறுவர் சிறுகதைத் தொகுப்பு) | 3 | 00 |
| மனைவியுடன் மகிழ்ச்சியாக வாழ்வது எப்படி? (உடல் நல நூல்) | 4 | 00 |

# 1. விளையாட்டு ஓர் - அறிமுகம்

எதிர்கால சிறந்த வீரர்கள், வீராங்கனைகளாகிய உங்ககிட்ட விளையாட்டைப் பத்தி இப்ப நான் பேசப் போறேன். நம்ம இந்திய நாடு பூரா, இப்ப இதே பேச்சு தான். எங்கே பார்த்தாலும், எந்த பத்திரிக்கைய புரட்டினலும், இதே சேதி தான்.

ஆமாம்!... ஆசிய விளையாட்டுப் போட்டிகள் நம்ம நாட்டில, டில்லியில, நவம்பர் 19ந் தேதி ஆரம்பிக்கப் போகுது. எத்தனையோ கோடி ரூபா செலவு பண்ணியிருக்குறாங்க... பல ஆயிரக் கணக்கான அதிகாரிகள் இராத்திரி பகலா இருந்து வேலை செய்யுறாங்க...

முப்பது நாட்டுக்கு மேல இந்தப் போட்டியில வந்து போட்டி போடப் போறாங்க... ஏன் இப்படி போட்டி நடக்குது?

காரணம் என்னென்னு, உலகம் பூரா பரவி இருக்குற ஒரு நல்ல காரியமா விளையாட்டு இருக்குறதுனால தான்.

விளையாட்டுன்னு விருப்பமா செய்யுற காரியம்னு அர்த்தம். யாரும் யாரையும் போய் வற்புறுத்தி, கட்டாயப் படுத்தி ஆடுன்னு சொல்ல முடியாது.

நான் விளையாட மாட்டேன்னு யாரும் சொல்லவும் மாட்டாங்க...ஏன்னா, விளையாட்டுல ஒருத்தருக்கு ஆர்வம் இல்லேன்னா, அவங்க ஒன்னு சோம்பேறியா இருக்கணும்... இல்லே...நோயாளியா இருக்கணும்...இல்லேன்னா இறந்து போயிருக்கணும்...

அந்த அளவுக்கு, விளையாட்டுங்கறது மனுஷர்களோட ஒன்றிப் போய் இருக்குது. விளையாட்டு எப்ப வந்திச்சு... எப்படி வளர்ந்துச்சுன்னு யாராலுமே சொல்ல முடியலே — அதுக்கும் ஒரு காரணம் இருக்குது.

மனுஷன் எப்ப பொறந்தானோ, அப்பவே இந்த விளையாட்டும் ஆரம்பமாயிடுச்சுன்னு தான் ஆராய்ச்சி பண்ணுனவங்க எல்லாம் சொல்றாங்க....

நம்ம உடம்புல இருக்குற உறுப்புக்களை ஒழுங்கா இயக்குறதுக்கு தான் விளையாட்டுன்னு பேரு-பாருங்க இப்ப நான் பேசிக்கிட்டு இருக்கறேன். என்னையறியாமலே நான் கையை காலை அசைக்கிறேன். இதுக்கு இயக்கம்னு (movement) பேரு.

நீங்க கஷ்டப்பட்டு உடலை வருத்தி ஒரு காரியம் செய்யுறீங்க அப்படி செஞ்சா பணம் கிடைக்கும், வருமானம் வரும், பேர் கிடைக்கும். பெரியவங்க பாராட்டு வாங்கணும்னு உங்க உறுப்புக்களை ஒரே சிந்தனையில் இயக்குறீங்க... இதுக்குப் பேரு வேலை (work).

அதாவது, இதை செஞ்சா இன்ன லாபம் கிடைக்கும்னு எதிர்பார்த்து செய்யுறது தான் வேலை.

ஆனா உடல் உறுப்புக்களை இப்படி இயக்குனா, இப்படி உடம்பு வளரும். சுகம் கிடைக்கும், சந்தோஷமா வாழலாம்னு

ஆசைப்பட்டு செய்யுறேமே-அதுக்கு தான் பயிற்சின்னு பேரு (Exercise).

ஓரிடத்துல நின்னுகிட்டே செய்யுறதுக்கு-அதாவது மூச்சை உள்ளே இழுத்து வெளியே விட்டு செய்யற இயக்கத்துக்குத் தான் பயிற்சின்னு பேரு.

ஆனா, விளையாட்டு இருக்குதே, அது மகிழ்ச்சிக்காக செய்யற மணியான காரியம்—இதைத்தான் நீங்க நல்லா கவனிக்கனும்.

விளையாட்டுங்கறது காட்டிலயும் குகையிலயும் வாழ்ந்த நமது முன்னோர்கள் காலத்திலிருந்தே வந்துகிட்டிருக்குது. அதாவது இந்த விளையாட்டுக்கு வரலாறே கிடையாது. ஆனா, சந்தோஷமா இருக்கத்தான் அந்த காலத்து ஆளுங்க விளையாடுனாங்கங்கறதுக்கு நிறைய ஆதாரம் இருக்கு.

இப்படி மனிதரோடவே கூட ஒட்டி உறவாடி வர்ர விளையாட்டுக்கள் இருக்கே, அதை நாம் பார்க்கும் போது மட்டும் சந்தோஷம் வராம, படிக்கும் போது கூட வர்ர அளவுக்கு சுவையானதா கூட இருக்கு.

யாரும் கண்டு பிடிக்காமலே ஒரு சில விளையாட்டுக்கள் எப்படியோ உண்டாகி, இன்னைக்கி உலக அளவிலே வளர்ந்திருக்குது. கால்பந்தாட்டம். ஹாக்கிங்கற வளைகோல் பந்தாட்டம் ஓர் உதாரணம்.

கண்டுபுடிச்சி தான் ஆகனும்னு அமெரிக்காவில் இருந்து ரெண்டு உடற்கல்வி இயக்குநர்கள் ஆசைப்பட்டு முயற்சி செய்து கண்டுபிடிச்சாங்க, டாக்டர் ஜேம்ஸ் நெய்சுமித்ங்கற வர் கூடைப் பந்தாட்டத்தைக் கண்டுபிடிச்சாரு. வில்லியம் மோர்கன் என்றவர் கைப்பந்தாட்டம் எனும் ஆட்டத்தைக் கண்டு பிடிச்சார்.

ஆனா, ஒரு சில விளையாட்டுக்கள் தனியா உண்டாகாமெ, மற்றொரு விளையாட்டுல இருந்து பிரிஞ்சி புதுசா உருவாகி வந்திருக்குது.

அதாவது. தளப்பந்தாட்டத்திலேயிருந்து மென் பந்தாட்டம் வந்தது, பிலியர்ட்ஸ்ங்கற ஆட்டத்துலயிருந்து கேரம் வந்தது. கால் பந்தாட்டத்தில் இருந்து ரக்பிங்கற ஆட்டம் வந்தது.

இன்னும் ஆச்சரியமான விஷயம் கூட இந்த விளையாட்டு வரலாறுல இருக்குது. நம்ம ஊரில ஒரு பேருல இருந்த ஆட்டம், வெளிநாட்டுக்குப் போய், வேறுபெயரை வச்சிகிட்டுத் திரும்பி வந்திருக்குது.

நம்ம நாட்டுல பூனான்னு பேரு. அது இங்கிலாந்து நாட்டுக்குப் போயிட்டு. பேட்மிட்டன்ங்கற பேருல திரும்பி வந்துடுச்சி. சதுரங்கம்னு பேரு உள்ள நம்ம நாட்டு ஆட்டம், செஸ்னுபேர் வச்சிகிட்டு இருக்குது. குதிரைப் பந்தாட்டம் தான் போலோங்கற பேருல திரும்பி வந்திருக்குது.

இந்த மாதிரி, பலவிதமா புதிய புதிய விளையாட்டுங்க நம்ம நாட்ல மட்டும் இல்லே... உலகம் பூரா பரவி கிடக்குது. விளையாட்டுங்கறது உலகத்தின் பொது மொழின்னு சொன்னா, அது உண்மைதான். ஆச்சரியப்பட வேண்டாம்.

இப்ப இருக்கிற விளையாட்டுங்களை நாம மூணு வகையா பிரிக்கலாம்.

எப்படி ?

உடம்பை உபயோகப்படுத்தி விளையாடுவது ஒரு வகை, அதாவது கால்பந்தாட்டம், கைப் பந்தாட்டம், கூடைப் பந்தாட்டம், கிரிக்கெட், சடுகுடு போன்ற ஆட்டங்கள்.

மூளைய பயன்படுத்தி ஆடுற ஆட்டம், அதாவது சதுரங்கம், கேரம், பல்லாங்குழி, ஆடு புலி ஆட்டம்.

அதிர்ஷ்டத்தை நம்பி ஆடுற ஆட்டமும் இருக்குது. அது சீட்டாட்டம், பிரிட்ஜ் மாதிரி.

எல்லா ஆட்டத்துலயும் ஒரு நோக்கம் இருக்குது. அதாவது-தன்னோட திறமையை, மத்தவங்க முன்னால காட்டணும், நல்ல வெற்றி பெறணும் கெட்டிக்காரன்னு பேர் வாங்கணும்ங்கறது தான் அந்த நோக்கம்.

அந்த மாதிரி உற்சாகமா ஆடணும்னு, நாம, எந்த ஆட்டத்துல ஆடப்போறோமோ, அந்த ஆட்டத்தைப் பத்தி நல்லா புரிஞ்சி வச்சிக்கணும். ஆடுற விதம், ஆடக்கூடிய விதிகள், அதைப் பத்திய முக்கிய விவரம் முதலிய விஷயங்களை நல்லா தெரிஞ்சி வச்சிக்கணும். அதைப்பத்தித் தான் அடுத்தடுத்து பேசப் போறேன். நீங்களும் தொடர்ந்து கேட்கலாம், அடுத்து வருவது கைப்பந்தாட்டம் பற்றி.

# 2. கைப்பந்தாட்டம்

இது அமெரிக்காவுல பிறந்த ஆட்டம். இதை கண்டு பிடிச்சவர் வில்லியம் மோர்கன் என்கிற உடற்கல்வி இயக்குநர். இதை ஏன் கண்டு பிடிச்சார்னு கேட்டா அதுவும் ஒரு கட்டாயத்துனாலதான்.

1895ம் ஆண்டு தான் இவர் இந்த ஆட்டத்தைக் கண்டு பிடிச்சார், ஏன்னா, இவரோட உடற்பயிற்சி மன்றத்துல வயசான பணக்காரங்க பல பேரு இருந்தாங்க. அவங்க உடற் பயிற்சி செய்யறதோட, கூடைப் பந்தாட்டத்தையும் ஆடிக்கிட்டு இருந்தாங்க.

கூடைப் பந்தாட்டம்னு வேகமா ஓடணுமே. திரும்பித் திரும்பி ஓடிவந்து ஆடணுமே! அப்படி ஆடவும் ஓடவும் முடியாததுனால, வில்லியம் மோர்கன் கிட்ட வந்து, 'நாங்க ஆடுகிற மாதிரி சிம்பிளா ஒரு ஆட்டம் வேணும். அப்பதான் நாங்க தினம் இங்கே வருவோம்' அப்படின்னு கண்டிப்பா சொல்லிட்டாங்க.

பயிற்சி செய்யறவங்க இல்லாம மன்றம் எதுக்கு? அவங்க ஆர்வமா வரணும்னு புதுசா ஒரு ஆட்டம் வேணுமே! மோர்கன் மண்டையை போட்டு குழப்பிக்கிட்டாரு. ரொம்ப நாள் கழிச்சு, ஒருநாள் சாயங்காலமா அவர் வாக்கிங் போனபோது, பத்துபேர் சேர்ந்து ஒரு ஆட்டத்தை விளையாடிக்கிட்டு இருந்தாங்க....

வலையின் உயரமோ ஏழு அடி. பந்தை அடிக்கறதுக்கு நீண்ட கைப்பிடியுள்ள ஒரு பேட். அடிச்சு ஆட ஒரு சின்ன பந்து. ஆகா ஓகோன்னு சத்தம் போட்டு அவங்க எல்லோரும் ஆடிக்கிட்டு இருந்ததைப் பார்த்ததும், இவருக்கு ஒரு ஐடியா வந்தது

வலைக்கு மேலேயே பந்தை மாறி மாறி, மட்டையால அடிக்குறாங்க... அந்தமட்டைக்குப் பதிலாக கையை உபயோகிச்சா எப்படி இருக்கும்! இந்த ஐடியா வந்ததும், 'ஆகான்னு' இவர் துள்ளிக் குதிச்சாறு......

அப்புறம் என்ன ? ஆடுறதுக்கு கை வந்தாச்சு. ஒரு பந்து வேணுமே ? கூடைப் பந்துல உள்ளே இருக்குற அந்த பிளாடரை எடுத்து, காத்தடிச்சி, பந்தாக்கிட்டாரு. கட்டுறதுக்கு வலை வேணுமே! டென்னிஸ் ஆட்டத்துக்கு கட்டுற வலையை கொண்டு வந்து கட்டிட்டாரு.

ஒரு குழுவுக்கு 20 பேர், 30 பேர்னு நின்னு பந்தை கையால் குத்தி, அடிச்சி, தள்ளி அடி சந்தோஷப் பட்டாங்க....

மோர்கன் இதுக்கு என்னபேர் வச்சார் தெரியுமா ? மின்டன் என்னும் ஆட்டத்துல இருந்து இதை கண்டு பிடிச்சதுனால இதுக்கு மின்டானெட்டுன்னு பேர் வச்சாரு.

பேரு கேட்க நல்லா இல்லேன்னு சொன்னாரு ஒரு பேராசிரியர். அவர் பேரு ஹால்ஸ்டெட். அமெரிக்காவுல இருக்குற கோலியோர்க்ங்குற இடத்துல இருந்து, இந்த ஆட்டத்தை ஸ்பிரிங்பீல்டுங்கற பக்கியமான இடத்துக்குக் கொண்டு போய் முன்னேற வச்சவரே இவர்தான்.

பந்தை வலைக்குமேலே மாறி மாறி அடிக்கறதுனாலை இதுக்கு வாலிபால்னு பேர் இடலாட்டுமேன்னு சொன்னாரு. அந்தப் பேரு அப்படியே பழக்கத்துல வந்துடுச்சு.

பிண்டாலெட்டுன்னுற பேர் போயி வாலிபால்னு மாறி வந்த நேரம்-ரொம்ப அதிர்ஷ்டமாப்போச்சு. அமெரிக்காவுல இருந்து பிரான்சு கனடா, பெல்ஜியம் இத்தாலி, எகிப்துன்னு எல்லா நாட்டுக்கும் பரவிப்போய், புகழ் பெற ஆரம்பிச்சுட்டுது.

சுமார் ஐம்பது வருஷத்துல, உலகம் பூரா இந்த ஆட்டத்தை ஆட ஆரம்பிச்சாச்சு. அதனால 1946ம் ஆண்டு பெரிய உலகப் போட்டி ஒன்னு நடந்தது. அதனால என்ன லாபம்னு, 1964ம் ஆண்டு. ஒலிம்பிக் பந்தயத்துல ஆடுற ஆட்டமா இதை ஆக்கிட்டாங்க... அந்த அளவுக்கு வாலிபால் வளர்ந்துபோச்சு.

சுமார் 80 வருஷத்துக்கு முன்னால தான் கைப்பந்தாட்டம் நம்ம நாட்டுக்கு வந்தது. 1950ம் வருஷத்துலியே அகில இந்திய அளவுல தலைமைச் சங்கமும் ஏற்படுத்திட்டாங்க.

ஒரு தடவை ஆசியா கண்டத்துலேயே சிறந்த நாடுன்னு கைப்பந்தாட்டத்துல வெற்றியும் நாம அடைஞ்சிருக்கிறோம். இருந்தாலும், அப்புறம் அந்த இடத்தை நம்மால் எட்டிக்கூட பிடிக்கவே முடியலியே!

நாம சரியா பயிற்சி செய்யலியா? இல்ல மற்ற நாட்டுக் காரங்க நல்லா பயிற்சி செய்து முன்னுக்கு வந்துட்டாங்களான்னு நீங்கதான் சொல்லனும்.

கைப்பந்தாட்டங்கறது 7 அடி 11½ அங்குலம் உயரம் உள்ள வலைக்கு மேலே பந்தை தாவி அடிக்குற ஆட்டம்... அதுக்கு உயரமான ஆட்கள் இருந்தா தான் முடியும்! நல்ல உயரமானவர்கள் தான் நல்லா ஆடுவாங்கன்னு இல்லே — குட்டையா இருந்தாலும் கூட சிறப்பா ஆட முடியும்.

அதுக்கு நல்ல முயற்சியும் பயிற்சியும் வேணும்.

கைப்பந்தாட்டத்துல இருக்குற ஆட்டத் திறமைய நாம ஏழு வகையா பிரிக்கலாம். இதையெல்லாம் நீங்க மனசுல வச்சு, முறையோட கத்துக்கனும்.

பந்தை கையால எடுத்து விளையாடுற விதம் — விரல்ல தேங்காம, நேரா எடுத்து நம்ம குழுவுக்குத் தர்ரது. இதுக்கு பேரு Handling the ball பந்தைக் கையாளுதல்னு பேரு.

ரெண்டாவது—பந்தை எடுத்து தர்ரது. அதாவது Pass பண்றது. ஒரு குழுவுல மூனுதடவை பந்தை எடுத்து ஆடலாம்னு விதி இருக்கு. அதனால். Passing the ball பந்தைத் தடுத்தாடுதல் மிகமிக முக்கியம்.

மூனுவது திறமை—சர்வீஸ் போடுறது. சர்வீஸ் சரக்கா போட்டா தான் ஒரு குழுவுக்கு பாயிண்ட் கிடைக்கும். 15 பாயிண்ட் எடுத்தாதான் ஜெயிக்க முடியும். அதனால சர்வீஸ் போடுற திறமையை நல்லா கத்துக்கனும்.

நாலாவது—பந்தை வலைக்கு மேலே தூக்கி Lift பண்றது. அப்பதான் நம்ம சைடுல இருந்து பந்தை வலிமையா அடிக்க முடியும். அதுக்கு பேரு Set பன்னு சொல்வாங்க.

அஞ்சாவது—பந்தை கட்பண்றது. இதை Smash பண்றது. offence ஆடுறதுன்னும் சொல்வாங்க. இப்படி பந்தை வலிமையா அடிச்சி; எதிராட்டக்காரங்களை திணற வச்சா தான் ஜெயிக்கறதுக்கு பாயிண்ட் சேர்க்க முடியும்.

ஆறுவது-அடுத்தவங்க கட்பண்றப்ப, வலைக்குமேலேயே பந்தை தேக்கித் தடுத்துடுறது. இதுக்கு Blockingன்னு பேரு. பிளாக் பண்ணி ஆடுற திறமை ரொம்ப முக்கியமான திறமையாகும்.

ஏழாவது—பிளாக் பண்ணியும் நம்ம சைடுக்கு பந்து வந்துட்டா அதை கீழே விழாம எடுத்து அடுத்த பக்கத்துக்கு அனுப்புற திறமை.

இதெல்லாம் ஒங்களுக்கு விளக்கமா சொல்லிட நேரம் இல்லே !

ஒவ்வொரு ஆட்டத்துக்கும் முக்கியமான திறன் நுணுக்கங்கள்னு பல இருக்குது. அதை நல்லா தெரிஞ்சு, புரிஞ்சு, நீங்க விடா முயற்சியோட ஆடணும். விடா முயற்சிதான் வெற்றி தரும். நீங்க நிச்சயம் வெற்றி பெற வேணும்னு நான் ஆசைப்படுறேன்.



# 3. கூடைப் பந்தாட்டம்

கூடையே இல்லாத ஆட்டத்துக்கு கூடைப் பந்தாட்டம்னு ஏன் பேர் வந்துச்சு? பெரிய பலகையில இரும்பு வளையந்தானே மாட்டியிருக்குது? இப்படி ஒரு சந்தேகம் உங்களுக்கு நிச்சயம் ஏற்பட்டிருக்கும்.

உங்க சந்தேகம் நியாயமான சந்தேகம்தான். இந்த ஆட்டம் ஆரம்பமானதே, இரண்டு கூடைகளை வச்சுதான். அதனாலதான் Basket Ballன்னு பேரே வச்சாரு இதை கண்டுபிடிச்சவர்.

கண்டுபிடிச்சவர் டாக்டர் ஜேம்ஸ் நெய்சுமித்ங்கற அமெரிக்காக்காரர். இவரும் ஓர் உடற்கல்வி இயக்குநர்தான். வில்லியம் மோர்கன் மாதிரி இவரும் ஒரு புதிய விளையாட்டைக் கண்டுபிடிச்சி, தன்னோட மன்றத்துக்கு உடற்பயிற்சி செய்ய வர்ரவங்களை திருப்திபடுத்தனும்னு முயற்சி பண்ணினார்.

புதிய விளையாட்டைக் கண்டுபிடிக்கிறதுன்னு அவ்வளவு ஈசியா என்ன? நெய்சுமித்தும், பாவம் உடலால நெய்யா காஞ்சி, மனசால திரியா எறிஞ்சார்! ஒன்றும் சரியா வரலே.... எதுவும் புரியலே!

ஒரு நாள் என்ன பண்ணினார் தெரியுமா? எல்லா விளையாட்டைப்பத்தியும் யோசிச்சுப் பார்த்து ஆராய்ச்சிப்

பண்ண ஆரம்பிச்சார். எல்லா ஆட்டத்துலயும் ஒரு பந்து இருக்கு, ஒரு வலை இருக்கு, பந்து போறதுக்கு ஒரு இலக்கு Goal இருக்குது. அப்படின்னு கண்டுபிடிச்சார்.

அதோட அவர் ஆராய்ச்சியை விட்டுடலே... பந்து போறதுக்கான Goal எல்லாம் எங்கே இருக்குதுன்னு பார்த்தார்... எல்லாம் தரையிலதானே இருக்குது! நாம ஏன் உயரத்துல வைக்கக் கூடாதுன்னு யோசிச்சார்.

கரக்ட், அதுதான் சரின்னு முடிவு பண்ணிட்டு, அங்கே வேலை செஞ்ச ஒரு கட்டிடம் கட்டுற மேஸ்திரியை கூப்பிட்டு, இரண்டு மரப்பெட்டிகளை கொண்டு வாப்பான்னு சொல்லிட்டு, இன்னைக்கு சாயங்காலம், நீங்க புதுசா ஒரு ஆட்டத்தை ஆடப்போறீங்கன்னும் மன்ற உறுப்பினர்களைப் பார்த்து சொல்லிட்டாரு.

சாயங்காலம் ஆச்சு. அந்த மேஸ்திரி வரலே. கடைசி நிமிஷத்துல அந்த காண்டிராக்டர், மேஸ்திரிதான், வந்து. நீங்க கேட்ட மரப்பெட்டி இல்லீங்க. பீச் பழங்களை வச்சுக்குற கூடைங்கதாங்க இருக்குதுன்னு, குடுத்துட்டுப் போயிட்டான்.

கேட்டதோ மரப்பெட்டி. கிடைச்சுதோ கூடைங்க. சரி. கிடைச்ச வரையிலும் பரவாயில்லேன்னு, ஆடுறதுக்காக இருந்த அந்த ஹால்ல, இரண்டு பக்கத்தலயும் இந்த இரண்டு கூடைகளையும் ஆணி அடிச்சு மாட்டிவிட்டாங்க.

பந்தை தரையில கையால தட்டித்தட்டிக் கொண்டு போயி. அந்த கூடைக்குள்ளே போடுறதுதான் ஆட்டத்தோட முறை. முதமுதலா பந்தை போடுறதுக்கு கூடை உதவினது னாலதான் அதுக்கு கூடைப்பந்தாட்டம்னு பேரு வந்துச்சு

இப்படி விளையாட்டு உலகத்துல, ஒரு புதுமையான பந்தாட்டம் பொறந்த வருஷம் 1891. டாக்டர் ஜேம்ஸ் நெய்ஸ்மித் இதுக்காக 5 விதிகளை உருவாக்கித் தந்தார்.

இவருக்கு மூன்முதலா உதவிய பந்து கால் பந்தாட்டத்துல இருந்த கால்பந்துதான்.

ஆட்டம் ஆரம்பிச்ச நேரத்துல, பந்து கூடைக்குள்ளேயே ரொம்ப நேரமா விழாம இருந்தது. ஒரு தடவை பந்து கூடைக்குள்ளே விழுந்திட்டா. பத்தடி/உயரத்துல இருக்கும் அந்தக் கூடையில இருந்து பந்தை எப்படி எடுக்கமுடியும்! அதனால ஏணியை கொண்டு வந்து வச்சு ஏறி எடுத்தாங்க! அடிக்கடி / பந்து கூடைக்குள்ளே விழ ஆரம்பிச்சிட்டது. அடிக்கடி ஏணியும் உள்ளே வந்து நிக்க ஆரம்பிச்சுட்டது, ஆடுவனங்க எல்லாத்துக்கும் எரிச்சல். கடைசியில, கூடையோட அடிப்பாகத்தை பிச்சிப் போட்டுட்டாங்க...

அதுக்கு அப்புறந்தான், கூடையையே மாத்திட்டு, இரும்பு வளையம் பொருத்தி, அதுக்குள் கீழே சின்ன கயிற்று வலையா ஒன்னை மாட்டி விட்டிருக்காங்க இரும்பு வளையம் வந்துட்டாலும், இரும்பு வளையப் பந்தாட்டம்னு மாத்தாம, கூடைப் பந்தாட்டம்னு தான் வச்சிருக்காங்க. ஆகா! சமயத்துல உதவின அந்தக் கூடைகளுக்கு வந்த வாழ்வைப் பார்த்தீங்களா!

இந்த ஆட்டம் புறந்து 45 வருஷத்துக்குள்ளாறவே உலகம் பூரா பரவிடுச்சு. 1936ம் வருஷம் உலக கூடைப் பந்தாட்டக் கழகம் ஒன்னும் வந்தாச்சு. அதைவிட அதிசயம், ஒலிம்பிக் பந்தயத்துல ஒரு ஆட்டமாகவும் சேர்த்தாச்சு.

இதுல என்ன முக்கியமான சேதின்னா, இதுவரை அமெரிக்கா தான் எல்லா போட்டிகளையும் ஜெயிச்சிருக்கு. ரஷ்யா ஒரு முறைதான் அமெரிக்காவை ஜெயிச்சது.

இந்த ஆட்டமும் உயரமானவங்க ஆடுற ஆட்டம்தான். சுமார் 7 அடி உயரம் இருக்கிறவங்க சர்வ சாதாரணமா வந்து சேர்ந்து ஆடுற ஆட்டமா இருக்குது.

இந்த ஆட்டத்துக்கு ஒரு குழுவுல மொத்தம் 12 பேர். உள்ளே இறங்கி ஆடுறவங்க 5 பேர். 7 மாற்றுஆட்டக்காரங்க.

மொத்தம் ஆடுற நேரம் 40 நிமிஷம். அதாவது 20, 20 நிமிஷம் என இரண்டு பிரிவா பிரிச்சி ஆடுவாங்க. இடையில 10 நிமிஷம் ஓய்வு

ஆடிகிட்டு இருக்குறப்ப வளையத்துல பந்தை போட்டுட்டா, 2 பாயிண்ட். தப்பு பண்ணுனவருக்கு தண்டனையா தர்ர தனி எறியில பந்தை வளையத்துல போட்டா, ஒரு பாயிண்ட்.

யார் அதிகமான பாயிண்ட் எடுத்திருக்காங்களோ அந்தக் குழு தான் ஜெயிச்சதா அறிவிக்கப்படும்.

இந்த ஆட்டத்துல உள்ள சில முக்கியத் திறன்களை நீங்களும் தெறிஞ்சி பழகிக்கிட்டா, நல்ல ஆட்டக்காரரா நீங்களும் வரலாம். நம்ம தமிழ்நாட்டுக்கும், இந்திய நாட்டுக்கும் சிறந்த பேர் வாங்கித் தரலாம்.

பந்தைப் பிடிக்கிற திறமை—உங்ககிட்ட பந்து வேகமாக வரும்—எதிர் பார்க்காத நேரத்துல் எப்படி எப்படியெல்லாமோ பந்து வரும். அதை விட்டு விடாம, எதிரிகிட்ட போயிடாம பக்குவமா, பத்திரமா புடிக்கனும்.

உங்க கையில பந்து வந்துட்டா, எதிரிங்க சும்மா விடுவாங்களா? சுத்தி வளைச்சுக்குவாங்க அப்பொ நீங்க Pivot step போட்டு, கால மாத்தி மாத்தி வச்சி, ஏமாத்தி சமாளிக்கனும்.

குறிப்பார்த்து பந்தை வளையத்துக்குள்ளே போடனும். ஒரு கையால எறியறது, ரெண்டு கையால போடுறது. தள்ளி

எறியறது ஹொக்கி மாதிரி கையை வளைச்சி எறியறதுன்னு பலப்பல Skils இருக்கு.

நீங்க புத்தகத்து மூலமாக படிச்சு தெரிஞ்சுக்கலாம். பயிற்சியாளர்கிட்டே போனு, ஆடியே பழகலாம்.

உங்களுக்கு ஆர்வம் இருக்கனும். அந்த ஆர்வத்தை அர்த்தத்தோட புரிஞ்சுக்கனும். அதை கடைசி வரை விடாம காரியம் பண்ணனும். இந்த மூனும் தான் விளையாட்டுக்கு முக்கியமான முறைகளாகும்.

நீங்க நாட்டுல முக்கியமானவங்களா வரனும்னு. முக்கியமான விஷயங்களை கத்துக்குறது மட்டுமல்ல, முக்கியமான திறமைகளையும் நல்லா கத்துக்கிட்டு முன்னுக்கு வரனும்.



# 4. வளைகோல் பந்தாட்டம்

ஒலிம்பிக் பந்தயத்துல ஒரே ஒரு தங்கப் பதக்கத்தை இந்தியா வாங்கிடும்னு யாரை கேட்டாலும் டக்குன்னு சொல்லிடுவாங்க. அது எந்த விளையாட்டுத் தெரியுமா ?

வளைகோல் பந்தாட்டம் தான். Hockeyன்னு ஆங்கிலத்துல சொல்வாங்க. வளைந்த குச்சியால அடிச்சு ஆடுற ஆட்டமா இருக்குறதுனால தான், இதை வளைகோல் பந்தாட்டம்னு சொல்றேன்.

ஹாக்கின்னு சொல்ற இங்கிலீஷ் வார்த்தை, ஹாக்கெட்ங்கற பிரெஞ்சு சொல்லுலேயிருந்து வந்திருக்கு. அதுக்கு என்ன அர்த்தம் தெரியுமா ? ஆடுமாடுகளுக்கு இலை தழை பறிச்சு போடுற ஆடுமேய்க்குறவனோட கைக் கோல்னு அர்த்தம். அதாவது வளைஞ்சகோல்னு அர்த்தம்.

இந்த வளைஞ்ச கோலை வச்சுத்தான், ஆதி காலத்துல அமெரிக்கப் பகுதியில வாழ்ந்த செவ்விந்தியர்கள் விளையாடுவாங்களாம். இரண்டு கூட்டத்துக்கு இடையில போட்டி பந்தாட்டம். காலையில சூரியன் கிளம்புறப்ப ஆரம்பிக்குற ஆட்டம், மாலையில சூரியன் மறையும் வரை நடக்குமாம். ஆட்டம் முடிஞ்ச பிறகு பார்த்தா, ஆங்காங்கே ஆளுங்க செத்துக்கிடப்பாங்களாம். ஆமாம், வேணும்னு அவுங்க பந்தை அடிக்கலாம். வேண்டாம்னு

ஆளையே அடிச்சு தீர்த்துடலாம். அந்த முறையில ஒரு ஆட்டம். வளைகோல் பந்தாட்டம் உருவானதுக்கு இந்த ஆட்ட முா் ஒரு காரணம்னு சொல்வாங்க.

இவ்வளவு பயங்கரமான ஆட்டம் அயர்லாந்துலயும் ஆடப்பட்டது. அந்த ஆட்டத்துக்கு பேரு சர்லிங். அதுல, ஜெயிச்ச ஒரு குழு, தோத்துபோன ஒன்பது பேரையும் அந்த இடத்துலயே சாகடிச்சுட்டதா சரித்திரம் இருக்குது.

அவ்வளவு பெரிய முரட்டுத்தனமான ஆட்டத்தைதான், மாத்தி மாத்தி, மெருகேத்தி, மனுஷாளு ஆடுறமாதிரி, பக்குவமா, பதப்படுத்தி, பண்பாடுள்ள ஆட்டமா உருவாக்கி வச்சுட்டாங்க.

1866லே தான், புதிய விதிமுறைகள் இந்த ஆட்டத்துக்கு வந்தன. அதுக்குப் பேரு கியூன்ஸ் பெர்ரி விதிகள். அதுக்குள்ளேயே உலகம் பூரா பாவிப் போனதா இந்த ஆட்டம் வந்துடுச்சு. 1900 ஆண்டில நடந்த ஒலிம்பிக் பந்தயத்துல, இதையும் ஒரு போட்டி ஆட்டமா சேர்த்துட்டாங்க.

ஆனு, நம்ப நாட்டுல ஒரு தலைமை சங்கம் அமைக்க 20 வருஷம் முயற்சி பண்ணி முடியாம, கடைசியா 1925ம் வருஷம் தான் முடிஞ்சது. இந்த இழுபறி, நல்லவேளை ஆட்டத்துக்குள்ளே வரலே.

1928ம் வருஷம் முதன் முதலா நம்மநாடு, ஒலிம்பிக் போட்டியில கலந்துக்கப் போனது, அதில ஜெயிக்க ஆரம்பிச்ச இந்தியா, 1932, 1936, 1948, 1952, 1956 வரை, 24 வருஷம், உலகத்துல முதல் நாடா இருந்தது. 1960ல தோற்க ஆரம்பிச்சு, தலைகுனிஞ்ச நாம், இப்ப 1980ல தான், மாஸ்கோ ஒலிம்பிக்ல வெற்றி பெற்று, நிமிர்ந்து நிற்கிறோம்.

இந்த ஆட்டத்துல உள்ள திறமை நமக்கு போதாதுன்னு எல்லோருமே யோசிக்குறுங்க. இந்த நாட்டு சிறுவர்கள் இதுல இன்னம் ஆர்வம் காட்டுல, ஊக்கமா உற்சாகமா விளையாட லேன்னு சொல்றுங்க... நீங்க என்ன செய்யப் போறீங்க?...

வறுமையில வாடுறோம், வசதி இல்லிங்க, யாரும் கத்துத்தர ஆள் இல்லிங்க. எங்களால முடியாதுங்கன்னு பதில் சொல்லப் போறீங்களா!

நீங்க அப்படிப் பேசமாட்டீங்கன்னு எனக்கு நல்லா தெரியும்! ஏன்னு, வசதியில்லாம, வறுமையில ஒரு வேளை சாப்பாட்டுக்கு இல்லாம கஷ்டப்பட்டவங்கதான், ஒலிம்பிக் பந்தயங்கள்ல First ஆ வந்திருக்காங்க... உலகப் புகழ் பெற்றிருக்காங்க.

காரணம்! அவங்ககிட்ட இருந்த ஊக்கம், உற்சாகம், வேகம், இலட்சியம், உண்மையான உழைப்பு, தான் முன்னுக்கு வரவேண்டும்ங்கற வெறி, தாய் நாட்டுக்குப் புகழ் வாங்கித் தரனும்ங்கற தியாகம். தன்னம்பிக்கை இருந்தது!

ஒங்களுக்கும் இந்தப் பண்பும், தாய் நாட்டு அன்பும் நிறைய இருக்குது. நீங்க இப்பவே வீர சபதம் எடுத்துக்கங்க... பாடப் பாடத்தான் ராகம். ஓட ஓடத்தான் வேகம். ஆட ஆடத்தான் ஆட்டம். நிச்சயமாக நீங்க முயற்சி செஞ்சா, நடக்காதது என்ன இருக்கு இந்த உலகத்துல...

வளைகோல் பந்தாட்டம்னு என்னமோ ஏதோன்னு பயமே வேண்டாம்.. நீங்க வீட்டில சின்ன குச்சியால கீழ கிடக்குற பொருளை அடிக்குறது மாதிரி தான். நீங்க குறிபா அடிக்குறதுல தான் இந்த ஆட்டத்தின் சிறப்பே அடங்கி இருக்கு.

வேகமா வர்ர பந்தை Stick ஆல தேக்கறது. அதை பக்கத்துல இருக்குற நம்ம குழு ஆட்டக்காரர்கிட்ட தள்ளி

குடுக்குறது; எதிரி வந்தா ஏமாத்தி கோலோட பந்தை உருட்டி கிட்டே ஓடுறது. இந்த சாமர்த்தியம் தான் இந்த ஆட்டத்துக்கு வேணும்.

இதோட, ஆட்டம் பற்றிய சில முக்கியமான விதிகளையும் சொல்லிடுறேன்.

ஒரு குழுவுக்கு 11 பேர் இருந்து ஆடுவாங்க. 2 பேர் மாற்றுஆட்டக்காரர்கள்.

மொத்தம் ஆடுற நேரம் 70 நிமிஷம். அதாவது 35 நிமிஷம் 35 நிமிஷம் என இரண்டு பிரிவு. இடைவேளை 5 நிமிஷம். இந்த நேரத்துக்குள்ளே யார் அதிகம் கோல் போடுறாங்களோ, அந்தக் குழு தான் ஜெயிச்சதா அர்த்தம்.

நம்ம கையில தான் தண்டாயுதம் மாதிரி ஒரு கோல் இருக்குதே! அதை கண்டபடி பயன்படுத்தலாம்னு யாராவது நினைச்சா அதுவே பெரிய தப்பாயிடும்.

பந்தை அடிக்கறதுக்கு முன்னேயும், அடிச்ச பிறகும், அந்தக் கோலை தோள் உயரத்திற்கு மேலே கொண்டு போகக் கூடாது.

எதிராளி பக்கத்துல இருக்கும் போது, ஆபத்து வர்ர மாதிரி ஆடக் கூடாது. ஆடவும் முயற்சி பண்ணக் கூடாது.


பந்தை உயரமா போற மாதிரி அடிக்கக் கூடாது. எதிராளி கோலோட கொக்கி போட்டு இழுக்கக் கூடாது. எதிராளி காலை தட்டி விடக் கூடாது.

எதிராளி மேல கோல படவே கூடாது இப்படி கடுமையான விதிமுறைகளை உருவாக்கி, கொடுமையா ஆடாம

தடுத்து வச்சிருக்குறதுனுல தான், வளைகோல் பந்தாட்டம் பார்க்க அருமையான ஆட்டமா இருக்குது. பண்பான ஆட்டமா இருக்குது.

இந்தியாவின் மானத்தைக் காப்பாத்தி வரும் இந்த விளையாட்டை, இந்தியாவின் தேசிய விளையாட்டுன்னு சொல்றுங்க... நீங்களும் தேசிய விளையாட்டை திறமையோட கத்துகிட்டு, நீங்க பிறந்த வீட்டுக்கும், வளர்ந்த நாட்டுக்கும் சேவை பண்ணனும்னு கேட்டுக்குறேன். ஏன்னு,

உங்க சேவை நாட்டுக்குத் தேவை. ஆமா!



# 5. சடுகுடு

உண்மையான உடற்பு வலிமை ஒருத்தருக்கு எவ்வளவு இருக்குதுன்னு தெரிஞ்சுக்குற சந்தர்ப்பத்தை குடுக்குது பாருங்க... அதனால தான்! இது ரொம்ப அருமையான ஆட்டம்.

ஆசிய விளையாட்டுக்கள்ல, கபாடிங்கற இந்த சடுகுடு ஆட்டத்தை ஆடிக்காட்டப் போறாங்க. அடுத்த ஆசிய விளையாட்டுங்கள்ல இதுவும் ஒரு ஆட்டமா இணைஞ்சு போனாலும் ஆச்சரியமே இல்லை.

ஏன்னா, 1936ம் வருஷம் ஜெர்மனியில, இந்த ஆட்டத்தைப் பார்த்த இட்லர்கூட அசந்தே போயிட்டாராம். அவ்வளவு திறமையுள்ள அற்புதமான ஆட்டம் இது.

இப்பல்லாம் இதை கபாடி கபாடின்னு சொல்றோம். ஆனா, தமிழ்நாட்டுல இதுக்கு சடுகுடுன்னு பேரு. ஆந்திராவுல பலீஞ் சப்பளம். குஜராத் மகாராஷ்டிரத்துல டுடு டு, குடு டுடுன்னு பேரு கேரளத்தில வண்டிகளின்னு சொன்னாங்க.

ஆனா, இதை எல்லாத்தையும் ஒன்னா சேர்த்து, கபாடிங்கற பேருல தான் ஆடனும்னு ஒரு முடிவு கட்டிட்டாங்க. இப்படி வந்ததுனாலதான், இந்த ஆட்டம் ஒரு முழுமையான ஆட்டமா வந்துருக்கு. இல்லேன்னா, கண்ட

கண்ட விதமா, கன்னுபின்னுன்னு ஆடி, இந்த ஆட்டத்தையே காணும அடிச்சிருப்பாங்க.

இதுக்கும் ஒரு காரணம் இருக்கு.

மகாராஷ்டிரத்துல இதுக்கு அந்த காலத்துப் பேரு குடுடுடே. அதுக்கு என்ன அர்த்தம்னு—ஒழுங்கற்ற கூட்டம்னு. அதாவது இஷ்டம் போல ஆடுறது... கூத்தடிக்குறது. குழப்பம் பண்றது. இப்படி இருந்த ஆட்டம், ஒரேமாதிரியா ஆடப்படாமெ மூனு விதமா ஆடப்பட்டது. யாருக்கு எது இஷ்டமோ அந்த மாதிரி ஆடுறது. அந்த மூனுவித ஆட்டத்தை நீங்களும் கேளுங்களேன்.

ரெண்டுகுழு ஆடுதுன்னு வச்சுக்குவோம். அதுல ஒருத்தன் அடிபட்டோ அல்லது பிடிபட்டோ அவுட் ஆயிடுறான். அவன் அவுட் ஆயிட்டதுனால, ஆட்டத்தை விட்டே வெளியே போயிடனும்னு அவசியமே இல்லை உள்ளே இருந்துகிட்டே மறுபடியும் மறுபடியும் ஆடலாம். ஆனா அவுட்டானதுக்கு 1 பாயிண்ட் உண்டு. இப்படி ஒரு ஆட்டம். இதுக்குப் பேர் அமரர் ஆட்டம். அதாவது சாகாவரம் பெற்ற ஆட்டம்.

அடுத்த முறை. ஒரு தடவை ஒருத்தன் அவுட்டாயிட்டா அவன் உடனே வெளியே போயிடனும். எதிர்க்குழுவுக்கு 1 பாயிண்ட் உண்டு. அப்படி வெளியே போயிட்டா, அந்த ஆட்டம் முடியுறவரைக்கும் அவன் ஆட்டத்துல வந்து கலந்துக்கவே முடியாது. அதுக்கு பேரு காமினி ஆட்டம்.

மூனுவது முறை ஆட்டத்துக்குப் பேரு சஞ்சீவினி ஆட்டம். ஒருத்தன் ஒரு தடவை அவுட்டாயிட்டா வெளியே வந்துடனும். எதிர்க்குழுக்கு 1 பாயிண்ட். ஆனா, எதிர்க்குழுவுல ஒருத்தன் அவுட் ஆயிட்டா, அதுக்குப் பதிலா ஏற்கனவே அவுட்டாகி, கோட்டுக்கு வெளியே உட்கார்ந்திருக்கிறவங்க

முன்னே அவுட்டான வரிசை முறைப்படியே உள்ளெ வந்து ஆடலாம்.

இப்படி இருந்த இந்த மூனு ஆட்ட முறைகளேயும் ஒன்னு சேர்த்துத்தான் கபாடி ஆட்டத்தைக் கொண்டு வந்திருக்காங்க. எப்ப ஆரம்பிச்சதுன்னு தெரியாத இந்த பழங்கால ஆட்டத்துக்கு. விதிமுறைகள் ஒழுங்கு முறைகள் எப்ப வந்ததுன்னு 1923ல் தான்.

இத்தனை காலமும் எப்படின்னாலும் பாடலாம், ஆடலாம், பிடிக்கலாம், மடக்கலாம்னு இருந்த ஒரு ஆட்டத்தை, ஒரு சட்டத் திட்டத்தோட, கட்டுப்பாட்டோட கொண்டு வந்ததே ஒரு பெரிய சாதனைதானே.

ஒரு குழுவுக்கு 7 பேர் ஆட்டக்காரருங்க, 5 பேர் மாற்றாட்டக்காரர்கள். ஆக, ஒரு குழுன்னா மொத்தம் 12 பேர்கள். ஆடுற நேரம் இருக்கே ஒரு Half க்கு 20 நிமிஷம். அந்த மாதிரி 2 Half. 40 நிமிஷம் மொத்தம். 5 நிமிஷம் இடைவேளை.

பாடிப்போற முறைதான் ரொம்ப முக்கியம். கபாடின்னு பாட ஆரம்பிச்சா, ஒரே மூச்சுல, தொடர்ந்து Continous ஆ, பாடிக்கிட்டே இருக்கனும். அப்படி இல்லேன்னா, பாடிப்போற வாய்ப்பு இல்லேன்னு போயிடும்.

சாதாரண சோம்பேறியோ. நோஞ்சானோ, பயந்த சுபாவம் உள்ளவங்களோ இந்த ஆட்டத்தை ஆடமுடியாது. நல்ல மனதைரியம், சாமர்த்தியமான சக்தியுள்ள உடம்பு, பின்வாங்காத தன்னம்பிக்கை, பெரிய ஆட்களையும் மடக்கிப் பிடித்து விடுகின்ற ராஜதந்திரம்; மூச்சைக் கட்டித் தம் பிடித்துப்பார்க்கின்ற ஆற்றல் இத்தனையும் இந்த ஆட்டத்துக்கு வேணும்.

நம்ம நாட்டுல மல்யுத்தம்ங்கறது ரொம்ப புகழ் வாய்ந்த சண்டை முறையாகும். காமா பயில்வான்னு உலகமே அறியும். தாராசிங்னு உங்களுக்குக் கூட தெரிஞ்சிருக்குமே, அந்த மல்யுத்தப் பயிற்சிக்கு, சடுகுடுதான் உதவியா அந்தக் காலத்துல இருந்ததாம்.

அதனால இந்த ஆட்டத்துல இருக்குற பிடிமுறைகள் பல முறையில இருக்கு. ஒரு காலை பிடிக்குறது. இரண்டு காலையும் பிடிச்சு இழுக்குறது. தொடையைப் பிடிச்சு ஆளையே தூக்கிடுறது. ஒரு கையைப் புடிச்சு ஆளைமடக்கிடுறது. இப்படி, பிடிபிடிச்சா அது கரடிப்பிடி, குரங்குப்புடி, முதலைப் புடி, உடும்புப்புடி இப்படி எத்தனையோ பேர் சொல்வாங்க.

அப்படி புடிக்குறதுக்கு உடம்புல தெம்பு இருந்தாதான் முடியும். தெம்பு இல்லாத ஆட்கள்தான் வீணு வம்பை வளர்ப்பாங்க... அதனாலதான். நல்ல உடல்ல நல்ல மனசு இருக்குன்னு சொல்வாங்க... நோயாளிங்க மனசுல வெறுப்பும், வேதனையும், எரிச்சலும்தான் ஏராளமா இருக்கும். A Sound mind in a sound body. நல்ல உடம்புலதான் நல்ல மனசு. நல்ல மணியில தான் நல்ல ஓசை. நல்ல ஆத்துலதான் நல்ல தண்ணி.

அதுபோலவே நல்ல சக்தி உள்ளவங்க தான், நல்ல பண்போடு ஆடுவாங்க. அதுக்கு சான்று இருக்குது இந்த கபாடி ஆட்டம். எதிரியை பிடிச்சு மடக்குற ஆட்டம்தான் இது. இருந்தாலும், கோபத்திலும் வேகத்திலும் கூட மத்தவங்கமேல வஞ்சம் தீர்த்துக்காம, பெருந்தன்மையோட ஆடுற ஆட்டம் இது.

அதாவது சத்திய சோதனை நிறைஞ்ச ஆட்டம். இது தமிழ் நாட்டுலதான் முதன் முதலா ஆரம்பிச்சதுங்கற ஆராய்ச்சி கூட இருக்குது. அதுவும் உண்மைதான்.


கபாடி ஆட்டத்துக்கு எந்த விதமான செலவும் இல்லே. கூட சேர்ந்து ஆடுறதுக்குப் பையன்கள். ஒரு வெட்ட வெளி மைதானம். இது போதும். இப்பெல்லாம் பெண்களும் கபாடி ஆடுறாங்க... அந்த அளவுக்கு இந்த ஆட்டம் மென்மையா போயிடுச்சு.

ஆட்டமோ மென்மை, ஆனா, ஆடுறதுக்கோ உடம்புக்கு வலிமை... எப்படி இருக்குது பார்த்தீங்களா?

நீங்க வாய்விட்டுப் பாடுறதுலெ, உங்களையறியாம நிறையா ஆக்சிஜனை உள்ளுக்கு இழுக்குறீங்க... அதனுல நல்ல இரத்த ஓட்டம். இப்படி எத்தனை எத்தனையோ நன்மை இருக்கு.

நீங்களும் ஆடிப்பாருங்க... ஆடிமகிழுங்க... இந்த வயசுல ஆடாம, எந்த வயசுல ஆடப்போறீங்க... சின்னக் குழந்தைகளுக்கு விளையாட்டுலதான் முதல் ஆசை. இதுக்கு காரோபணமோ வேண்டாமே!

இலவசமா கிடைக்குற இந்த இன்பத்தை நீங்க எந்தக் காலத்திலயும் ஆடி அனுபவிச்சு, சந்தோஷமா வாழணும் அதுதான் என் ஆசை.



# 6. கோ கோ ஆட்டம்

இந்தியாவில தோன்றிய இரண்டு விளையாட்டுக்கள் தான் சேர்ந்து ஆடக் கூடிய ஆட்டமா இருக்குது. ஒன்று சடுகுடு. இன்னொன்னு கோகோ ஆட்டம்.

இதை ரொம்ப பேர் Go Goன்னு சொல்றுங்க. இங்கிலீஷ் கேம்னு நினைச்சு இப்படி சொல்றுங்க....ஆனா இதுக்கு கோ கோன்னுதான் பேரு வச்சிருக்காங்க.

ஒக்காந்திருக்குற ஒருத்தரை எழுப்புறதுக்கு கூ கூன்னு சொல்றது பழக்கம் தான். ஆரம்ப காலத்துல, கூ கூன்னுதான் ஆளை எழுப்பி ஆடியிருக்குறுங்க. ஆனா, இப்ப அதை ரொம்ப நாகரிகமா, கோ கோன்னு சொல்றுங்க...

இந்த ஆட்டம் மகாபாரத காலத்துல இருந்து ஆடப்பட்டதா ஒரு வரலாறு இருக்குது. ஆனா, ஆதாரம் தான் சரியா இல்லேங்குறுங்க. எப்படி இருந்தாலும், இது நம்ம ஆட்டம். நம்ம நாட்டு ஆட்டம்.

இந்த ஆட்டத்துல என்ன விஷேஷம்னு, சாதாரணமா யாரும் சேர்ந்து ஆடிட முடியாது. ஆடக் கூடிய நேரம் மொத்தம் 28 நிமிஷம் தான். அதுக்குள்ளாற ஒரு ஆட்டக்காரர் நின்னு, ஓடி, உட்கார்ந்து எழக் கூடிய தூரம் சுமார் 5 மைல் தூரமாவது இருக்குமுன்னு கணக்கு போட்டிருக்காங்க...

அவ்வளவு தூரம் ஓடுறதுக்கு Stamina இல்லாம— முடியுமா? சடுகுடு ஆட்டத்துல தேவை ஆடுற சக்தின்னு கோ கோ ஆட்டத்துல ஓடுற சக்தி அதிகமா வேணும்.

இந்த ஆட்டத்துக்கு வரலாறு இல்லேன்னு உங்களுக்கும் தெரியும். அப்படிப்பட்ட பழங்கால ஆட்டத்தின் அருமையை தெரிஞ்சுகிட்ட பூனாவில இருந்த ஜிம்கானா சங்கம், 1914ம் ஆண்டுல தான் இதோட விதிமுறைகளை சீர்திருத்தி அமைச்சாங்க அதுக்கப்புறம் தான், அகில இந்திய அளவிலே, எல்லா மாநிலத்திலயும் இந்த ஆட்டம் பிரபலமடைய ஆரம்பிச்சது. இப்ப ஆசிய விளையாட்டுக்கள்லயும் காட்சிப் போட்டியா (Exibition Match) ஆடிக் காட்ட இருக்குறாங்க.

இந்த ஆட்டத்தை அதிகமா விரும்பி ஆடுறவங்க சிறுவர்களும் சிறுமிகளும் தான். ஒருத்தரை விரட்டுறது, அதில பிடிபடாம ஓடுறது. அதுவும் ஒரு குறிப்பிட்ட எல்லைக்குள்ளாற, ஒரு குறிப்பிட்ட நேரத்துக்குள்ளாற அவுட்டாகாமெ ஓடணும்னு - அதுக்கு சாமர்த்தியம் நிறைய வேணும்.

அதிலும், ஓடுறவங்க எல்லைக்குள்ளாற ஓடணும்னு, விரட்டுறவங்க இருக்காங்களே, அவங்களுக்கு கடுமையான ரூல்ஸ் நிறைய இருக்குது. இப்படி திரும்பக் கூடாது அப்படி பார்க்கக் கூடாது, நடுக் கோட்டை மிதிக்கக் கூடாது, குறுக்குக் கோட்டைத் தாண்டக் கூடாதுன்னு. எத்தனையோ கடுமையான விதிகள்.

இத்தனை சட்டங்களுக்கும் உட்பட்டு ஒருத்தரை தொட்டா தான் அவுட். இல்லேன்னு, போச்சு...

இப்படி விரட்டித் தொடுற ஆட்டத்துல, ஒரு குழுவுக்கு 9 பேர் இருந்து ஆடுறாங்க—ஒரு குழு விரட்டும். ஒரு குழு ஓடும். அது தான் ஆட்டமுறை.

ஓடுற குழுவிலயிருந்து 3, 3பேரா உள்ளே வந்து ஓட வருவாங்க... விரட்டுற குழுவில, 8 பேர், ஆடுகளத்துல உள்ள 8 கட்டங்கள்ல, திசை மாறி மாறிப் பார்க்கும் வகையில உட்கார்ந்திருப்பாங்க. ஒருத்தர் ஓடி விரட்டுற ஆட்டக்காரரா இருப்பாங்க.

ஓடுற குழுவில உள்ள 9 பேரையும் 7 நிமிஷத்துக்கு உள்ளே தொட்டுடனும். ஒருத்தரை தொட்டா 1 பாயிண்ட். 7 நிமிடத்துக்குள்ளே எத்தனை பேரை தொடுறாங்களோ அத்தனை பாயிண்ட்.

உட்கார்ந்திருந்து விரட்டுறவங்களுக்கு சில முக்கிய விதிகள் இருக்கு. அது உங்களுக்கும் ரொம்ப அவசியமா தெரியனும்.

உட்கார்ந்திருக்கறவருக்குப் பின்னால் போய் தான் கோ கொடுக்கனும். ஆனாத் தொடுறதும், கோன்னு சொல்றதும் ஒன்னு போலவே இருக்கனும்....உட்கார்ந்திருக்குறவர் கைய நீட்டுனா, அதைத் தொட்டுட்டு கோ சொல்லக் கூடாது. நேரா பார்த்துட்டா நேரா தான் ஓடி, அங்கே இருக்குற கம்பத்தைத் தொட்டுட்டு வரனும். தங்கள் பக்கத்துல ஓடுற ஓட்டக்காரர்களுக்கு இடைஞ்சல் இல்லாம, இடைஞ்சல் பண்ணாம உட்கார்ந்திருக்கனும்.

கோ கொடுத்தவங்க, எழுந்திருச்சு ஓடுறவுங்க இடத்துல உடனே உட்கார்ந்துடனும். 'ஓடி வந்தேன். கால் வலிக்குது, கொஞ்சநேரம் நிற்கறேன்' அப்படின்னு கேட்கக் கூடாது. அது Foul.

அதே மாதிரி ஓடுறவங்களும், உட்கார்ந்திருக்குறவங்க தலைமேல கையவக்கிறது, இடிச்சுட்டு ஓடுறது மாதிரி காரியமெல்லாம் பண்ணக் கூடாது.

முன்னெல்லாம் இந்த ஆட்டத்துல அவ்வளவு Speed இல்லே. Technique நுண்திறன்கள் வளருலே. இப்ப இந்த

ஆட்டத்துல இருக்கிற நுண்திறண்கள் வேற எதலயும்— இல்லேங்குற அளவுக்கு வளர்ந்திருக்கு.

உட்கார்ந்திருந்து எழுந்த உடனேயே வேகமா ஓடி விரட்டுறது; வேகமா ஓடிக்கிட்டு இருக்கும் போதே அடுத்த வங்களுக்கு கோ தர்ரதுக்காக உடனே நின்னு கோ தர்ரது. உடனே அப்படியே குந்துக்கால்ல உட்கார்ரது ஓடிக்கிட்டே இருக்கும்போதே அப்படியே தாவி விழுந்து தொடுறது (Diving). ஆமா— நெஞ்சு அடிபடும்தான். தண்ணியில குதிக்குற மாதிரி, தரையில தாவி விழுந்தா நெஞ்சு அடிபடும் தான்... ஆனு, அதை ரொம்ப லாவகமா செய்யறதுதான் அந்தத் திறமை.

கம்பத்திற்கு அப்பால நிற்குறவங்களை அப்படியே கம்பத் திலே கையை கோர்த்து. மின்னல் வேகத்துல பாஞ்சி தொடு றது இதுக்கு பேரு Pole Dive. இதுலயும் கம்பத்துல நெஞ்சு அடிபடும். முட்டிக்கால் கம்பத்துல மோதும். கையும் வலிக்கும். அதெல்லாம் எதுவும் நேரம செய்யற கலைதான் இப்ப கோகோ ஆட்டத்தின் சிறப்புக்கு காரணமா அமைஞ்சிருக்கு.

நிமிர்ந்து ஓடுறபோதே, ஓடுறவங்க காலை குனிஞ்சு தொடுற விதம் Tappingன்னு பேரு

இப்படி பல திறமைகள் இருக்கிற கோகோ ஆட்டத்தை ஆடுறவங்க, மிகுந்த பலசாலியா வர சான்ஸ் நிறைய உண்டு. ஏன்னு, இந்த ஆட்டத்தை Stamina உள்ளவங்கதான் ஆட முடியும். ஆடனும்.

சாதாரண பொழுது போக்குக்காக ஆடனும்னு, இதை விட அற்புதமான விளையாட்டு வேற எதுவுமே இல்லே.

பழங்காலத்துல, எதிரிங்க சேனைகள் இடையில ரதத்துல புகுந்து சண்டை போட்டுட்டு வர்ர முறையை ரதோடான்னு

சொல்வாங்க. அந்த மாதிரி, எதிரிங்க இடையில புகுந்து புகுந்து ஓடி, தப்பிச்சு வர்ர தைரியம், சகசம், மனசுக்கு ரொம்ப இன்பமா இருக்கும்.


சின்னக் குழந்தைங்க சேர்ந்து ஆடுறதுக்கும், சிரிச்சு மகிழ்றதுக்கும் சிறந்த ஆட்டம் இது.

இந்த ஆட்டம் இல்லாத பள்ளிக் கூடமும் இல்லே பள்ளிக்கூட போட்டிகளும் இல்லே. குடியரசு தினப் போட்டிகள்ல போட்டியிடுற ஒரு ஆட்டமா மாநில அளவில வந்திருக்குது.

அகில இந்திய அளவிலே 4 வித சிறப்புப் பரிசுகள் தர்ராங்க.

ஆண்களில் சிறந்த ஆட்டக்காரருக்கு — ஏகலைவன் விருது. பெண்களில் சிறந்த ஆட்டக்காரருக்கு — மகாலட்சுமி விருது. சிறுவர்களில் சிறந்த ஆட்டக்காரருக்கு — வீர அபிமன்யு விருது. சிறுமிகளில் சிறந்த ஆட்டக்காரருக்கு — ஜான்சிராணி விருது.

நீங்களும் இந்த விருதுகளில் ஒன்னை வாங்கணும், பெருமை பெறணும்னு நான் எதிர்பார்க்கிறேன். தன்னம்பிக்கையுள்ள நீங்க, தாராளமா முயற்சி பண்ணணும்னு உங்களை எல்லாம் கேட்டுக்குறேன். நிச்சயமா என் ஆசை நிறைவேறும்னு நம்பிக்கை இருக்கு.



# 7. டென்னி காய்ட்

சின்னவங்க பெரியவங்கன்னு வித்தியாசம் இல்லாம; ஆண் பெண்ணுங்கற பாகுபாடு இல்லாம, எல்லாருமே ஈசியா ஆடுற ஆட்டம் ஒன்னு இருக்குறதுன்னு, அதுதான் டென்னி காய்ட் ஆட்டம்.

பேரைப் பார்த்தீங்களா......டென்னி கோய்ட்ன்னு. அப்படின்னு, இந்த பேரு ரெண்டு ஆட்டத்துக்கு உள்ள பேரு மாதிரி இருக்குதுல்லே....நல்லா கவனிங்க... டென்னிகோயட்..

ஆமாம்! டென்னிஸ்ங்கற ஆட்டமும். கோயட்ங்கற ஆட்டமும் ரெண்டு ஒன்னு சேர்ந்த ஆட்டம்தான், இப்படி டென்னிகோயட்டா வந்துடுச்சு. ரொம்ப ஆச்சரியமா இல்லே. ஆமாம். ரொம்ப சுவாரசியமான கதைதான் இது.

எல்லா விளையாட்டும் தரைமேலே புறந்ததுன்னு, இது தண்ணீர் மேலே புறந்துச்சு. அந்த அளவுக்கு புதுமையான பொறப்புதான்.

இந்த கோயட்ஸ்ங்கற ஆட்டம்...கைக்கு அடக்கமான ஒரு 9 பவுண்டு இரும்புத் தட்டைத் தூக்கி, 4 அடி தூரத்துக்கு அப்பால் உள்ள ஆணியில போய் மாட்டிக்கிற மாதிரி தூக்கி எறிடணும். பக்கத்துல விழுந்தா 5 பாயிண்ட், எட்டமா விழுந்தா ஒரு பாயிண்ட்.

இந்த கோயட்ஸ்ங்கற இங்கிலாந்து ஆட்டம், குதிரை லாடத்தைத் தூக்கியெறிஞ்சு விளையாடுற அமெரிக்க ஆட்டத்துலெ இருந்து வந்தது. இந்த குதிரைலாட ஆட்டம், இரும்புத்தட்டுத் தூக்கியெறியுற கிரெக்க நாட்டு ஆட்டத்துல யிருந்து வந்தது.

இப்படி மாறி மாறி வந்து. கோயட்ஸ் ஆன ஆட்டத்தை இங்கிலாந்து நாட்டு மக்கள், சின்னவங்க பெரியவங்க எல்லோருமே விரும்பி ஆடுனாங்க, வேடிக்கை பார்த்தாங்க.

அந்த காலத்துல கடல் பிரயாணம் தான் முக்கியமான பிரயாணமா இருந்தது, கப்பல்ல ஏறிட்டா ஒரு மாசம் உமாசம் கூட ஆகுமாம். அப்படி மாசக்கணக்கா பிரயாணம் செஞ்சா போரடிக்காதா? எத்தனையோ விதமான பொழுதுபோக்கு விளையாட்டுக்கள் இருந்தாலும், புதுசா ஒன்னு வேணும்னு ஆசைபட்டாங்க...பயணிகள் ஆசைபட்டுட்டா, பதவியில உள்ளவங்க செஞ்சி ஆகனுமே!

கோயட்ஸ் ஆட்டத்தை ஆடனும்னு பயணிகள் குதிக்க ஆரம்பிச்சாங்க...ஒ பவுண்டு இரும்புத்தட்டை தூக்கிபோட்டு கீழே விழுந்தா மரத்தாலான கப்பல்தரை என்ன ஆகும்? அதுக்குப் பயந்துகிட்டு, இரும்பு வளையத்தட்டை மாத்திட்டு, ரப்பரால் ஆன வளையத்தை போட்டு ஆடச் சொன்னுங்க...

ரப்பர் என்ன ஆகும்? கீழே விழுந்தா, ரொம்பதூரம் ஓடும் இல்லேன்னா, கடலுக்குள்ளேயும் விழுந்துடும். அதுக்காக, விழுந்தா விழுந்த இடத்துலேயே கிடக்குற மாதிரி, ஐடியா பண்ணி, கயிற்றுலே வளையம் பண்ணி ஆட வச்சாங்க....

வளையம் வந்தாச்சு...அதை ஒரு Gameன்னு எப்படி ஆடுறது? அந்தக் காலத்துல டென்னிஸ் ஆட்டம் தான் ரொம்ப பிரபலமா இருந்தது. அதனுல டென்னிஸ் ஆட்டத்துல உள்ள கோர்ட், பந்தெறியுற முறை, அங்கங்கே

'தின்னு ஆடுற விதம் எல்லாத்தையும் எடுத்துகிட்டாங்க. வளையத்தை மட்டும் தூக்கி எறியுற முறையை இதிலயிருந்து எடுத்துகிட்டாங்க.

இந்த இரண்டையும் சேர்த்து ஒரு புதிய ஆட்டமா Mix பண்ணுறாங்க. முதல்ல கப்பல்ல ஆடுறதுனால, இதுக்கு டெக் டென்னிஸ்னு பேர் வச்சாங்க....

அப்புறம் வளையத்தை வச்சி ஆடுனதுனால, Ring Tennisனு பேரை மாத்துனாங்க. அதுக்குப் பிறகு, 2 ஆட்டமும் உண்மையாவே ஒன்னு சேர்ந்து, ஒரு புதிய ஆட்டமா வந்திருச்சுங்கற பெருமையில, டென்னிஸ்ல உள்ள டென்னி கொயட்ஸ்ல உள்ள கொயட் என்ற இரண்டையும் சேர்த்து டென்னி கொயட்டா மாத்திட்டாங்க. நாம அதை, வளையப் பந்தாட்டம்னு தமிழில சொல்றோம்.

வளையப் பந்தாட்டம் ஆடுற இடத்தின் அளவு 40 அடி நீளம். 18 அடி அகலம். அதுல ஒற்றையர் ஆட்டமும் ஆடலாம். இரட்டையர் ஆட்டமும் ஆடலாம்.

வளையத்தோட விட்டம் 7 அங்குலம். அதன் பருமன் 1¼ அங்குலம். எடை வந்து 7 அவுன்சு முதல் 8 அவுன்சு வரையில இருக்கணும்.

ஆடும் போது, வலையின் உயரம் 6 அடியா இருக்கணும்.

இந்த ஆட்டம் எப்போ ஆரம்பிச்சதோ அப்ப ஆரம்பிச்ச விதிமுறைகள் படித்தான் நாம இன்னும் ஆடிக்கிட்டிருக்கிறோம். அகில இந்திய அளவில புதுசா விதிகள் மாறியிருந்தாலும், யாரும் அதை கேர் பண்ணுலே. ஏன்னா, அந்த ஆட்டம் அந்த முறையில ஆடுறதுக்கு ரொம்ப ஈசியா இருந்ததுனால தான்.

ஒரு குழு வெற்றி பெற 15 பாயிண்ட்ஸ் வேணும். அதாவது கைப்பந்தாட்டத்தில உள்ள ரூல்ஸ் மாதிரி

ஆனு, இப்பொ உள்ள ரூல்ஸ், மேசைப்பந்தாட்டம் வச்சிருக்கிற முறை மாதிரி. 20 பாயின்ட்ஸ் வேணும். ஒருத்தரே தொடர்ந்து 5 முறை சர்வீஸ் போடனும். யார் தப்பு பண்ணிஞலும், மத்தவங்களுக்கு பாயின்ட்ஸ் போயிட னும். அந்த மாதிரி பாயின்ட் முறை மாறி வந்திருக்கு.

முன்னெல்லாம் சர்வீஸ் மட்டுந்தான் நேரா போடனும். மத்தபடி, வளையத்தை Wobble பண்ணி சுழல வச்சி போட்டு ஆடலாம்னு ரூல் இருந்துச்சு. இப்ப அது மாறிப் போச்சு. சர்வீஸ் போடுற மாதிரி தான், எப்பவும் வளையத்தை எறியனும். கொஞ்சம் வளையம் Wobble ஆனு கூட, அது Faultன்னு சொல்லிடுருங்க.

இந்த மாதிரி வர்ர புது ரூல்சையெல்லாம் நீங்க கட்டாயமா Follow பண்ணுறை தான், ஆட்டத்தில உள்ள ஆர்வம் போலவே முன்னுக்கு வர முடியும்.

சில முக்கியமான விதிகளை மட்டும் இப்ப சொல்றேன்.

ஒரு கையால தான் வளையத்தை பிடிக்கனும். பிடிச்ச கையால தான் வளையத்தை மறுபக்கத்துக்கு எறியனும். இஷ்டப்படி, வேற கைக்கு மாத்த முடியாது. எந்த இடத்துல நின்னு வளையத்தை புடிச்சிங்களோ, அந்த இடத்துல இருந்து தான் வளையத்தை எறியனும். கையில வளையத்தை பிடிச்சு 1 விஞடிக்கு மேல வச்சிருக்கக் கூடாது. உடனே எறிஞ்சுட னும். அப்புறம், தோளுயரத்துக்கு மேலே கையை கொண்டு போய் வளையத்தை எறியக் கூடாது.


சர்வீஸ் போடும் போது கடைக் கோட்டை மிதிக்கக் கூடாது. வாபுல் பண்ணி போடக் கூடாது. வளையம் எந்த

இடத்துல விழுந்ததோ, அது தான் சரியான இடம். ஓடிப் போய் கடைசியா நிற்குற இடம் இல்லே.

இந்த மாதிரி நிறைய, விதிமுறைகள் இருக்குது. நீங்க புத்தகத்துல படிக்கணும். தெரிஞ்சவங்க கிட்ட விளக்கம் கேட்கணும். நிறைய பயிற்சி செய்யணும். விடாம ஆடிப் பார்க்கணும்.

சின்ன வயசுல கத்துக்கற கலைகள் தான், பெரியவங்க ஆன பிறகு பிரயோஜனப்படும். சின்ன வயசுல சோம்பேறி-பெரிய ஆளா ஆன பிறகு பிச்சைக்காரனா இருப்பான்னு குறது பழமொழி. பசு மரத்துல ஆணி பதியுற மாதிரி, எல்லா திறமைகளும் ஈசியா விளையிற சின்ன வயசை, நீங்க பயன்படுத்தி, நிறைய கத்துக்கணும். பயனுள்ள வாழ்வு வாழணும். சமுதாயத்துக்கும் பயன்படணும்.

என்ன! கத்துக்கிறீங்களா! OK.



# 8. கிரிக்கெட் ஆட்டம்

பஞ்ச பாண்டவர்கள்ல பீமன்னு சொன்ன, சாப்பாட்டு ராமன், குண்டோதரன், நல்லா சண்டை போடுவான்னு தான் நீங்க சொல்வீங்க... அவன் எல்லா விளையாட்டிலயும் கெட்டிக்காரனா இருந்ததா மகாபாரதம் படிக்கும் போதுதான் புரியுது. கிட்டிப் புள்ளுன்னு ஒரு ஆட்டம். அதுல ஒரு பெரிய கம்பு 3 அங்குலம் அல்லது 4 அங்குல நீளம் உள்ள சின்ன துண்டு குச்சி பெரிய கம்பால சின்ன குச்சியை அவன் அடிச்சா, அது போய் எங்கே விழுதுன்னே. கண்டுபிடிக்க முடியாதபடி, அவன் அடிப்பானாம்...

பீமன் கதை எதுக்கு இங்கே வந்துச்சுன்னு கேட்குறீங்களா? இந்தக் கிட்டிப்புள் மாதிரி தான் கிரிக்கெட் ஆட்டமும் இருக்குதுன்னு எல்லாரும் சொல்றாங்க. நம்ம ஆட்கள் அப்படியே விட்டுட்டாங்க... மேல் நாட்டு ஆட்கள். எதையும் மெருகேப் படுத்தி முன்னுக்குக் கொண்டு வந்துடுறவங்க. அதனால தான், எல்லா விளையாட்டும இங்கிலாந்து இல்லாட்டி அமெரிக்க நாடு-ரெண்டுல ஒரு நாட்டிலயிருந்து உற்பத்தியாகி வருது.

இந்த கிரிக்கெட் இருக்குதே... இதுல போட்டி அதாவது Test Match நடக்குதுன்னா, பட்டி தொட்டி யெல்லாம் ஒரே பரபரப்பு. பத்திரிக்கை எல்லாத்திலேயும் பத்திபத்தியா

விமரிசனம். கொட்டை எழுத்துல தலையங்கம். வானொலியில நேர் முக ஒலிபரப்பு. டிவியில நாள் பூரா காட்டுறாங்க— அந்த அளவுக்கு கிரிக்கெட்டுக்கு புகழ் இருக்குது.

ஒரு ஆட்டக்காரர் அவரை அறியாமலே நல்லா ஆடிட்டாருன்னு, அவர் ஒரே நாளில உலகப் புகழை அடைஞ்சிடுறாரு. சரித்திரத்துல சாகா வரம் பெற்றிடுறாரு. அப்படி என்ன இந்த ஆட்டத்துல அற்புதம் இருக்குது? நாம மட்டும் கேட்குல! உலகமே கேட்குது! ஆனா பதில் தான் சரியா வரமாட்டேங்குது.

கிரிக்கெட் ஆட்டத்தின் சரித்திரமே கி.பி. 1550ல் இருந்து தான் ஆரம்பமாகுது. அதன் அதிர்ஷ்டத்தைப் பாருங்க... வீல்டுங்கற கிராமத்து ஏழை மக்கள் ஆடிக் கிட்டிருந்த இந்த ஆட்டத்தை, பணக்கார பிரபுக்கள் கொண்டு போய் லண்டன்ல விட்டுட்டாங்க... அது கொஞ்ச நாள்ல அரண்மனைக்கே போயிடுச்சு. ராஜாவே ஆட ஆரம்பிச் சுட்டா, பொது மக்கள் சும்மா இருப்பாங்களா...

ஒரு தடவை பிரெடரிக் என்கிற ராஜா, கிரிக்கெட் பந்தாடிக்கிட்டு இருக்குறப்ப, காலல பட்டுடுச்சு. அந்த நிகழ்ச்சிக்குப் பிறகு, அவர் இறந்து போயிட்டாரு. கிரிக்கெட் ஆடினதுனால தான், மன்னர் மாண்டு போனாருன்னு மக்கள் நினைச்சாங்க... ஆனா, அவர் மகன் மூன்றும் ஜார்ஜ் அப்படி நினைக்கல... அதுக்கு மாறு, அவர் கிரிக்கெட் வளர்றதுக்கு நிறைய உதவி பண்ணுனாரு.

இதை ஏன் சொல்றேன்னு, கிரிக்கெட் ஆட்டம் Gentle man's Gameன்னு பேர் பெற்ற காலம் அது. Honest member's Society அதாவது சிறந்த குடிப் பிறந்தவர்கள் ஆடுகின்ற ஆட்டம்னு கருதப்பட்டது தான் முக்கிய காரணம்.

இங்கிலாந்து நாட்டு விதிகளுக்கு இருந்த முக்கியம் கிரிக்கெட் ஆட்டத்து விதிகளுக்கும் இருந்ததுன்னு நீங்களே புரிஞ்சுக்கங்க !

இங்கிலாந்து நாடு ஏறத்தாழ, உலகம் பூராவையும் தன்னோட ஆட்சிக்குக் கீழே கொண்டு வந்ததன்னு சொல்வாங்க... அப்படி தாங்கள் ஆட்சி செய்த நாடுகள் அத்தனையிலும், இந்த கிரிக்கெட் ஆட்டத்தையும் கொண்டு போய் புகுத்திட்டாங்க.

இப்ப கிரிக்கெட் ஆடற நாடுகள்ல முக்கியமானவை இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, நியூசிலாந்து, இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, தென் ஆப்பிரிக்கா நாடுகள் இந்த காமன் வெல்த் கேம்ஸ்னு கொண்டாடுறாங்களே, அதே மாதிரி தான் கிரிக்கெட் ஆட்டமும் ஆடப்பட்டு வருது. இதுக்கு பேரு Test match என்பதாகும்

கிரிகெட் ஆட்டம் ஒரே நாள்ல உண்டானது அல்ல. கொஞ்சங் கொஞ்சமா வளர்ந்ததாகும். அப்படி வளர்ந்ததுல என்ன லாபம்னு, ஆரம்பிச்ச நாள்லயிருந்து எல்லாம் ரெக்கார்டு ஆயிருக்கு. எந்த சாதனை, எந்தக்குறிப்பு எப்படி வேண்டுமானாலும் தர்ரதுக்கு தயாரா இருக்குற வசதியான அமைப்பு தான் கிரிக்கெட் கூட்டம்.

ராஜபரம்பரைதான் ஆடமுடியும், பணக்காரங்கதான் பங்கு பெறமுடியும், வசதியுள்ளவங்க தான் இதைபார்த்து ரசிக்க முடியும் ஆங்கிலம் தெரிந்தவர்கள் தான் இதை புரிஞ்சுக்க முடியும் கற காலம் மலையேறிப் போயிடுச்சு.

சாதாரண குடிமகன் கிட்டே அதாவது, பட்டி தொட்டி மட்டுமல்ல படிப்பு வாசனையே இல்லாதவங்ககூட கிரிக்கெட்டை பத்தி விமர்சிக்குற அளவுக்கு வந்துட்டாங்க, அதுதான் கிரிக்கெட் ஆட்டத்தின் பெருமை.

நூறுமைல் வேகத்துல ஒருத்தர் வீசி எறியுற பந்தை, பயப்படாம வேகமா அடிச்சி விரட்டிட்டு, அதுல நாலுரன்னு எடுக்குறது எவ்வளவு கஷ்டம் ?

வேகாத வெயில்ல நின்னு ஆடனும்ன்னு எத்தனை சகிப்புத் தன்மை ? ரொம்ப நேரம் நின்னு நிதானிச்சு ஆட வேண்டிய பொறுமை, நிதானம், தன்னம்பிக்கை, அடிபடாமல் ஆடக் கூடிய பத்திரமான குணம், நின்னு ஆடக்கூடிய உடல்வலிமை மன வலிமை, Stamina Strength. எல்லாம் இருந்தாதான், கிரிக்கெட் ஆட்டத்துல Shine பண்ணமுடியும்.

பொறுமை இல்லாதவங்க, திறமைய வளர்த்துக்க முடியாது. ஏத்துக்கத் தயாரா இருக்குறவங்கதான், எதையுமே கத்துக்க முடியும். யோசிச்சுப் பா க்க முடியும். செயல்ல ஈடுபட முடியும். சமத்தா வெற்றி பெறவும் முடியும்.

வெறும் பேச்சு நேரத்தை வீணாக்கும், மனசை பாழாக்கும். எண்ணத்தை இஷ்டப்படி அலைய விட்டுடும். அதனால தான், சோம்பேறியின் மூளை சைத்தானின் தொழிற் சாலைன்னு சொல்றாங்க. நீங்க விளையாடனும் ஒஞ்சிருக்காம விளையாடனும்.

அதிக நேரம் ஆடக்கூடிய ஆட்டம்தான கிரிக்கெட். இப்ப ஐந்து நாட்கள் டெஸ்ட் மேட்ச்ங்கறாங்க. ஒரு சமயம் இரண்டு நாடுகள் 9 நாட்கள் ஆடியும்கூட வெற்றி தோல்வியில்லாம முடிஞ்சு போச்சாம். அந்த மாதிரி நிலைமை கிரிக்கெட் ஆட்டத்துல நிறையா உண்டு.

விளையாட்டை விளையாட்டுக்காகவே ஆடுங்க. வெற்றி தோல்வியை எதிர்பார்த்து ஆடாதீங்கன்னு சொல்வாங்க. இந்தஆட்டத்துக்கு இதுஎவ்வளவு பொருந்துது பார்த்தீங்களா.

கிரிக்கெட் ஆட்டம் ஏழைக்கும் கிடைக்கும். பணக் காரங்களுக்குப் நிறைய இன்பத்தைக் கொடுக்கும். இது சமதர்மம் நிறைந்தசாமர்த்தியமான ஆட்டம்.

கிரிக்கெட் பந்தின் கனம் $5\frac{1}{2}$ அவுன்சுக்கு குறையாமல் $5\frac{3}{4}$ அவுன்சுக்கு அதிகம் இல்லாமல், சிவப்பு நிறத்தில் இருக்கனும்.

மட்டையின் நீளம் 28 அங்குலத்துக்கு மிகாமல் இருக்கனும். பந்தை அடிக்குற பகுதியின் அகலம் $4\frac{1}{4}$ அங்குலம் தான் இருக்கனும்.

மட்டையின் எடை 2 பவுண்டு 10 அவுன்சுக்குமேலே போகக்கூடாது.

விக்கெட்டுன்னு இருக்குதே அதன் உயரம் தரையிலிருந்து 28 அங்குலம். அதன் அகலம் 9 அங்குலம்.

இரண்டு விக்கெட்டுக்கும் இடையிலுள்ள தூரம் 22கெஜம். ஒரு ஓவர்னு சொன்னா, 8 முறை பந்தை வீசி எறியறதாகும்.

ஒரு போட்டியில 75 ஓவர் போட்டுட்டா, புதுப்பந்து எடுத்து ஆடலாம். ஒரு குழுவிற்கு 11 பேர் இருந்து ஆடனும்.

இனிமே நீங்களே ஒரு முடிவுக்கு வரனும். எந்த விளையாட்டுல ஒங்களுக்கு ஆர்வம் இருக்குதோ, அதுல நீங்க ஈடுபாடு காட்டனும். அதையே முழுமூச்சா பழகனும். பயிற்சி தான் பக்குவத்தை கொடுக்குது! பக்குவமா வாழுவோம். அதுதான் பகுத்தறிவுள்ள மனிதர்க்கு அழகு!



# 9. விளையாடி உயர்வோம்!

கடந்த 8 வாரமா, ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும் ஒங்களை சந்திச்சு, விளையாட்டைப் பத்திப் பேசிக்கிட்டிருந்தது என் மனசுக்கு ரொம்ப மகிழ்ச்சியா இருக்குது. விளையாட்டைப் பத்தி யாரு, யார்கிட்டே பேசினாலும் இன்பமாதான் இருக்கும்.

ஏன்னா, இயற்கைக்கு அடுத்தபடி, எல்லார் மனசுலயும் நிறைஞ்சி நிற்குறது விளையாட்டுதான்

'விளையாட்டுன்னா, ஏதோ தமாஷ்-அதுல ஒன்னும் இல்லே! வெட்டியா கும்பலை சேக்குறது. வீணா பொழுதை போக்கறது, விவஸ்தையில்லாம அரட்டை அடிக்கறதுன்னு' தான் ரொம்ப பேர் நினைக்குறாங்க, பேசுறாங்க, எதிர்க்கவும் செய்யுறாங்க....—

அது அவங்க மேல தப்பு இல்லே... விளையாட்டைபத்தி அவங்க சரியா புரிஞ்சுக்காம இருக்குறாங்க —... அதுதான் காரணம்

எந்தப் பொருளும் இலவசமா கிடைச்சா, அதுக்கு அவ்வளவா மரியாதை கிடைக்காது. தண்ணி, நெருப்பு. காத்து, மண், எல்லாமே காசு குடுத்து வாங்கும் போதுதான் அதோட பெருமை புரியுது. கிடைக்காம இருக்கும்போது தான் அதோட மவுசு விளங்குது.

அதே மாதிரி விளையாட்டு, உடற்பயிற்சி எல்லாம் இலவசமா வந்து அவங்க வீட்டு வாசல்ல வந்து காத்துக்கிட்டு நின்னாலும், அதை ஏனனமா எண்ணத்தான் மனசு வருதே ஒழிய, ஏத்துக்க இன்னும் ஆயத்தமாகலே.

20ரூ 30ரூ Fees கொடுத்து டாக்டர் கிட்டே போயி, அவரு டெஸ்ட் பண்ணிட்டு, நீங்க உடற்பயிற்சி செஞ்சாதான் வியாதி போகும், உடம்பு உருப்படும்னு சொன்னதுக்கு அப்புறம் தான் விளையாட்டோட அருமை புரியுது.

அப்படி என்ன இந்த விளையாட்டுல இருக்குதுன்னு ஒங்களுக்கும் கேட்கத் தோணுது அல்லவா! சொல்றேன். இன்னைக்கு கட்டாயமா சொல்லிடுறேன்.

இந்த உலகத்துல எத்தனை சைன்ஸ் இருக்கோ, அத்தனை சைன்ஸும் ஒன்னு சேர்ந்த ஒரு பெரிய சைன்ஸ் தான் விளையாட்டு... என்ன அப்படி பார்க்குறீங்க... அது தான் உண்மை. புரியலியா... விளையாட்டங்கறது ஒரு பெரிய Scienceன்னு, அறிவியல்னு சொல்றேன்.

Physiology, Anatomy, Biology, Physics, Chemistry, Psychology, Sociology, Philosopiy, Zoology, Geography, அப்படின்னு இருக்கிற சைன்ஸ்கள்ல உள்ள முக்கிய தத்துவம் எல்லாம், மனுஷரோட வாழ்க்கைத் தரம் உயர்ரதுக்கு தானே!

அத்தனை சைன்ஸ்ல உள்ள முக்கிய பாயின்ட்ஸ்களும் இந்த விளையாட்டுக்குள்ளே இருந்து, மனுஷரை முன்னேற்ற உதவுது. இந்த ஒரு கருத்தை நீங்க புரிஞ்சுகிட்டா போதும்.

விளையாட்டு மனுஷரை கெடுக்க வரலே... உடம்பை வளர்க்க, மனசை உறுதிப்படுத்த நல்ல வாழ்க்கைய வாழ உதவி செய்ய வருது. அவ்வளவுதான்.

பால்ல ஒரு மாதிரி வாசம் வரும். எனக்கு அது வேண்டாம்னு யாராவது சொன்னா, அவங்க மேல தான் தப்பே தவிர, பாலுக்கு எந்தவித அவமானமும் இல்லே.

இப்ப பாருங்க... ஒரு சின்ன உதாரணம் சொல்றேன். தோன்றிற் புகழோடு தோன்றுக அஃதிலார் தோன்றலிற் தோன்றாமை நன்றுன்னு வள்ளுவர் பாடியிருக்கிறார்.

புகழ் இல்லாம இந்த உலகத்துல என்ன வாழ்க்கை வேண்டியிருக்கு? வானத்துல எத்தனையோ நட்சத்திரம் இருக்கு. எத்தனை நட்சத்திரத்துக்கு பேரு இருக்கு? கடல்ல எத்தனையோ கோடி மீன்கள் இருக்கு... அதுல எத்தனை மீன்களுக்குப் பேர் இருக்கு?

அதுபோல, கோடி கோடியா வாழற மக்கள் கூட்டம் இந்த உலகத்துல இருக்கு. எத்தனை மனுஷரோடு பேர்கள் நமக்கு தெரியும்? புகழுங்கறது அப்படித்தான்.

நீங்க கவிஞரா போகலாம், அறிஞரா ஆகலாம்... அரசியல்ல சேரலாம்... விஞ்ஞானி, டாக்டர் — இஞ்சினியர் இப்படி எந்தத்துறைக்குப் போனாலும், அதெல்லாம் குறிப்பா ஒரு 40 வயசுக்கு அப்புறம்தான் புகழைக் கொடுக்கும். ஏதோ ஒரு சிலர் மட்டும் சின்ன வயசுலயே புகழ்பெத்தவாங்களா வந்துடலாம்...

ஆனா, இந்த விளையாட்டு இருக்கே.. எட்டுவயசுல இருந்து 80 வயது வரைக்கும் புகழ்தரக்கூடிய பொற்றாமரை மன்றம்னா அதுதான் உண்மை...

பால்வடியுற முகம் — பச்சைக்குழந்தைன்னு நாம படுக்கையில போட்டு போர்த்திவிட்டுகிட்டே இருக்குறோம். அந்த எட்டு வயசுல, அகில உலக மேசைப்பந்தாட்ட சேம்பியனா ஒரு பொண்ணு வர்ரா...

பதிமூனு வயசுல, நீச்சல்ல First வந்து, ஒலிம்பிக் பந்தயத்துல தங்கப் பதக்கம் வாங்குரு.

பதினாலு வயசுல 5 தங்கப் பதக்கங்கள் நாடியா கொமனெசி ருமேனியா சிறுமி. ஜிம்னாஸ்டிக்ல வாங்குரு...

ஏழு தங்கப் பதக்கத்தை நீச்சல்ல வாங்குற Mark spitz...

இவங்கள்ளாம் சின்ன வயசுலியே உலகப்புகழ் பெற்றவங்க... காரணம்—விளையாட்டுல நான் அப்படி புகழ்வாங்க முடியும்.

ராய் எவ்ரிங்கறவர். பக்கவாத ஜன்னியில் ரெண்டு காலும் செயல்படாம போயி, படுக்கையிலயே கிடந்தவர். அவர் உடற்பயிற்சி பண்ணுனதுனால... காலக்கத் தெம்பு வந்துருச்சு... நின்ன இடத்துலேயிருந்து 5 அடி 5 அங்குலம் தாண்டி, மனிதத்தவளை ன்னு பட்டப் பேரு வாங்கிருரு. உலகத்திலேயே அவருதான் 10 தங்கப் பதக்கம் வாங்குனவரு.

அதேமாதிரி, சாப்பாட்டுக்கே வழி இல்லாம, உருளைக் கிழங்கு தோலை சாப்பிட்டு உயிர் வாழ்ந்தவர். வேலை கிடைக்காம, இராத்திரியில ஒரு கம்பெனியில Lift operator ஆக வேலை செஞ்சவரு. அப்படியிருந்த போதும் தினம் ஓடிப்பழகி கடைசியில ஒலிம்பிக் போட்டியில 4 தங்கப் பதக்கம் வாங்கினுரு. அவர் பேரு ஜெசி ஓவன்ஸ்.

ஒலிம்பிக் பந்தயங்கள்ல தங்கப் பதக்கம் வாங்கி உலகப்புகழ் பெற்றவங்க எல்லாம், பணக்காரகுடும்பத்துல இருந்து வரலே... ரொம்ப ரொம்ப ஏழைக் குடும்பத்துல

புறந்தவங்க... பெரிய குடும்பம் அதாவது 30, 40 குழந்தைங்க... அந்தக் குடும்பத்துலயிருந்து வந்தவங்க.... கஷ்டப்பட்ட குடும்பத்துலயிருந்து வந்தவங்க ...சின்ன வயசுல நோயில கஷ்டப்பட்டு எழுந்தவங்க... ஜீவிக்கவே ரொம்ப கஷ்டப்பட்டவங்க... இப்படி கஷ்டப்பட்டவங்க எல்லாத்துக்கும் கைகொடுத்தது மட்டுமல்ல, வாழ்க்கையை கொடுத்து, வரலாற்றுல உயர்ந்த புகழை கொடுத்தது விளையாட்டுங்கதான்.

விளையாட்டுக்காக நீங்க எந்த செலவுமே பண்ணவேணும்! உங்களோட உண்மையான உழைப்பு, நேரத்துக்கு நிறைஞ்ச பயிற்சி, கட்டுப்பாடான வாழ்க்கை, சந்தோஷமான வாழ்க்கை முறை, அறுந்து போகாத முயற்சி, தன்னம்பிக்கை, மனசைக் கெடுக்காத நல்ல Friends. இது இருந்தா போதும்.

நீங்களும் ஒலிம்பிக் வீரராகலாம். உயர்ந்த புகழைப் பெறலாம். உலக வரலாற்றுல நிச்சயம் நல்ல இடத்தையும் அடையலாம்.


இதுக்கெல்லாம் உரிய வயது என்ன தெரியுமா? உங்க வயதுதான். இதை கேட்கிற நீங்க, கேட்டுட்டு ஆமாம் போடாம, இன்னையிலேயிருந்தே விளையாட்டுல கவனம் செலுத்தனும்.

என்னுல வெற்றி பெற முடியாதுன்னு நினைச்சா... அதைப்பத்தி கவலையே வேணும்... வெற்றி வராட்டியும், பரவாயில்லே! வளமான தேகம் உங்களுக்கு கிடைக்குதே... அதுவே உங்க எதிர்காலத்துல உங்களுக்கு நல்லா உதவி, முன்னேற வச்சுடும்.

நல்ல தேகம் தான் நல்ல எதிர்காலத்தின் உற்சாகமான வாகனம்... நாலுபேர் வந்து பாராட்டிப் பேச வைக்கின்ற அழகு சிம்மாசனம்...

நோயில்லாம உங்களை வாழ வைக்கிற விளையாட்டை உங்களுடைய நண்பனாக ஏத்துக்கங்க எப்பொழுதும் பிரச்சினையே இல்லாம சந்தோஷமா வாழலாம்!

வாழ்க்கையின் நோக்கமே சந்தோஷம் தான்! சந்தோஷமா வாழ்ந்து, சமுதாயத்துக்கு உதவ உங்களுக்கு விளையாட்டு தான் வழிகாட்டும்னு சொல்லி, வாழ்த்தி, உங்களோட பேசுறதுக்கு வாய்ப்பளித்த கோவை ஆல் இந்தியா ரேடியோ நிறுவனத்தாருக்கும் நன்றி தெரிவிச்சுட்டு விடை பெறுகிறேன். வணக்கம்.



# 10. இந்தியாவில் நவீன விளையாட்டுக்கள்

இந்தியத் தலைநகரில், இரண்டாவது முறையாக, ஆசிய விளையாட்டுக்கள் நடைபெற இருக்கின்றன. பல கோடி ரூபாய்களை செலவழித்து, பல்லாயிரக்கணக்கான அதிகாரிகளும், வீரர்களும் பங்கு பெற்று, சேர்ந்து, செயலாற்றி வருகின்ற நேரம் இது.

எல்லாத் துறை மக்களிடையேயும் இன்று ஆர்வமுடன் பேசப்படுகின்ற முக்கியப் பொருளாக, விளையாட்டுக்கள் இடம் பெற்றிருக்கின்றன.

இயற்கைக்கு அடுத்தபடியாக மனித வாழ்க்கையை அலங்கரித்துக் கொண்டிருப்பது, ஆக்ரமித்துக்கொண்டிருப்பது விளையாட்டுக்கள்தான், விளையாட்டானது. இன்று உலகத்திலே இல்லாத இடமில்லை, ஏறி அமராத இதயமில்லை.

ஆமாம்! உண்மைதான். உடலில் உறுப்புக்கள் அழகாக இருக்கின்றன. அவற்றிடையே உணர்வு பூர்வமான இயக்கங்களும் இருக்கின்றன. அந்த உணர்வு பூர்வமான உற்சாகம் தரத்தக்க இயக்கங்களின் ஏற்ற மிகு அமைப்புத்தான் இந்த விளையாட்டுக்கள் என்றால், அது மிகையல்ல.

விருப்பம் போல், விதவிதமான வகையிலே, மனோரம்யமான முறையிலே, அறிவு பூர்வமாக உடல் உறுப்புக்களை இயக்கும் விதங்கள் தான் விளையாட்டுக்கள் ஆகும்.

அதனால்தான் விளையாட்டு என்பது மனித குலத்தின் வழிகாட்டி. இன்ப உலகை இனிதாகக் காட்ட வரும் விடிவெள்ளி. அலை உலகத்திடையே அமைதியைக் காட்ட வரும் அழகுமணிக் கலங்கரை விளக்கு. ஆறிலிருந்து நூறு வரையும் அறிவினை விரிவு படுத்துகின்ற ஆசான். தவறாத பண்புகளை, தன்மைகளை, ஆற்றல்களை, அற்புதங்களை அனுதினமும் சாலப் பரிந்தூட்டுகின்ற அன்புத்தாய் என்றெல்லாம் பேசுகின்றோம்.

மக்களிடையே சகோதர பாசத்தையும், சமத்துவ நேசத்தையும், சிறந்த வாய்ப்புக்களையும் சேர்த்துக் கொண்டிருக்கின்ற விளையாட்டுக்கள் எல்லாம் மக்களை மாண்புடன் வழி நடத்திச் செல்லும் நல்ல நண்பர்கள், சுற்றங்கள் என்று சொல்வாரும் உண்டு.

விளையாட்டைப் பின்பற்றி வாழ்வில் யாரும் வீழ்ந்ததில்லை. விளையாட்டை வெறுத்து விட்டு யாரும் சிறப்பாக உயர்ந்ததுமில்லை. விளையாட்டுக்கள் என்றும் உலகிலே உன்னத இடத்தை வகிக்கின்றன.

இந்தியாவில் விளையாட்டுத்துறை வளர்ச்சி என்பது ஏறத்தாழ இருபதாம் நூற்றாண்டில் தான் தொடங்கி இருக்கிறது. இந்தியாவில் விளையாட்டுத்துறை வரலாற்றை நாம் ஆராய்ந்து பார்க்கும் பொழுது, ஏழுவகையான காலங்களிலே அது பிரித்துக் காட்டப்படுகிறது.

வேதகாலம், இதிகாசகாலம், புராணகாலம், பழமை காலம், முகமதியர் ஆட்சி காலம், மராத்தியர் ஆட்சிகாலம், ஆங்கிலேயர் ஆட்சிகாலம்.

வேதகாலம் தொடங்கி மராத்தியர் ஆட்சிக்காலம் வரையிலும், இந்தியமக்கள் எல்லாம் தனிமனிதரின் தேக பலத்திற்குத்தான், அதிக முக்கியத்துவம் கொடுத்து வந்திருக்கின்றனர். வலிமையே வாழ்வு என்பதுதான் அவர்கள் கொள்கையாக இருந்தது.

மல்யுத்தம், வில்வித்தை, குதிரையேற்றம், கத்திச் சண்டை, தேர் ஓட்டுதல், பளுதூக்குதல், போன்றவைகள் வீர விளையாட்டுகளாகவும், போர்கள் எல்லாம் அவைகளைப் பயன் படுத்திக் கொள்ளுகின்ற இடங்களாகவும் இருந்தன.

இதிகாசகால இலக்கியங்களான மகாபாரதம், இராமாயணம் முதலியவற்றில் நாம் காண்பது பல் வேறு வகையான மல்யுத்த வகைகள், பீமனும் துரியோதனும் போட்ட துவந்த யுத்தங்கள், அதுபோலவே இராமாயணத்தில் இராம லட்சுமணரின் வில் ஆற்றல், அனுமானின் தேகபலம், வாலியின் சுக்ரீவனின் போர் ஆற்றல்.

ஆக, தனி மனிதனின் தேகபலமே முக்கிய நோக்கமாக ஆதிகாலத்திலிருந்து மராத்தியர் ஆட்சிகாலம் வரை வந்தது. தேக சக்திக்காக அவர்கள் மேற்கொண்ட பயிற்சிகள் கடுமையானவையாக இருந்தன. மல்லர்கம்பப் பயிற்சிகள், சிலம்பச் சுற்றுகள் எல்லாமே அக்கால மக்களிடம் இருந்தன

ஆண்கள் பலர் சேர்ந்து ஆடும் விளையாட்டுக்களாக சில உண்டு. சடுகுடு, கோகோ ஆட்டம், பாரிஆட்டம் போன்றவை. என்றாலும், அவற்றிலும் தனிமனிதன் பலமே தலைதூக்கி இருக்கிறது.

பெண்கள் ஆடிய ஆட்டத்திலும், கும்மி, கோலாட்டம் பல்லாங்குழி, கல்லாங்காய் போன்றவைகள் இருந்தாலும் அவைகளும் ஆற்றல் தரத் தக்கவைகளாக இல்லை.

முதன் முதலாக 100 மீட்டர் ஓட்டம். உலக சாதனை நேரம் 11 விநாடிகள். அடுத்தது 200 மீட்டர் ஓட்டம். அதிலும் தங்கப் பதக்கம். 400 மீட்டர் தூரம் ஓடுகின்ற தொடரோட்டம். அதிலும் வென்று தங்கப் பதக்கம். மூன்று தங்கப் பதக்கங்களை கழுத்தில் அணிந்து கொண்டு, உலகம் போற்றும் உன்னத வீராங்கனையாக வந்தாள் அந்தப் பெண்.

ரஷ்ய நாட்டினரும் 'ஒலிம்பிக் ராணி' என்று போற்றிப் புகழும் வண்ணம் புகழ் பெற்ற வீராங்கனை வில்மா ருடால்ஃப் என்பது அவள் திருநாமம். விரைவோட்டத்தில் இவ்வளவு சிறப்பாக யாரும் ஓடியதில்லை என்று பெயரெடுத்து, பெற்றோர்களையும் ஆனந்த வெள்ளத்தில் ஆழ்த்திய வில்மாவின் வாழ்க்கையைப் பாருங்கள்.

அவள் தேர்ந்தெடுத்தப் பாதை சிறந்த பாதை. விளையாட்டுத் துறையான அந்த ஒப்பற்றப் பாதையில் நடந்தாள். அவளது பயணம் சீராக, சிறப்பாக, பார்த்தவர்கள் புகழ்கின்ற பயணமாக அமைந்தது. உலகப் புகழ் பெற்றாள். 'தோன்றிற் புகழொடு தோன்றுக அஃதிலார் தோன்றலின் தோன்றாமை நன்று' என்ற வள்ளுவர் வாக்குக்கு இலக்கியமாகத் திகழ்கிறாள்.

ஒருவரின் புகழுக்கு பணமோ, பதவியோ, குடும்பப் பாரம்பரியமோ மட்டும் உதவாது. உயர்ந்த லட்சியமும் உண்மையான உழைப்பும், பண்பான பயணமும் பாதையுமே வெற்றி நல்கும் என்று வரலாறு கண்ட வில்மா ருடால்ஃபை நினைத்துக் கொள்வோம். விளையாட்டுத் துறைதரும் சிறந்த பாதைக்கேற்ற பயணத்தை நாமும் தொடர்வோம். பயன் பெறுவோம்.

இந்தியாவில் 1904ம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இதற்கு அகில இந்திய அளவிலே தலைமைக் கழகம் ஒன்று ஏற்பட்டதோ 1950ம் ஆண்டில் தான்.

1895ம் ஆண்டு, வில்லியம் மோர்கன் என்னும் அமெரிக்கரால் உருவாக்கப்பட்டது கைப்பந்தாட்டம் ஆகும். அதற்கான இந்தியத் தலைமைக் கழகம் அமைந்தது 1951ல் தான்.

வரலாற்றுக்குட்படாத தோற்றம் கொண்டு, வளர்ந்து வந்திருக்கும் ஆட்டம் கால்பந்தாட்டம். கி. பி. 14ம் நூற்றாண்டிலிருந்தே இங்கிலாந்தில் மாறியும் தேறியும் மறுமலர்ச்சியும் பெற்ற இந்த ஆட்டம், இந்திய நாட்டுக்கு வந்து சேர்ந்தாலும் இதற்காக ஒரு தலைமைக் கழகம் அமைந்தது 1937ல் தான்.

கிரிக்கெட் ஆட்டமும் இங்கிலாந்து வழங்கிய பரிசுதான். 1791 ஆம் ஆண்டிலேயே இந்தியாவுக்கு வந்து போட்டிகளும் நடைபெற்றாலும் போர்டு ஆப் கன்ட்ரோல் என்ற ஒன்று அமைக்கப்பட்டது 1925ல் தான்.

24 ஆண்டுகள் ஒலிம்பிக் பந்தயங்களில் ஹாக்கி எனும் வளைகோல் பந்தாட்டத்தில் வெற்றிக் கொடி நாட்டியது நம் நாடு. 1880ம் ஆண்டிலேயே இங்கிலாந்து இராணுவ அதிகாரிகளால் அறிமுகப்படுத்தப்பட்ட போதும், இதற்கான தலைமைக் கழகம் அமைந்தது 1925ல் தான்.

1896ம் ஆண்டில் புதிய ஒலிம்பிக் பந்தயங்கள் கிரேக்கத்தில் தொடங்கப் பெற்று, நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒவ்வொரு இடத்திலும் நடைபெற்றன. என்றாலும் நமது நாட்டு வீரர்கள் முதன் முதலாக பங்கு பெற்றது 1920ல் தான். நமது வீராங்கனைகளோ 1952ல் தான். அதுவும்,

இருவர் மட்டுமே பங்கு பெற்று சிறப்பு பெற்றனர். அதற்கான தலைமைக் கழகம் தோன்றிய ஆண்டு 1946.

இந்திய விளையாட்டுத் துறையில் நவீன விளையாட்டுக்கள் இடம் பெற்ற ஆண்டுகளை நாம் அறியும் பொழுது மிகக் குறைந்த காலம்தான் என்பதை உணர முடிகின்றது. ஆனால் அதற்கு முன்பே வெளிநாட்டினர் இந்த விளையாட்டுக்களில் வேகமும் யூகமும் அதிகமாகவே பெற்றிருந்தனர்.

அந்நிய ஆதிக்கத்தின் அகோரப் பிடியிலே அடங்கிக் கிடந்த மக்களிடையே, விளையாட்டுக்கள் வேகம் பெற்று வளர்கின்ற சூழ்நிலை ஏன் அமையவில்லை என்பதற்கான காரணங்களை L. B. போபாத்கர் என்பவர் எழுதியிருக்கிறார். அந்த கருத்துக்களை நாம் இங்கே எண்ணிப்பார்ப்பதும் பொருத்தமாகவே அமையும் என்று நம்புகிறோம்.

ஆங்கிலேயர்கள் ஆண்ட நேரத்தில்தான், இந்திய மக்களுடைய உடல் வலிமை கொஞ்சங் கொஞ்சமாகக் குறையத் தொடங்கியது. இந்திய பாதுகாப்பினை அவர்கள் ஏற்றுக்கொண்ட பிறகு, இராணுவத்தையும், கடற்படையையும் பலப்படுத்தினர். அதனால் பொதுமக்கள் கவனிக்கப்படவில்லை. இந்தியர்கள் ஆயுதங்களை கையாள்வதற்குத் தடை விதிக்கப்பட்டனர்.

ஆங்கிலேயர்கள் கொண்டு வந்த கல்வி முறை இந்திய மக்களை குமாஸ்தாக்களாகவும், ஆசிரியர்களாகவும் ஆக்குகின்ற தகுதிகளைத்தான் தந்தது. பள்ளிக்கூட நேரங்களும், குழந்தைகளை விளையாட்டில் ஈடுபட முடியாமலும் களைப்படைந்து போகின்ற தன்மையிலுமே அமைந்தன.

அதுவுமின்றி மக்களிடையே வளர்ந்து வந்த வறுமையும், வெறுமையும், அவர்களையும் அவர்களின் பரம்பரையையும் ஆற்றல் இல்லாதவர்களாக ஆக்கின.

இத்தகைய சமுதாயச் சூழ்நிலையில், இந்திய விளையாட்டுத் துறையில் நவீன விளையாட்டுக்கள் இடம் பெற்றுக் கொண்டன. மக்களும் ஏற்றுக் கொண்டனர்.

சமுதாயச் சூழ்நிலைகள் அழுத்தினாலும், இயற்கையிலே இருந்த வீர உணர்ச்சியும், விவேக ஆற்றலும், அவர்களை விளையாட்டில் நிபுணர்களாக்கின. குறைந்த கால அளவிலே உலக நாடுகளுக்கிடையே இந்தியாவையும் ஓர் ஒப்பற்ற நிலைக்கு உயர்த்திக் காட்டினர்.

சட்டங்கள், இராணுவத் திட்டங்கள், அக்கால மக்களை ஆட்டிப்படைத்தாலும், அவர்களது ஆற்றலை மறைக்க முடியவில்லை. இலட்சிய வெறி அவர்களை உயர்த்தியது. இன்னும் அந்த எழுச்சி இருக்கிறதே தவிர, ஏற்றமுற அமையவில்லை என்றே கூறலாம்.


கிரிக்கெட், டென்னிஸ், மல்யுத்தம், வளைகோல் பந்தாட்டம் போன்றவற்றில் சிறப்பான இடத்தை நமது நாடு வகித்தாலும், அது போதாது என்றே பலர் கருதுகின்றனர். நமக்கு சுதந்திரம் வந்த பிறகும், நமது தலைவர்கள் ஆதரவு தந்த பிறகும்தான், விளையாட்டுத்துறை வேகமாக வளர்ந்து வருகிறது 1951ல் முதல் ஆசியப் போட்டிகளை நடத்தி, 1982ல் ஒன்பதாவது ஆசியப் போட்டிகளையும் நடத்துகின்ற உயர்ந்த நிலைக்கு நாம் வந்திருக்கிறோம். 189 ல் ஒலிம்பிக் பந்தயங்களை நடத்தலாமா என்று எண்ணும் அளவிலே நமது சிந்தனை உயர்ந்திருக்கிறது.

நவம்பர் மாதம் நடக்கவிருக்கின்ற ஆசிய விளையாட்டுக்கள், நமது நாட்டிலே நம் இளைஞர்களின் ஆற்றலை உயர்த்தும், எதிர்காலத்தை மெருகூட்டி மேன்மைப்படுத்தும். உலக நாடுகளின் முதல் வரிசையிலே நம் வீரர்களை கொண்டு போய் நிறுத்தும் என்று எல்லோரும் நம்புகின்றனர்.

நாமும் நம்புவோம். எண்ணியதைப் பெறுவோம். உயர்ந்த இலட்சியமும், உற்சாகமான உழைப்பும் என்றும் தோற்ற தில்லை. வெற்றியையே வழங்கும்.

நாமும் வெற்றி பெறுவோம். நாட்டின் பெருமையை உயர்த்திடுவோம். மகிழ்வோம்.

குறிப்பு: ஆசிய விளையாட்டுக்கள் இந்தியாவில் நடைபெற்றபோது சென்னை வானொலியில் 29—10—82 அன்று இரவு 8-30 மணிக்கு நிகழ்த்திய உரை.



# 11. ஏன் இந்த ஆசிய விளையாட்டுக்கள்?

இந்தியாவில், இரண்டாவது முறையாக நடக்கும் ஒன்பதாவது ஆசிய விளையாட்டுப் போட்டிகள், இப்பொழுது டில்லி மாநகரில், வெற்றிகரமாக நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன.

இந்தியாவில் முடியுமா? இந்தியாவால் முடியுமா? ஏழை நாடாயிற்றே! எப்படி முடியும் என்று எழுந்த ஏராளமான கேள்விகள், ஏளனமான கேள்விகள் எல்லாம் இன்று தோல்வியைத் தழுவிக் கொண்டிருக்கின்றன. அவ்வளவுக்கு அருமையான ஏற்பாடுகள், அற்புதமான காட்சிகள்.

பல நாடுகளில நடைபெற்ற பல ஒலிம்பிக் பந்தயங்களைப் பார்த்திருக்கும் ஒலிம்பிக் பந்தயக் கழகத்தின் தலைவர் ஜீவான் அந்தோனியா சமாரஞ்ச் என்பவர், இந்தியாவில் உள்ள ஏற்பாடுகளைப் பார்த்தபிறகு—அவர் கூறியதாவது.

"ஆசியப் போட்டிகளுக்காக" இந்தியா மேற்கொண்ட முறைகள் எல்லாம் சிறப்பாக இருக்கின்றன. 1992ல் இந்தியா ஒலிம்பிக் பந்தயங்களை மிகச் சிறப்பாக நடத்த முடியும் என்ற நம்பிக்கை இருக்கிறது." என்று அவர் வாயார, மனமாரப் புகழ்ந்திருக்கிறார்.

பலகோடி ரூபாய்கள் செலவாகியிருக்கின்றன என்பது உண்மைதான். பந்தயங்களை நடத்தமட்டும் 21 கோடி ரூபாய்க்கு மேல் செலவு என்றும் அறிவிப்பு வந்திருக்கிறது.

33 நாடுகள் ஆசியக் கண்டத்திலிருந்து வந்து இன்று பங்கேற்றுக் கொண்டிருக்கின்றன. 6000 வீரர்கள் வீராங்கனைகளுக்கு மேல் ஆர்வத்துடனும் ஆவேசத்துடனும் வந்து போட்டியிட்டுக் கொண்டிருக்கின்றனர். போட்டிகளிலே பூசல்களே வராமல், நடத்திட, 2000 அதிகாரிகளுக்கு மேல் பணியாற்றிக் கொண்டிருக்கின்றனர். அந்தக் காட்சிகளைக் கண்டு மகிழ்ந்து, இதனைக் காணாத மக்களுக்கு எடுத்துச் சொல்கின்ற பொறுப்பேற்று வந்து இருக்கின்ற பல நாட்டுச் செய்தியாளர்கள், தகவல் ஆசிரியர்கள் எண்ணிக்கையோ 4000க்கு மேல்.

8 வயதிலிருந்து 60 வயது வரையில் உள்ள வீராங்கனைகளும் வீரர்களும் போட்டி போடுவதற்கென்று 17 அரங்கங்கள் உருவாகியுள்ளன.

இப்படியெல்லாம் செய்தது இந்தியாவின் சோதனைக் காலம். இந்த நாட்டின் வேதனைக் காலம் என்றெல்லாம் வேகமாக விமர்சித்து இருப்பவர்கள்கூட, இந்திய நாட்டின் இனிய சாதனையைக் கண்டு, தங்களை மறந்து பாராட்டியிருக்கின்றார்கள். இந்த அற்புத மாற்றத்தை இன்று இந்திய நாடு ஏற்படுத்தியிருப்பதே அற்புதமான வெற்றிதான்.

2 ஆண்டுகாலக் கட்டத்தில், ஆசியாவிலேயே மிகப் பெரிய உள்ளரங்க விளையாட்டு அரங்கமான இந்திரப் பிரஸ்த அரங்கை நமது இந்திய எஞ்சினியர்கள் நிர்மாணித்திருக்கின்றார்கள். உலகிலேயே மூன்றாவது பெரிய அரங்கம் இது என்ற பெருமையும் உடையது இது.

75,000 பேர்களுக்கு மேல் அமர்ந்திருந்து பார்க்கின்ற ஜவஹர்லால் நேரு ஸ்டேடியம் இன்னும் ஒரு மகத்தான சாதனையுமாகும்.

பத்தாயிரம் பேர்களுக்கு மேல் சீருடை பெற்ற உதவியாளர்கள், மற்றும் அதிகாரிகள் கொடுத்த உற்சாகமான ஒத்துழைப்பினால் ஆசியப் போட்டிகள் மிக அமைதியாகவும், மிக அருமையாகவும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இதன் காரணமாக அதிகமான புது சாதனைகள் படைக்கப் பட்டும் இருக்கின்றன.

பல்லாண்டு காலமாக, பயிற்சி பயிற்சி என்று தங்களது வாழ்நாட்களைப் பயன்படுத்தி உழைத்த வீரர்கள் வீராங்கனைகளின் உற்சாகமான போட்டிகளை, நேரில் காண ஓர் அரிய வாய்ப்பு. கடின உழைப்பு கட்டாயம் வெற்றியே தரும் என்று நம்மவர்களை நேரிலே பார்த்து நம்ப வைக்கின்ற சாட்சியாக அமைந்த வீரக் காட்சிகள்.

இந்தியர்களுக்கு நிறைய திறமை இருக்கிறது. அதை வளர்த்து மேலோங்கச் செய்யும் பயிற்சி முறைகளும் முயற்சி வழிகளும் தான் இங்கே இல்லை என்பதைக் கண்கூடாகக் காட்டி உணர்த்துகின்ற உண்மை நிலையும் உண்டு

ஆமாம்! நாம் செலவழித்திருக்கின்ற பல கோடி ரூபாய்கள்; படைத்திருக்கின்ற பதினேழு விளையாட்டரங்கங்கள்; பரப்பி இருக்கின்ற விளையாட்டு ஆர்வங்கள்; மக்களின் மத்தியிலே ஏற்படுத்தியிருக்கும் மறுமலர்ச்சிகள் எல்லாம், இந்திய மண்ணிலே, இளைஞர்களிடையே, எதிர்கால வாரிசுகளிடையே விளையாட்டு உற்சாக விதையை ஊன்றியிருக்கின்றன.

விதையை விதைத்து விட்டு. மறுநாளே விளைச்சலை எதிர் பார்ப்பது விவேகமாகாது. பழுக்கும் காலம் ஒன்று வரும்.

பார் புகழும் வெற்றிக்கனி, நமது முன்னே வந்து அமரும் காட்சியும் விரைவில் வரத்தான் வரும் என்று முன்னேற்ற முயற்சிகளை இந்த ஆசிய விளையாட்டுக்கள் முடுக்கி விட்டிருக்கின்றன.

இதுவரை 8 முறை நடந்த ஆசிய விளையாட்டுக்களில், முதல் நிலையிலே இருந்து அதிகமான தங்கப் பதக்கங்களை வாங்கிய ஜப்பானுக்குப் போட்டியாக, 1951-ல் தொடங்கிய முதல் ஆசியப் போட்டியிலிருந்து 23 ஆண்டுகளாக போட்டியிடாமல் விலகியிருந்து 1974-ல் கலந்து கொண்ட சீனா, இன்று ஜப்பானையே முறியடித்து முன்னணியில் நிற்கும் நிலையையும் இன்று நாம் பார்க்கிறோம்.

இதுவரை முதல் ஆசியப் போட்டியில் 2வது இடம், பிறகு நான்காவது இடம், ஐந்தாவது இடம், ஏழாவது இடம் என்று இடம் பெற்றுக் கொண்டு வரும் நமது இந்திய நாடு. அடுத்த ஆசிய விளையாட்டுப் போட்டிகளில் நிச்சயம் முதல் இடம் பெறும் என்றும் நாம் நம்ப வாய்ப்புக்கள் உண்டு.

ஆமாம்! ஆசிய விளையாட்டுப் போட்டிகளை நடத்தும் பொறுப்பு ஏற்றதினால் தான். 8 புதிய ஸ்டேடியங்கள் உருவாயின 7 பழைய ஸ்டேடியங்கள் புத்துயிர் பெற்று புதுமையாகியிருக்கின்றன. 75 லட்சம் விலையுள்ள ஆஸ்ட்ரோடர்ப் என்ற புதிய ஆடுகளத் தரையில் இன்று நாம் ஆடிப் பயிற்சி பெற முடிந்திருக்கிறது.

உலக அளவில் போட்டியிடுவதற்கு உற்சாகம் உள்ள மக்கள் இருந்தால் மட்டும் போதாது. தரமான ஆடுகளங்கள் வேண்டும் என்ற உண்மையை அறியாமல், அறிந்தும் செலவு செய்ய முடியாமல் இருந்ததால் தான், உலக அரங்கிலே இந்தியா வெற்றி பெற முடியாமல் இருந்தது.

அந்த அவல நிலை இன்று அகன்று போயிருக்கிறது. உலகத் தரத்திலே அமைந்திருக்கும் ஆடுகளத்திலும் ஓடு களத்திலும் நமது வீரர்கள் வீராங்கனைகள் பயிற்சி பெறும் வாய்ப்பு - நாளைய வெற்றியின் எதிர்பார்ப்புதானே !

ஒரு நாட்டுக்கு அழகு என்பது ஆறும், மலையும் காடும் கழனியும் மட்டுமல்ல ஆற்றலும் ஆண்மையும் உள்ள மக்கள். உழைப்பை விரும்பும் உடல் உறுதி வாய்ந்த மக்கள்

உடல் சக்தி நிறைந்த மக்களைக் கொண்டிருந்த நாடுகளே உச்சநிலையில் இருந்தன. பொற்காலம் படைத்தன. மக்கள் உடலில் சக்தி இழந்து சோம்பறிகளான போது, அந்த நாட்டின் பொற்காலம் பாழாய் போயிருக்கிறது. அன்னிய ஆதிக்கத்திற்கு அந்த மக்கள் அடிமையாகிப் போயிருக்கின்றனர். என்று உலக வரலாறு கூறும் பாடத்தை நாம் அறிவோம்.

ஆகவே, 'மனித சக்தியே மாபெரும் சக்தி' என்பதை நிரூபிக்கவும், நல்ல தேக சக்தி வாய்ந்த மக்களை உருவாக்கவும், உண்மையான உழைப்பே உலகில் வெற்றி தரும்; ஏய்ப்பும் ஏமாற்றும் தறுக்கு வழிப்புரட்டும். கோமாளித்தனமான கூச்சலும், ஒருவரைக் கீழாக்கிவிடும். அப்படிப் பட்டவர்கள் உள்ள சமுதாயம் அழிந்துபோய்விடும்' என்பதை நமக்கு உணர்த்தும் உண்மையான தூதுவராகவே இந்த ஆசிய விளையாட்டுப் போட்டிகள் வந்திருக்கின்றன.

நமது நாடு, இன்று இந்தப் போட்டிகளுக்காக அள்ளி இறைத்திருப்பது பணத்தை மட்டுமல்ல எழுச்சியை மக்கள் இதயத்திலே மாறாத ஆர்வ உணர்ச்சியை. மங்காத ஆற்றலை. மறக்க முடியாத மறுமலர்ச்சியை. மணியான தாய் நாட்டுப் பற்றை.

ஆமாம்! தாய் நாட்டுப் பற்றுதான் ஒருவரின் அறிவை விரிவுபடுத்துகிறது. ஆற்றலை அதிகப்படுத்துகிறது. மேன்மைப் படுத்துகிறது.

தான் என்ற ஆணவ நினைவை அகற்றிவிட்டு, தாய் நாட்டுப்பற்றுடன் திறமையை சேர்க்கின்ற பொழுதுதான், வெற்றி வேகமாக வருகிறது. வெற்றி மேடையில் ஏற்றுகிறது, ஒரு வீரர் பெறும் வெற்றியால், அவரது நாட்டுக்கொடி கம்பத்தில் ஏற்றப்படுகிறது. அவரது தேசியகீதம் இசைக்கப் படுகிறது. பார்வையாளர்கள் அனைவரும் எழுந்து மரியாதை செய்கின்றனர். இந்தப் பெருமையை ஒரு வெற்றி வீரர்தான் தன் தாய் நாட்டுக்காகச் செய்ய முடியும்.

ஒவ்வொரு முறையும், ஒரு நாட்டின் கொடி, கம்பத்தில் ஏற்றப்படும் பொழுது, அந் நாட்டின் ஆற்றல் மிகு வீரரை நாம் பார்க்கிறோம். அந்த ஆற்றல் மிகு வீரரின் ஆற்றல் மிக்க சமுதாயத்தையும் நாம் பார்க்கிறோம். போற்றுகிறோம். ஏனெனில் இந்த வீரன் அந்த ஆற்றல் மிகு சமுதாயத்தின் ஓர் அங்கம்தானே!

இத்தகைய ஓர் எழுச்சிமிக்க நாட்டுப்பற்றை, தெய்வ பக்தியை இப்படிப்பட்ட போட்டிகள்தான் உண்டாக்க முடியும், நமது நாட்டு மக்களுக்குத் தாய் நாட்டுப் பற்றினை ஊட்ட, இது ஒரு தக்கத் தருணம் என்றால், அது உண்மை யானதுதான். மிகையான வாதமல்ல

விளையாட்டுக்கள் சக்திவாய்ந்த தேகத்தை உண்டாக்கு கிறது என்பதோடு, இறுதிவரை எதிலும் முயற்சித்துப் பார்க் கின்ற இரும்பான மன உறுதியையும் உண்டாக்குகிறது. சக்தி யுள்ள மனிதர் யாரும் சோப்பேறியாக இருக்க மாட்டார்கள். அவர்கள் எதையாவது சாதிக்கவே முயற்சிப்பார்கள். ஓடும் ஆற்றுநீர்தான் தூய்மையானதாக இருக்கும். உழைக்கும்

உடலும், அதில் உள்ள மனமும் நிச்சயம் தூய்மையாகவே இருக்கும்.

உள்ளத்தில் தூய்மை- சொல்லில் வாய்மை- செயலில் மெய்மையை ஏற்படுத்தும் என்பார்கள். அதனால் தான் 'வாய்மையே வெல்லும்' என்று நமது அரசு பொறித்து வைத்திருக்கிறது. வாய்மைக்கு வழிகாட்டும் விளையாட்டுக்கள் இனிமேல் சிறப்பாக வளர, இந்த ஆசிய விளையாட்டுப் போட்டிகள் உதவிட இருக்கின்றன.

போட்டியிடும் வீரர்கள், வீராங்கனைகள் எல்லாம் பல்வேறு மொழி பேசும் மக்கள். பல்வேறு கலாசாரத்தில் பழகியவர்கள். உலக மொழி என்று ஒன்று உண்டென்றால் அது விளையாட்டு மொழி என்பதுதான் உண்மை.

பல்வேறு மொழி பேசுபவர்கள் இங்கே பேச முடியாமல் உணர்ச்சிகரமான முகபாவங்கள், சைகைகள் மூலம் பேசிக் கொண்டு கலந்துறவாடுகின்ற காட்சியைக் காணும்போது, சாதி சமயம், ஏழை பணக்காரர், உயர்ந்தவர் தாழ்ந்தவர், மொழி பண்பாடு எல்லாவற்றையும் மாற்றும் ஓர் உயர்ந்த மொழி உயர்ந்த வழி ஆனந்தமான விளையாட்டுக்கள் தான் என்பதையே இந்த ஆசிய விளையாட்டுக்கள் நமக்கு உணர்த்தியிருக்கின்றன.

திறமை உள்ளவர்களே முதலிடம் பெற முடியும். அவர்களுக்கே பரிசு, பாராட்டு மரியாதை கௌரவம் என்பதை நினைவூட்டும் இந்த ஆசிய விளையாட்டுக்கள், நமது இந்தியாவில் நிறைய மாற்றங்களையும், புதிய விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத்தும். நல்லதையே நினைப்போம்... நல்லதே நடக்கும்.

குறிப்பு : 3-12-82 இரவு சென்னை வானொலியில் "ஆசிய விளையாட்டுப் போட்டிகள்" என்ற தலைப்பில் ஆற்றிய உரை.

# 12. ஒலிம்பிக் ஒரு கண்ணோட்டம்!

ஒலிம்பிக் பந்தயம்: இன்றைக்கு பாரெங்கும் இதே சிந்தனை பார்ப்பவர்களிடையே இதே பேச்சு. பரபரப்பான உரையாடல் — இன்று உலக மக்களின் உள்ளங்களிடையே ஊஞ்சலாடுகின்ற உன்னத சித்திரமாக விளங்குவது ஒலிம்பிக் பந்தயமாகும்.

அமெரிக்காவில் உள்ள லாஸ் ஏஞ்செல்ஸ் நகரிலே ஆர வாரமான ஆரம்பவிழா. 1984ம் ஆண்டின் மிகப் பெரிய விழா — ஒருலட்சம் பேருக்குமேல் ஒரே இடத்தில் உட்கார்ந்து, உற்சாகத்துடன் பார்த்து மகிழ்கின்ற வாலிப விழா...

2½கோடி மக்களுக்கு மேல் டெலிவிஷனில் பார்த்து ரசிக்கின்ற பேரின்ப விழா இது. 140 நாடுகள் வந்து உத்வேகத்துடன் கலந்து கொள்கின்றன. அவற்றிலிருந்து பத்தாயிரத்திற்கு மேற்பட்ட வீரர்களும் வீராங்கனைகளும் வந்து பதக்கங்கள் பெற போட்டியிடுகின்றனர்.

போட்டிகளில் ஆவேசம். ஆனால் அதற்கிடையே வேகம் கலவாத விவேகம். போர்வெறி போன்ற போட்டியுண்டு. அதிலே பொறுமை கலக்காத பாசமும் நேசமும் உண்டு.

இந்த ஒப்பற்ற பண்பினை வளர்க்க வேண்டும் என்ற இலட்சியத்தில்தான் இந்த ஒலிம்பிக் பந்தயங்கள் உண்டாக்கப் பட்டன.

எங்கே, எப்பொழுது என்ற கேள்வி வருகிறதே?

கீர்த்தி மிக்க கிரேக்கநாடுதான் இந்த இனிய பந்தயங்களின் இதமான தாயகமாக விளங்குகிறது. முதன் முதலாக ஒலிம்பிக் போட்டி எப்பொழுது நடைபெற்றது என்றால் அது கி.மு. 776ம் ஆண்டில்.

அந்த போட்டிகளில் கலந்து கொள்ள ஆயிரம் ஆயிரம் கட்டுப்பாடுகள் இருந்தன. கிரேக்க நாட்டில் பிறந்த குடிமகனாக இருக்க வேண்டும். அதுவும் கலப்படமற்ற குடிமகன், கல்யாணம் ஆகாதவனாக இருக்க வேண்டும். குற்றவாளிகள் போட்டிகளில் கலந்து கொள்ள முடியாது. குறைந்தது 11 மாதங்கள் கட்டாயப் பயிற்சி செய்திருக்க வேண்டும். அதையும் பத்துபேர் அடங்கியகுழு ஒன்றுதான் பரிசீலித்து முடிவு செய்யும். போட்டியிட அனுமதி அளிக்கும்.

பெண்கள் பந்தய அரங்கிற்குள் செல்லவே முடியாது. மறைந்து பார்த்தாலும் மாபெரும் குற்றம். இந்தச் சட்டத்தை மீறினால் என்ன தண்டனை தெரியுமா? மரண தண்டனை.

இப்படி போட்டிகள்292 முறைகள் நடந்தன. ஆனால், பந்தயங்களில் நேர்மை இல்லை நியாயம் இல்லை அட்டூழியங்கள் ஆக்ரமித்து விட்டன. போட்டி பொறாமைகள் புகுந்து விட்டன என்று காரணம் காட்டி, ஒலிம்பிக் பந்தயங்களை அழித்து விட்டான் ஒரு சக்ரவர்த்தி. அந்த ஆண்டு கி.மு. 394 அழித்தவனோ முதலாம் தியோடோசிஸ். 1500 ஆண்டுகாலம் அகன்றன. ஒலிம்பிக் பந்தயங்கள் உருமாறி, சரித்திரத்திலே மட்டும் இடம் பெற்றுவிட்டன.

புதியன தோன்றும் என்ற வரலாறு உண்மையாயிற்று. பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த பியரி கூபர்ட்டின் என்பவரால் புதிய ஒலிம்பிக் பந்தயங்கள் புத்துயிர் பெற்று எழுந்தன.

1896ம் ஆண்டு, ஏப்ரல் மாதம் 6ந்தேதி முதலாம் புதிய ஒலிம்பிக் பந்தயங்கள் கிரேக்க நாட்டின் ஏதென்ஸ் நகரிலே ஏற்றமிகு சிறப்புடன் தொடங்கப் பெற்றன.

அன்று பங்கு பெற்ற நாடுகள் 9. போட்டியிட்ட வீரர்கள் 484. இன்று பங்கு பெறுகின்ற நாடுகள் 140. போட்டியிடும் வீரர்கள் பத்தாயிரம்.

போர் நடக்கும் நேரத்திலும் ஒலிம்பிக் பந்தயங்கள் என்றால் போரை நிறுத்தி, சமாதானத்துடன் வந்து பந்தயங்களில் பங்குபெற வேண்டும் என்பது அந்நாள் விதி. இன்று பந்தயங்களுக்குப் போகாமல் பகைமை பாராட்டி, பங்கு பெறாமல் விலகியிருப்பது இன்றைய காட்சி.

பந்தயத்தில் கலந்து கொள்ளும் வீரர்களைப் பாதுகாக்க பலகோடி ரூபாய் செலவு. லாஸ் ஏஞ்செல்ஸ் நகரிலே 18000 பேர்கள் பாதுகாவலுக்காக நிற்கின்றனர். அப்படிப்பட்ட பயங்கரம், இன்று ஒலிம்பிக் பந்தயங்களிடையே நடைபெறுகின்றன. அவ்வாறு நடைபெறாமல் காக்கவும் ஏற்பாடுகள் இருக்கின்றன.

உலக மக்களின் ஒற்றுமைக்காக, அன்பு காட்டி நேசிக்கின்ற ஆனந்தத்திற்காக, அனைவரிடமும் வேண்டும் என்ற அமைதிக்காக ஒலிம்பிக் பந்தயங்கள் தோன்றின.

எந்த நாடு என்ற பேதமில்லை. எந்த மொழி என்ற எண்ணமில்லை. ஏழை பணக்காரர் என்ற தாழ்ச்சி இல்லை. சாதி மதம் பார்க்கின்ற சூழ்ச்சி இல்லை.

'எல்லோரும் ஓரினம் எல்லோரும் ஓர்குலம் எல்லோரும் இவ்வுலக மக்கள்' என்று வீரப் பண்பாட வைக்கின்றன ஒலிம்பிக் பந்தயங்கள். இந்த விளையாட்டானது இன்று உலக

மொழியாகத் திகழ்கிறது. ஒப்பற்ற இசையாக ஒலிக்கின்றது. உன்னத வேதமாக வழி காட்டுகிறது.

இந்தக் கருத்தினை ஏற்றுக் கொண்டவர்கள் வாழ்க்கை கனி மலர்த் தோட்டமாக திகழ்கிறது. இதை வெறுப்பவர்களோ ஐந்தறிவுக் கூட்டமாக அலைகிறது என்பதே இன்றைய உண்மையாகும்.

காலங்கள் மாறினாலும், கொண்ட கொள்கையில் ஒலிம்பிக் பந்தயங்கள் உயர்ந்து நிற்கின்றன. உலகை ஒன்று கூட்டுகின்றன. ஒப்பற்ற அமைதியையும், உயர்ந்த அன்பையும், உன்னத பண்பையும் மீட்டுகின்றன.

பந்தயங்களில் கலந்து கொள்வோம் இயலாவிடில் பந்தயங்கள் தரும் பண்புகளுடன் கலந்து கொள்வோம். பாரில் சிறந்த மேன்மைகளைப் பெறுவோம்.

குறிப்பு : 30-7-84 அன்று இரவு 9-15க்கு சென்னை வானொலி நிலையத்தில் ஆற்றிய உரை



# 13. வாருங்கள் விளையாடுவோம்!

கூடிவாழும் மிருகம்னு மனிதர்களைப் பற்றி ஆராய்ச்சியாளர்கள் சொல்வாங்க. குரங்கிலிருந்து மனிதன் தோன்றினான். இப்படியும் சொல்றாங்க.

மிருகங்கள்னு அஞ்சறிவு. மனிதர்களுக்கு ஆறறிவு. அந்த ஆருவது அறிவுதான் பகுத்தறிவு.

மனிதர்களாகிய நம்மாலதான் பேசமுடியும். யோசிக்க முடியும். சிரிக்க முடியும். கையை உபயோகப் படுத்தி காரியம் செய்ய முடியும். மிருகங்களாலே இதெல்லாம் முடியாது.

ஏன்னு, மனித உடல்தான் உலகத்திலேயே அதிக விலை உயர்ந்த பொருளா இருக்குது. எத்தனை எத்தனையோ பொருள்களை புதுசு புதுசா விஞ்ஞானிங்க கண்டுபிடிக்குறாங்க. உருவாக்குறாங்க— ஆனு, மனித உடம்பை மட்டும் அவங்களாலே செய்ய முடியலே பாத்திங்களா!

அதுதான் ஆண்டவனுடை அற்புதம்!

இந்த அற்புதமான படைப்பாகிய நம்ம உடம்பை நல்லா, சுத்தமா, சுகாதாரமா, பத்திரமா வச்சுகறதுதான், நாம ஆண்டவனுக்குத் தெரிவிக்கிற நன்றியாகும்.

உலகத்துல பிறந்த ஒவ்வொருத்தருக்கும் சுகமா வாழனும்ங்கற ஆசை நிறைய உண்டு.

சுகமா சந்தோஷமா வாழனும்னா, நாம நம்ம உடம்பை ரொம்ப பத்திரமா கவனிச்சுக்கனும். தங்கத்தைப் பத்திரமா பாத்துக்கற மாதிரி, ரொம்ப பாதுகாப்பா வச்சுக்கனும்.

அதுக்காக பெட்டிக்குள்ளே வச்சி பூட்டி வைக்கிறேன்னு சொல்ல முடியுமா? அதுதான் இல்லே...

பத்திரம்னு, உடம்பை சுத்தமா வச்சுக்கனும். சுத்தம் சோறு போடும்னு சொல்வாங்க. சோறுமட்டுமா போடும்! நல்ல நல்ல சுகத்தையும் கொடுக்கும். சுறுசுறுப்பை கொடுக்கும். சோம்பலை அழிக்கும். சிந்திக்கற அறிவை வளர்க்கும். நல்ல முன்னேற்றம் அடையுற சகல சக்தியை யும் கொடுக்கும்.

அதுக்கு என்ன பண்றது? சுத்தமா இருக்க என்ன பண்ணலாம்? இதோ ஒரு சுருக்கமான வழி இருக்குது. ரொம்ப ரகசியம்... கேட்குறீங்களா...

(பாடல் பாடப்படுகிறது)

குளிர்ந்த நீரில் குளிப்போம்
குளுமையாக இருப்போம்
கலகலவென சிரிப்போம்
கையை வீசி நடப்போம்.

தைலம் உடலில் தேய்த்து
நடவி நன்குப் பார்த்து
காலை நேரம் முழுக்கு
கதறி ஓடும் அழுக்கு!

சுறுசுறுப்பைக் கொடுக்கும்
சோம்பலையே அழிக்கும்!
விரும்பித் தினம் குளிப்போம்!
வைத்தியரை மறப்போம்!

காலையில குளிச்ச உடனே ஒரு புது சுறுசுறுப்பு. புது தெம்பு வந்துடும். அதுக்குப் பிறகு நல்ல நினைப்பும் வருது. ஆசைதானே எல்லாக் காரியத்துக்கும் அடிப்படை. அந்த ஆசை, உடம்பால நிமிர்ந்து நிற்கும் போதுதான் நிறையா வரும். குனிஞ்சி நின்னா — கோழையா ஆயிடுவோம்.

மிருகங்கள் தான் நாலு கால்கள்ல குனிஞ்சி நிற்கும். மனுஷருக்கு ரெண்டு கால்கள் தானே! நாம நல்லா நிமிர்ந்து தான் நிற்கனும். அதுதான் மனிதர்களுக்கு மரியாதை.

நீங்க எப்பவுமே நிமிர்ந்து தான் நிற்கனும். நிறைய படிக்கனும். நல்லா யோசிக்கனும். 'நான் நிச்சயம் வாழ்க்கையில முன்னுக்கு வருவேன்னு' முயற்சி செய்யனும். முன்னேற்றம் பெறனும்.

அந்த லட்சியத்தோடதான் நீங்க தினம் வாழனும். அதுக்குன்னு ஒரு சில முறைகளை கடைபிடிக்கனும். எப்படி? இப்படித்தான்.

— பாடல் —

நிற்கும் போதும் நடக்கும் போதும்
நிமிர்ந்து நிற்க வேண்டும்!
கற்கும் போதும் நினைக்கும் போதும்
கனிந்து கற்க வேண்டும்!

சொல்லும் போதும் கேட்கும் போதும்
சொல்லில் பணிவு வேண்டும்!
செல்லும் போதும் சேரும் போதும்
செயலில் துணிவு வேண்டும்!

உண்ணும் போதும் உறங்கும் போதும்
ஒழுக்கம் காக்க வேண்டும்!
எண்ணும் போதும் எழுதும் போதும்
இனிமை சேர்க்க வேண்டும்!

நல்ல பிள்ளை என்ற புகழ்
நமக்கு என்றும் வேண்டும்!
எல்லாம் வல்ல இறைவன் துணை
என்றும் நமக்கு வேண்டும்!

நாம பேசும் பொழுதும், நிற்கும் நேரத்துலயும் கூட கையை காலை அசைக்குறோம். இது நம்மையறியாம நடக்குற செயல். இதுக்குப்பேரு இயக்கம். (Movement). அதாவது இயற்கையா செய்யற காரியம்.

ஆனா, நாம காசுக்காக உடலை பயன்படுத்துறோம். இந்த இயக்கத்துக்குப் பேரு வேலை. அதாவது, ஒரு பலா பலனை எதிர்பார்த்து, அதாவது வருமானை எதிர்பார்த்துச் செய்யுற இயக்கத்துக்குப் பேரு வேலை... (Work).

ஆனா, உடலுக்கு சக்திவேணும். உடல் நல்லா வளரனும்னு நம்பிக்கையோட கையை காலை அசைக்குறோமே, அதுக்குப் பேருதான் உடற்பயிற்சி.

உடற்பயிற்சின்னா என்ன? ஒரு காரியம் செய்யும் போது நல்லா மூச்சை உள்ளுக்க இழுத்து, கொஞ்சநேரம் உள்ளே வச்சிருந்து, பிறகு வெளியே விடுறோம் இல்லியா! அதுக்குப் பேருதான் உடற்பயிற்சி.

உடலுக்கும் உடல் உறுப்புகளுக்கும் நல்ல பயிற்சி தர்ரது தான் உடற்பயிற்சியாகும். அப்படின்ஞ, உடற் பயிற்சி என்ன செய்யும், அதனால உடம்புக்கு என்ன லாபம்னு கேட்கிறீங்களா? எவ்வளவோ லாபம் இருக்குது. அந்த அற்புதமான உடற்பயிற்சியை நீங்க செய்ய ஆரம்பிச்சா... செய்ய ஆரம்பிச்சுட்டா... சொல்லட்டுமா....

—பாடல்—

உடற் பயிற்சி செய்வதால்
உடலில் உறுதி வந்திடும்
உடலும் உறுதி ஆவதால்
ஓங்கித் திறமை வளர்ந்திடும்.

நோயில்லாமல் நாமெல்லாம்
நூறு வயது வாழலாம் !
ஆய கலைகள் அனைத்தையும்
அறிந்து இன்பம் அடையலாம் !

ஊசியில்லா மருந்துதான்
உண்மை இன்ப விருந்துதான் !
ஓசை இன்றி உதவிடும்
உடற் பயிற்சி நண்பன்தான் !

உலகம் முழுதும் செய்கிறார் !
உடலில் அழகைப் பெறுகிறார் !
திலகம் போல வாழவே
தினமும் பயிற்சி செய்குவோம் !

உடற்பயிற்சியானது எவ்வளவு நன்மை கொடுக்குது கேட்டீங்களா ! சின்ன வயசுல உடற்பயிற்சி செய்தா, பெரியவங்க ஆனபிறகும் ரொம்ப உபயோகமா இருக்கும்.

நோயே நம்ம கிட்ட வராது. நோயற்ற வாழ்வு குறைவற்ற செல்வம். உலகத்திலேயே பெரிய கோடீஸ்வரன் யாரு தெரியுமா ? நோயில்லாம வாழறவங்கதான்.

வீட்டு நிறையா பணத்தை சேர்த்து வச்சுக்கிட்டு, படுக்கையில தினம் நோயாளியா படுத்திருந்தா என்ன லாபம் ? வாய்க்கு ருசியா சாப்பிட முடியுமா ? வகை வகையா புதுத் துணி போட்டுத் தான் பார்க்க முடியுமா ? காற்றுட வெளியில் சந்தோஷமா போய்த்தான் உலாவ முடியுமா ? சிரிச்சு ஜாலியா இருக்க முடியுமா ? முடியாது. நிச்சயம் முடியாது.

நோயில்லாம நாம நல்லா, நிர்மதியா வாழனும்னு நாம கட்டாயமா உடற்பயிற்சி செய்யணும். உடலை உறுதியா, வலிமையா வச்சுக்கனும். அதுக்கு முயற்சி செய்யனும். முயற்சி செய்தா, முடியாத காரியம் எதுவுமே இல்லே !

இமயமலை உச்சிக்கு ஏறி ஜெயிக்கலியா! கடலுக்குள்ளே புகுந்து போகலியா! வானத்துல ஆகாசக் கணக்குலே மனுஷன் தங்கலியா !எல்லாம் மனுஷங்களாலே முடியும் ! எப்ப ? மனசு வச்சா முடியும். எப்படின்னு கேட்குறீங்களா ? இந்தப் பாட்டைக் கேளுங்க...

— பாடல் —

பாடிப்பாடி பயிற்சி செய்தால்
பாட்டுக் காரர் ஆகலாம் !
ஓடிஓடி முயற்சி செய்தால்
ஓட்டக்காரர் ஆகலாம் !

புத்தகத்தைப் படித்து வந்தால்
புத்திசாலி ஆகலாம் !
சுத்தமாக வாழ்ந்து வந்தால்
துன்பம் இன்றி வாழலாம் !

பெற்றவர்கள் பேச்சைக் கேட்டால்
பெரிய மனிதர் ஆகலாம் !
கற்றவர்கள் போற்றுவார்கள்
கேட்டுக் கேட்டு மகிழலாம் !

பயிற்சியோட முயற்சியும் இருந்துட்டா, நமக்கு நல்ல உடம்பு வந்துடும். சிறுவர் சிறுமிகளுக்கு நல்ல உடம்பு பார்க்க அழகா இருக்கும் ! வேறு என்ன கவலை உங்களுக்கு இந்த வாழ்க்கையிலே இருக்கு ?

வயிறு நிறைய சாப்பாடு. நாள் பூரா விளையாட்டுதான்! மற்ற நேரத்துல படிப்பு ...

படிப்பும் நல்லா வரணும்னு விளையாட்டுதான் உதவி செய்யுது. விளையாட்டுதான் வாழ்க்கையையே மாற்றி அமைக்குது. இதுதான் உண்மை.

உங்களுக்குப் பிரியமான விளையாட்டை, நீங்க தனியா விளையாட முடியாது. போரடிக்கும். மத்தவங்களோட சேர்ந்து தான் விளையாடணும். அப்படி கூடி விளையாடும் போது எப்படி விளையாடணும்னு தெரிஞ்சுக்க வேணாமா ?

கூட்டமா பலர் ஒன்னு சேர்ந்து விளையாடும் போது, 'கன்னா பின்னா'ன்னு ஆடுனா, அது காட்டாட்டமா இருக்கும். கலாட்டா தான் வரும். சண்டை வரும். அப்புறம் மனசுக்கும் சங்கடமா இருக்கும் ! அதனால தான், கூடி விளையாடுற முறைகளையும் நாம நல்லா தெரிஞ்சுகிட்டா, சந்தோஷமா இருக்கும். அதையும் இப்ப தெரிஞ்சுக்குவோம் !

## — பாடல் —

கூட்டமாக ஒன்று சேர்ந்து
கூடி ஆடுவோம் — அழகுத்
தோட்டத்திலே பூக்கள் என்று
சேர்ந்து ஆடுவோம்.

ஒற்றுமையே வலிமை என்று
உரக்கப் பாடுவோம் — பெரும்
வெற்றிஎன்று வேற்றுமையை
விரட்டிப் போடுவோம்.

போட்டியுள்ள ஆட்டத்திலே
பொறுமை காட்டுவோம் — வெறும்
போட்டி தரும் பொருமையை
பொசுக்கி ஓட்டுவோம்.

வெற்றிக்காக விதிகளையே
மீறவே மாட்டோம் — இதை
முற்றும் நாங்கள் புரிந்துகொண்டோம்
மாறவே மாட்டோம்!

விளையாட வர்ரது வெறுமனே நேரத்தைப் போக்கி வீணாக்குறதுக்காக இல்லே! நல்ல முறையிலே கூடி விளையாடி வந்தா, நல்ல நல்ல பழக்கங்கள் ஏற்படும். நல்ல நல்ல சிநேகிதம் உண்டாகும். எல்லோரும் ஒத்துமையா சேர்ந்து பழகும் வாய்ப்பு கிடைக்கும்.

வாழ்க்கையில பெரிய மனிதர்களாக ஆகி, புகழ் பெறக் கூடிய நல்ல குணங்களும் நிறைய கிடைக்கும்.


விளையாடி விளையாடி வாழ்க்கையில கெட்டுப் போனவங்க யாரும் இல்லே. விளையாடாம இருந்துட்டு, தங்களோட

வாழ்க்கையை வீணாக்கிக்கிட்டவங்க நிறைய பேர் இருக்காங்க.

நம்மகிட்ட நல்ல மனசு இருந்தா, விளையாட்டுல வம்பே வராது. மத்தவங்களை மதிக்கிற மனசு இருந்தா, வாழ்க்கையில கஷ்டமே வராது. இந்த நல்ல மனசும், மத்தவங்களை மதிக்குற மனசும் விளையாட்டு மூலமா தான் நமக்கு நிறையா கிடைக்குது.

ஆகவே, இது தான் நல்ல நேரம். இளமைக் காலம்தான் சரியான சமயம். வாழ்க்கையிலே வெற்றி பெற்று வாழறதுக்கு விளையாட்டுதான் உண்மையான அடைக்கலம். அதனால தான் உங்களையெல்லாம் வாருங்கள் விளையாடலாம்னு அழைக்குறேன். விளையாடுங்க, வெற்றி பெறுங்க என்று கூறி விடை பெறுகிறேன்.

சென்னை வானொலியில் குழந்தைகள் நிகழ்ச்சியில் ஒலிபரப்பானது.



# 14. வசதியற்ற குழந்தைகளுக்கும் வாழ்வளிப்போம்!

'பார்ப்பதற்கும் இன்பம். கேட்டதற்கும் இன்பம். பங்கு பெறுகிற போதும் இன்பம். பங்கு பெற்று முடிந்தபிறகு, என்ன நடந்தது என்று எண்ணும் பொழுதும் இன்பம்' என்று எல்லா மக்களையும், ஆண் பெண், முதியோர் இளையோர் என்ற பாகுபாடின்றி. மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்துவது ஒன்றே ஒன்று தான் உலகில் இருக்கிறது. அது தான் விளையாட்டாகும்.

இந்த விளையாட்டை, வாழ்க்கையின் ஒரு பகுதி ஒன்று தான் பலர் எண்ணிக் கொண்டிருக்கின்றனர். இது அப்படி அல்ல.

விளையாட்டு என்பது வாழ்க்கை. வாழ்க்கை என்பது விளையாட்டு என்று ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து, பற்றிப் படர்ந்து, கூடிக் கலந்து, கோடி இன்பம் அளிக்கின்ற அமுத மழையாக அல்லவா விளையாட்டு விளங்குகிறது.

ஏன் அப்படி என்று எழுகின்ற கேள்விக்கு விடை இது தான். விளையாட்டு என்பதை யாரும் கண்டுபிடிக்கவே இல்லை. அது மனித இனம் தோன்றிய காலத்திலிருந்து தொடர்ந்தே வருகிறது. துணை தருகிறது.

உடல் உறுப்புக்களின் ஒவ்வொரு இயக்கமும் விளையாட்டின் இயக்கமே. விளையாட்டின் இயக்கம் எல்லாம் வாழ்க்கையை வளம் பெற வைக்கின்ற இயக்கமேயாகும்.

உடல் நலத்தை வைத்துத்தான் உலக வாழ்க்கையே அமைந்திருக்கிறது. ஆண்மை மிக்க உடல் அமைந்தவர்கள் தான் மேன்மைமிக்கவர்களாக சமுதாயத்தில் வாழ்கின்றார்கள். சக்தி மிக்க உடல் என்பது உடல் சக்தியும் மூளைசக்தியும் கொண்டது தான்.

மூளையும் ஓர் உடலுறுப்புத்தானே! பலம் மிகுந்த உடலில் தான், பாங்குற சிந்திக்கின்ற மூளையும் பலத்துடன் அமையும்.

உடலால் உழைக்கின்ற மக்களும், சிந்திக்கின்ற மக்களும் தான் சமுதாயத்திற்கு எப்பொழுதுமே தேவைப்படுகின்றார்கள். இப்படி இரண்டு வகையான மக்களைப் பிரித்து பார்க்காமல், ஒரே வகை மக்களாக, உடலாலும் மூளையாலும் நன்குவளர்ச்சி பெற்ற மக்களை உருவாக்குவது தான் விளையாட்டுக்களின் தனிப் பண்புகளாகும்.

சமுதாயத்தை உருவாக்கும் சக்தி வாய்ந்த மக்களை, நாம் இளமையிலிருந்தே இனம் கண்டு கொள்ள வேண்டும். குழந்தைகளை வைத்துத்தான் இனியதோர் எதிர்காலத்தைத் திறம்பட உருவாக்க முடியும்.

இந்த எண்ணத்தின் அடிப்படையில் தான், குழந்தைகளுக்கும் விளையாட்டைக் கற்பிக்க வேண்டும் என்ற எண்ண எழுச்சி இன்று எல்லோரிடையேயும் ஏற்பட்டிருக்கிறது.

ஒரு குழந்தை அசைவற்றுக் கிடக்கிறது என்றால், அது நோய்வாய்ப் பட்டிருக்க வேண்டும். அல்லது இறந்திருக்க வேண்டும் என்கிறார் ஒரு மேல்நாட்டறிஞர்.

உறங்கும் பொழுதுகூட அங்குமிங்கும் அசைந்து கொடுத்து இதம் காணுகின்ற பண்புதான் குழந்தைகள் பண்பாகும். ஆகவே, வாழ்க்கையே விளையாட்டு என்று கட்டுக்கடங்காமல் விளையாடுகின்றார்கள் காட்டாற்று வெள்ளத்தின் வேகம் போல.

காட்டாற்றைக் கட்டுப்படுத்திவிட்டால், கணக்கிலடங்காத நன்மைகள் உண்டாகும். அதைப்போல, ஜீவன் ததும்பும் சிறுவர்களின் வேகத்திற்கு சீரான வழியைக் காட்டி விட்டால், செல்லும் இடமெல்லாம் இளமையும் வலிமையும், பசுமையும் இனிமையும் தான் விளையும்

ஐந்திலே வளையாதது ஐம்பதில் வளையுமோ ? எதிர்கால சமுதாயச் சிற்பிகளாம் குழந்தைகளை, இளமையிலே பிடித்து, இனிய வாழ்க்கை முறையினைக் காட்டி விட்டால், நிச்சயம் நமது குறிக்கோளில் மிகுதியைக் கண்டவர்கள் ஆகிறோம், வென்றவர்களாகவும் ஆகிறோம்.

விளையாட்டுக்களில் சிறுவர்களை ஈடுபடுத்துகிறோம் என்றால், அவர்களை இயற்கையுடன் இணைந்த வாழ்க்கையில் ஈடுபடுத்துகிறோம் என்பதே அர்த்தமாகும்.

வெயிலில், பரந்த வெளியில் விளையாடச் செய்கிறோம் என்றால், அதில் எத்தனை எத்தனை நன்மைகள் கிடைக்கின்றன தெரியுமா ? வெயிலில் D வைட்டமின் அதிகம் கிடைக்கிறது.

டி. வைட்டமின், எலும்புகளை உறுதியாக்குகின்றன. எலும்பு வலிமை அதிகம் பெறப் பெற, அதில் உள்ள எலும்புச் சோறும் நல்ல சக்தியைப் பெறுகிறது. அங்கிருந்து தானே சிவப்பணுக்கள் சக்திமிக்கவையாகப் பிறக்கின்றன.

இரத்தம் சக்திமிக்கதாக மாறினால், இரத்தஓட்டம் பெருக, விரைவு பெற, உடல் உறுப்புக்கள் அதனைப் பெற்று உற்சாகத்துடன் வேலை செய்ய, உடலே வலிவு பெறுகிறது. வனப்பும் பெறுகிறது

திறந்த வெளியிலே விளையாடுவதால், திரிந்தலைகின்ற பிராணவாயுவையும் குழந்தைகள் நிறையப் பெற்றுக் கொள்கின்றன. அவர்கள் நோயணுகாத உடலைப்பெற்று, நிம்மதியான வாழ்க்கையை எப்பொழுதும் பெறுகின்றார்கள்.

விளையாட்டில் ஈடுபடும் குழந்தைகள் உடலால் மட்டுமா உயர்வு பெறுகின்றார்கள்? வாழ்க்கையிலும் தான்.

சமுதாயம் என்பது கூடிவாழும் மக்களால் உருவானது. ஒவ்வொரு ஆணும் பெண்ணும், சமுதாய மாளிகையினைத் தாங்கி நிற்கும் தூண்களாவார்கள். அவர்களின் ஒற்றுமையான வாழ்விலும், ஒத்துழைப்பிலும் தான் தனிப்பட்டோர் மேன்மை அடைகின்றார்கள். சமுதாயம் சீரிய அந்தஸ்தினைப் பெறுகிறது.

அந்தக் கூடிவாழும் கொள்கையைத்தான் விளையாட்டுக்கள் அதிகமாக வற்புறுத்துகின்றன. அதிகமாக வளர்த்தும் விடுகின்றன.

'நான்' 'நாம' என்ற தனித்தன்மையை மறந்து 'நாம்' என்ற பண்பு மிளிர ஒன்று சேரும் போது தான், நல்லவைகள் விளைகின்றன. அல்லவைகள் அகலுகின்றன.

விளையாட்டில் ஈடுபடும் குழந்தைகள் அதி விரைவிலேயே இவைகளை ஏற்றுக் கொள்கின்றனர். இதயத்தில் நிலை நாட்டிக் கொள்கின்றனர்.

இப்படிப்பட்ட அருமையான விளையாட்டுக்களை, எல்லா நிலையில் வாழ்கின்ற குழந்தைகளுக்கும் கொண்டு செல்வது தான் நாம் மேற்கொள்ள வேண்டிய முதன்மையான கடமை யாகும்.

வசதியற்ற குழந்தைகள் என்றால் பொருளாதாரத்தில் மட்டுமல்ல. இட வசதியிலும் தான்.

ஆர்வமுள்ள குழந்தைகள் விளையாட ஆடுகளங்கள் அமைப்பது. அவர்களுக்குத் தேவையான விளையாட்டுச் சாதனங்களை வழங்குவது. அவர்களின் ஆர்வத்தையும் ஆற்றலையும் ஆற்றுப்படுத்த பயிற்சியாளர்களை நியமிப்பது. அவர்கள் தாங்கள் பயின்ற திறமைகளை போட்டி வாய்ப்புக் களை விரிவுபடுத்துவது, பரிசுகள் வழங்கிப் பாராட்டுவது, பலப்பல சூழ்நிலைகளில் அவர்களை இலட்சியவாதிகளாக்கும் செயல்முறைகளைக் கற்பிப்பது எல்லாம், நமது இலட்சியத்தை நோக்கி நடத்திச் செல்கின்ற நல்ல வழிமுறைகளாகும்.

வாழ்வு என்பது எல்லோர்க்கும் பொதுமையானதாகும். வசதியுள்ளவர்கள் தான் வாழவேண்டும் என்பது உரிமைக்குப் பொருந்தாத நடைமுறை. வசதியற்ற குழந்தைகள், தாங்களை வளப்படுத்திக் கொள்ளவும், வலுப்படுத்திக் கொள்ளவும் வாய்ப்பளிப்போம்.

இயற்கையின் இனிய கொடைகளான காற்று. நீர், வெளிச்சம், போலவே, விளையாட்டும் இருக்கிறது


குழந்தைகள் விளையாட வசதியளிப்பது என்பதை நாம் திட்டமிட்டுச் செயல்படுத்த வேண்டும்.

ஆங்காங்கு நல்ல விளையாட்டுத் திடல்களை அமைப்பது ஒன்றே அருமையான பயன்களைத் தந்துவிடும். அந்த அளவில, விளையாட்டுத் திடல்கள் அமைக்கும் ஓர்

அமைப்பையே உருவாக்கி விட்டால், எதிர் வரும் தடங்கல்கள் யாவையும் தகர்த்தெறிந்து விடலாம்.

ஆகவே, விளையாட வசதியற்ற குழந்தைகளுக்கு, நல்ல பல வாய்ப்புகளை வழங்குவதன் மூலம் வாழ்வளிப்போம். அவர்களின் வருங்காலத்தை வளமாக்குவோம் வலிமை மிகுந்த சமுதாயத்தை உருவாக்குவோம். இத்தனை சக்தி மிகுந்த விளையாட்டின் பெருமையை எல்லா மக்களிடையேயும் எடுத்துரைக்கும் பணியினைச் செய்வோம், என்று உறுதியுடன் செயல்படுவோர்,

வெற்றி பெறுவோம்.



# 15. விளையாட்டு நாடகங்கள்

## 1. இப்படி ஒரு ஆட்டம்

இடம் - ராஜாவின் வீடு

உள்ளே : அப்பா, ராஜா, சாந்தி,

ராஜா : அப்பா என்னவோ எழுதுறீங்களே ..?

அப்பா : தொந்தரவு செய்யாம இரு ! ஒரு பயங்கரமான கதை...

ராஜா : துப்பறியும் கதையா இல்லே மர்மக் கதையாப்பா?

அப்பா : இது காட்டு மிராண்டிங்க கதை !

ராஜா : அப்ப வேட்டையாடுற கதன்னு சொல்லுங்க !

அப்பா : இல்லே ! இது விளையாட்டுக்கதை.... வேகம்... வெறி... பயங்கரம்... படுகொலை... ரத்தம்.

ராஜா : டேயப்பா (பயந்தபடி) என்னப்பா பய முறுத்துறீங்க?

அப்பா : வளைகோல் பந்தாட்டம் அப்படித் தான் இருக்கும்.

ராஜா : வளைகோல் பந்தாட்டம்னு என்னப்பா ?

அப்பா : இங்கிலீஷல ஹாக்கின்னு சொல்வாங்க. அதைத் தான் நான் தமிழில் வளைகோல் பந்தாட்டம்னு சொல்றேன்.

ராஜா : அதெப்படி பொருந்தும் ?

அப்பா : விளையாடறதுக்கு உதவறது வளைந்தகோலும் பந்தும்தானே ! முதல்ல வளைஞ்ச குச்சியாயிருந்தது. அப்புறம் அது மாற்றப்பட்டு வளைந்த கோலாயிடுச்சு. அதை வச்சி பந்து விளையாடறதுனுலதான், வளைகோல் பந்தாட்டம்னு பேர் வந்தது.

ராஜா : கேட்கறதுக்கு நல்லா இருக்குற மாதிரியே சொல்றதுக்கும் சுலபமா இருக்குப்பா ! அதுசரிப்பா, அந்தக் காட்டு மிராண்டி கதையை...

அப்பா : அது காட்டு மிராண்டி கதை இல்லை காட்டு மிராண்டிங்க கதை. ஆதிகால ஆட்கள் மாதிரி காட்டுல வசிச்சவங்க.

ராஜா : அப்ப காட்டுளுங்க கதைன்னு சொல்லலாமே !

அப்பா : காட்டான் கோட்டான்னு சொன்னு ! அப்புறம் நான் கதையே சொல்ல மாட்டேன் போ !

ராஜா : அப்பா அப்பா தப்பு தப்பு...

அப்பா : அப்படி வா வழிக்கு. உனக்கு சிவப்பிந்தியர்கள்னு யாருன்னு தெரியுமா ?

ராஜா : தெரியுமே ! பூகோளத்துல வந்திருக்கு. கறுப்பா இருக்கறதுனுலதான நாமெல்லாம் கறுப்பிந்தியர்கள். சிவப்பா இருந்ததினுல அவங்களுக்கு சிவப்பிந்தியர்னு பேரு வச்சாங்கன்னு படிச்சிருக்கேம்பா.

அப்பா : அவர்கள் புடிச்சா கரடிப்புடி, அடிச்சா மரண அடி !

ராஜா : எதிலேப்பா ?

அப்பா : விளையாட்டுலதான்.

**சாந்தி :** (உள்ளேயிருந்து) அப்பா! இதோ வந்திட்டேன் அப்பா! நான் வந்தப்புறம் கதையைச் சொல்லுங்க.

**ராஜா :** சொல்ல விட மாட்டாளே இந்த சாந்தி. கதையை நல்லா ஆரம்பிச்சாங்க, நந்தி மாதிரி வந்துட்டா சாந்தி!

**சாந்தி :** (மூச்சு வாங்கிக் கொண்டே) சொல்லுங்கப்பா இப்ப சொல்லுங்க!

**அப்பா :** செவ்விந்தியர்கள் ஆங்காங்கே கூட்டம் கூட்டமா வாழ்ந்துகிட்டு இருந்தாங்க அந்தக் காலத்துல! கூட்டம் கூடறது, வேட்டையாடறது, சாமி கும்பிடறது, ராத்திரில ஆடுறது. இதுதான் அவங்க வாழ்க்கை. இப்படி இருக்குற அவங்களுக்கு அடிக்கடி விளையாடணும்னு ஓர் ஆசை வந்துடும். ஒரு சவால் விட்டுட்டு ஆளுக்கு ஒருதடியை எடுத்துக்கிட்டுக் கிளம்பிடுவாங்க.

**ராஜா :** எங்கேப்பா? சண்டைக்கா?

**அப்பா :** விளையாடத்தான். விளையாடறதுக்கு இப்ப ஒரு குழுவுக்கு 11 பேர்தானே வேணும். ஆனல், அங்கே ஒரு குழுன்னு ஒரு கூட்டம்னு அர்த்தம்.

**சாந்தி :** ஒரு கூட்டமா?

**அப்பா :** குறைஞ்சது ஆயிரம் பேராவது இருப்பாங்க. காலையில கண் விழிச்ச உடனே அதாவது விடியற்காலையில கையில வளைஞ்ச தடியோடு இரண்டு கூட்டமும் வந்து ஒரு திடல் மத்தியிலே நிற்கும். திடல் எல்லை எவ்வளவு தூரம் தெரியுமா?

**ராஜா :** என்ன ஒரு நூறு கெஜம் இருக்குமாப்பா!

**அப்பா :** அது இந்த காலத்துல. அந்த காலத்துல இரண்டு கூட்டமும் வசிக்கிறது பாரு. அதுதான் எல்லைக்கோடு.

யார் பந்தை அடிச்சுக்கிட்டே போய் அடுத்தவங்க எல்லேக்கு அப்புறம் தள்ளுறாங்களோ, அவங்கதான் வெற்றி பெற்றவங்க.

சாந்தி : எவ்வளவு நேரத்துக்கு ஆடனும் ?

அப்பா : நேரமோ கணக்கில்ல, சூரியன் உதிக்கறப்போ ஆரம்பிக்கற ஆட்டம், மாலையில சூரியன் மறையிற வரைக்கும் ஆடனும்.

ராஜா : அடேயப்பா அவ்வளவுநேரமா ? அவங்களுக்கு அசதியாயிருக்காதாப்பா ?

அப்பா ! விளையாட்டுன்னு அசதி இருக்கும். வெறி வந்துட்டதுன்னு அசதியாவது வசதியாவது...

சாந்தி : எப்படி விளையாடுனுங்க ?

அப்பா : கட்டையில செய்த ஒரு மரப்பந்தானது ரெண்டு கூட்டத்துக்கும் மத்தியில கிடக்கும். பந்தை அடிக்கலாம்னு சொன்ன உடனேயே எல்லோரும் பந்தை அடிக்க ஆரம்புச்சுடுவாங்க. எதிரில் பந்து கிடந்தா பந்தை அடிப்பாங்க. தடுக்க வந்துட்டா—ஆள் கிடைச்சா ஆளு! கால் கிடைச்சா காலு, தலை கிடைச்சா தலை இப்படி கண்ணுமண்ணு தெரியாம அடிப்பாங்க.

ராஜா : (திடுக்கிட்டு) ஆள் மேல் பட்டா—

அப்பா : அதோகதி தான். மண்டை உடையும். கால் கை ஒடியும். ரத்தம் கொட்டும். ஆளே குளோஸ்தான். அவங்க நோக்கமே அதுதானே.

சாந்தி : எதுப்பா ஆளை சாகடிக்கறதா!

அப்பா ; ம்ஹூம் ! எதிரில் வந்து இடைஞ்சல் பண்ணுனா எரிச்சல் வராதா ? கூட்டத்தை குறைச்சு பந்தை கொண்டு போக வேண்டாமா ? ஆட்டம் முடிஞ்ச பிறகு பார்த்தா அங்கங்கே இறந்தவங்களோட பிணந்தான்

கிடக்கு'. அதைப்பற்றி யாரும் கவலைப் படவோ கண்ணீர் சிந்தவோ மாட்டாங்க. எதிரியோட எல்லைக்குப் போய் வெற்றியடையுற ஒண்ணுதான் அவங்களோட இலட்சியம்.

**ராஜா :** வெற்றியடைஞ்சுட்டா அதுக்கு என்னப்பா பரிசு கிடைக்கும்?

**அப்பா :** வெற்றிக்கு வெற்றி தான பரிசு! எதுக்கு? சவாலை ஏத்துக்கிட்டு சமாளிச்சு முன்னேறின ஒரு திருப்தி. அந்த திருப்திக்காக எத்தனை பேர் சாக வேண்டியிருந்தது. எல்லாம் வெறிதான்.

**சாந்தி :** இப்படி ஒரு ஆட்டமா?

**அப்பா :** செவ்விந்தியர்கள் இப்படி பயங்கரமா காட்டில ஆடின ஆட்டந்தான் கொஞ்சங் கொஞ்சமா முன்னேறி பல நாட்டிலும் பரவியது.

**ராஜா :** அப்பவாவது இந்த மாதிரி அக்ரமம் நடக்காம இருந்துச்சாப்பா?

**அப்பா :** அதெப்படி மாறும்? அயர்லாந்துல இதுக்குக் 'கர்லி'ன்னு பேரு. ஒரு போட்டி ஆட்டம். ஆயிரக் கணக்கான பேரு சுற்றி இருந்து விளையாட்டை வேடிக்கை பார்த்தாங்க. விளையாடி முடிஞ்ச பிறகு, அந்த ஆட்டத்தில் வெற்றி பெற்றவர்களுக்கு என்ன வெறி வந்ததோ தெரியலை. தோத்த குழுவில் உள்ள அத்தனை பேரையும் ஆடின கோலாலேயே அடிச்சுக் கொன்னுட்டாங்க.

**இருவரும் :** அப்புறம் (திடுக்கிட்டு)

**அப்பா :** அப்புறம் என்ன? காட்டில இருந்து நாட்டுக்கு வந்த பிறகு கூட இந்தக் கோல் பந்து ஆட்டத்துல கொடூரம் மறையலே. காலம் போகப்போக கடுமையும் கொடுமையும் மாறி, கனிவா கனியத் தொடங்கிடுச்சு!

எல்லா நாடுகளுக்கும் இந்த மாதிரி ஆட்டம் பரவியது. அதனாலே நாட்டுக்கு ஒரு பேரு, ஆட்டத்துக்கு ஒரு சட்டம்னு மாறிப்போச்சு.

சாந்தி : எந்தெந்த நாட்டில் என்னென்ன பேருன்னு சொல்லுங்கப்பா ?

அப்பா : அயர்லாந்து நாட்டில 'கர்லி'. ஸ்காட்லாந்து நாட்டுல 'சிந்தி' வேல்ஸ் நாட்டுல 'பந்தி' பிரான்ஸ் நாட்டுல 'ஹாக்கெட்'.

ராஜா : ஹாக்கெட்னு என்னப்பா ?

அப்பா : ஆடு மேய்க்கிற இடையன் கையில் வளைந்த கோல் இருக்கு பாரு. அதுக்குத் தான் பிரெஞ்சு மொழியில ஹாக்கெட்டுன்னு பேரு. பிரான்ஸ் தேசத்தி லிருந்து இங்கிலாந்துக்கு இந்த விளையாட்டு பரவிய போது, காக்கெட் என்ற பிரெஞ்சுச் சொல்லை 'காக்கே' என்று இங்கிலீஷ்காரர்கள் உச்சரிக்கத் தொடங்கினார்கள்.

சாந்தி : அந்த காக்கே தான் இப்படி ஹாக்கியா மாறிடுச்சு இல்லையாப்பா ?

அப்பா : ஆமா! 1850ம் ஆண்டிலதான், இந்த விளையாட்டு ஒரு மாதிரியா தெளிந்த விளையாட்டா மாறி பல முறை யான விதிகளுக்கு உட்பட்டது. அதனாலதான் முரட்டுத் தனமா ஆடுறதும், முட்டாள் தனமா ஆளை அடிக்குறதும் போன்ற, போக்கெல்லாம் மாறி ஒரு புது விளையாட்டா உலகெங்கும் பரவத் தொடங்கிடுச்சு.

ராஜா : ஏம்பா! அப்ப இங்கிலாந்துலதான் இந்த ஆட்டம் பிறந்தது வளர்ந்ததுன்னு சொல்றீங்களா ?

அப்பா : பாரசீகத்தில இப்படி ஆடியிருக்காங்க. கிரேக்கத் துல, ரோம்ல அமெரிக்காவிலயெல்லாம் இந்த விளை யாட்டின் வடிவம்போல ஒருவகை விளையாட்டை ஆடி

வந்ததாக வரலாறு இருக்குது. ஆனா முழுமையடைஞ்ச விளையாட்டா வந்தது இங்கிலாந்திலயிருந்துதான் என்பது வரலாறு காட்டுற ஆதாரம்

**சாந்தி :** இன்னும் ஒரு சந்தேகம்பா.

**அப்பா :** என்ன சந்தேகம்?

**சாந்தி :** வளைகோல் பந்தாட்டம்னு சொன்ன உடனே இந்தியா தானேப்பா எல்லோருக்கும் ஞாபகம்வருது. நம்ம நாட்டைப் பத்தி நீங்க ஒன்னும் சொல்லவே இல்லையே?

**அப்பா :** பயங்கரமான கதையில் தான் நான் ஆரம்பிச்சேன். சுமார் கி.மு. 2500 ஆண்டுகளுக்கு முன்பே நம்ம நாட்டில இதுபோல வளைந்த கோலோடு ஆடுற பந்தாட்டம் ஒன்றை மக்கள் விளையாடி வந்திருக்கிறாங்க என்பதற்கு பல சான்றுகள் கிடைச்சிருக்கு.

**இருவரும் :** சொல்லுங்கப்பா.

**அப்பா :** ஹாரப்பா, மொகஞ்சோதரா என்ற இடங்களில் புதைபொருள் ஆராய்ச்சி செய்து கண்டுபிடிக்கப்பட்ட சிந்து சமவெளி நாகரீகம் தான் மிகப் பழைய நாகரிகம். நம்ம நாட்டு மக்கள் அப்பவே சதுரங்கம், பந்து விளையாட்டு ஆடியதாக ஆதாரம் இருக்குது. அதைப்போலவே நம்மநாட்டு புராணங்கள், இதிகாசங்கள் எல்லாவற்றிலுமே, நிறைய குறிப்பும் வருது. அதைவிட இன்னொரு அற்புதமான ஆதாரம் ஒன்று. கி. பி 5ம் நூற்றுண்டு எல்லோரா குகைச் சிற்பங்களில் கிருஷ்ணனுடைய சகாக்களான இரண்டு இடையர்கள், வளைந்த கோலுடன் நின்று ஒரு பந்தை விளையாடுவதுபோல ஒரு ஓவியம் வரையப் பட்டிருக்கு!

**ராஜா :** அப்படின்னு, நம்ம நாடுதான் எல்லோருக்கும் முந்தி இல்லியாப்பா?

**அப்பா :** அப்படித்தான் இருக்கணும். இல்லேன்னு எத்தனையோ விளையாட்டுக்கள் கால் பந்தாட்டம், கைப் பந்தாட்டம், கூடைப்பந்தாட்டம் போன்றவைகள் நம்ம நாட்டுக்கு இறக்குமதியா வந்த பிறகுங்கூட நம்ம நாடு ஒரே விளையாட்டுலதான் வெற்றிக்கொடி நாட்டியது எதுல? நம்ம வளைகோல் பந்தாட்டத்திலதான்.

**சாந்தி :** இதுலயிருந்து என்னப்பா புரியுது?

**அப்பா :** விட்டகுறை, தொட்டகுறை மாதிரி ஆதிகாலத்துல நம்ம முன்னோர்கள் ஆடிய ஆட்டம், பரம்பரை பரம்பரை உணர்வோட இப்ப பிரபல்யமா ஆயிடுச்சு. முப்பது நாற்பது வருஷமா நம்ம நாடுதானே உலகத்திலே வெற்றி நாடா வந்திருக்கு.

**ராஜா :** இப்ப எப்படிப்பா?

**அப்பா :** ஆனைக்கும் அடி சறுக்கும்னு சொல்வாங்களே அதுபோல, நம்ம நாட்டுக்கும் அடிக்கடி சறுக்க ஆரம்பிச்சுடுச்சு. பக்கத்து நாடான பாகிஸ்தான் கிட்டேயே பலமுறை தோத்துடுச்சு பாவம்.

**சாந்தி :** யாருப்பா ?

**அப்பா :** நாமதான். தோல்வியை தாங்கிக்க முடிஞ்ச நெஞ்சத்தாலே, வெற்றியை எட்டிப்பிடிக்க வேண்டும்ங்கற எண்ணத்தை ஏற்படுத்திக்க முடியலியே! காலம்தான் பதில் சொல்லணும். கடவுள்தான் நம்ம வீரர்களுக்கு வேகத்தையும் விவேகத்தையும் கொடுக்கணும்

**ராஜா :** கவலைப்படாதீங்கப்பா! இனிமே நம்ம நாட்டுக்குத் தான் வெற்றி. இதோ நானே தினந்தோறும் விளையாண்டு பழகி...

**அப்பா :** ஆமாண்டா ராஜா! இனிமே இளையதலைமுறையை நன்கு பயிற்சி கொடுத்துப் பழக்கினால் தான், பயன் கிடைக்கும். முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார்.

**ராஜா :** எனக்கு விடை கொடுங்கப்பா விளையாடப் போறேன். வெற்றி எனக்கே... இல்லல்லே வெற்றி பாரதத்துக்கே!

(சிரிக்கின்றனர்)



# 2. பந்து படுத்தும் பாடு!

அப்பா : சாந்தி! அம்மா எங்கே?

சாந்தி : சண்டைக்கு போயிருக்காங்கப்பா!

அப்பா : சண்டைக்கு போயிருக்காளா! எங்கே? சைனாவுக்கா? பாகிஸ்தானுக்கா?

சாந்தி : பக்கத்து வீட்டுக்கு,

அப்பா : என்ன சமாசாரம்?

சாந்தி : எல்லாம் ராஜாவால வர்ர வினைதான், சும்மா இருந்தாதானேப்பா!

அப்பா : என்ன செய்தான்!

சாந்தி : விளையாடப் போனான், விளையாட்டு வினையாயிடுச்சு.

அப்பா : ஒண்ணும் புரியலையே.

சாந்தி : ராஜா நம்ம தோட்டத்தில் பந்து விளையாடியிருக்கான். அது துள்ளிக் குதிச்சு பக்கத்து வீட்டுக்கு போயிடுச்சு. அந்த மாமி பந்தை எடுத்து வச்சுக்கிட்டு தரமாட்டேன்னு அடம் புடிக்குரு.

அப்பா : மாமி அடம் புடிக்கரு... உங்க அம்மா சண்டை புடிக்கரு. இந்த பந்துனாலே எப்பவும் சண்டை தான் வரும் போலிருக்கு!

சாந்தி : பந்துன்னு சண்டையா ? என்னப்பா ?

அப்பா : பந்தோட கதையே சண்டையில தாம்மா பிறந்திருக்கு. அப்படீன்னு ஒரு பெரிய கதையே இருக்குதும்மா.

சாந்தி : பந்துக்கும் ஒரு கதையா ? சொல்லுங்கப்பா, (அவசரம்)

அப்பா : கதைன்னு காதை நீட்டிகிட்டு வந்து நிற்பானே ராஜா ! எங்கே அவன் ? போய் அழைச்சுகிட்டு வந்துடு!

ராஜா : வேண்டாம்பா, நான் உங்க பின்னால தானே நிக்கறேன்.

அப்பா : எப்படி கரெக்டா இங்கே வந்தே ?

ராஜா : எனக்கு என்னமோ மூக்கு வேர்த்துக்கிட்டே இருந்தது. என்னமோ ஏதோன்னு வீட்டுக்குள்ளே வந்தேன். வந்தா... நீங்க கதையோட காத்துக்கிட்டே இருந்தீங்க. சீக்கிரம் சொல்லுங்கப்பா.

அப்பா : எகிப்துன்னு ஒரு நாடு இருக்குது. உங்களுக்கு தெரியுமா ?

சாந்தி : நல்லா தெரியுமே. புகழ் வாய்ந்த பிரமிடுகள் அங்கே தானே இருக்கு.

அப்பா : கரெக்ட் ! அந்த நாட்டு மக்களுக்கு அழகை எவ்வளவு புடிக்குமோ, அவ்வளவு ஆசை சாமிங்க மேலேயும் உண்டு.

ராஜா : அப்ப ரொம்பசாமிங்க அந்த நாட்டுலே இருக்குமே!

அப்பா : ஆமா, எத்தனையோ சாமிங்க இருந்தாலும், ரெண்டே ரெண்டு சாமி தான் ரொம்ப சக்தி வாய்ந்தது, நல்லதை காக்குறதுக்கு ஒரு சாமி, ஒசரிஸ்னு பேரு.

கெட்டதை காக்கறதுக்கு ஒரு சாமி. அதுக்கு செட்டுன்னு பேரு

சாந்தி : நல்லதுக்கும், கெட்டதுக்கும் எப்பவும் சண்டையாப்பா ?

ராஜா : எலியும் பூனையும் மாதிரியாப்பா ?

அப்பா : ஆமா, ரெண்டு பேருல யார் அதிக சக்தியுள்ளவங்கன்னுற நினைப்புல அந்த போட்டி-சண்டை வரும்.

சாந்தி : அதாவது யார் பெரிய சாமின்னுட்டு தானேப்பா !

ராஜா : ஆசாமிக்கு தான் ஆணவம் இருக்கும். சாமிக்கு கூடவா ?

அப்பா : இதைக் கேளு. மழைக்காலம் வந்துட்டா கெட்ட சாமிக்கு ரொம்ப பலம் வந்துடும். அப்ப அது, அந்த நல்ல சாமியை அடிச்சு கொன்னுடும்.

ராஜா : ஐயோ பாவம் ! செத்து போன சாமி என்ன ஆகும்?

அப்பா : செத்து போன சாமி செத்தே தான் இருக்கும். ஆனா, மழை காலம் எல்லாம் போய் வசந்த காலம் வந்துட்டா, நல்ல சாமிக்கு உயிர் வந்துடும்.

சாந்தி : இது வேடிக்கையா இல்லியாப்பா?

அப்பா : வேடிக்கையே இனிமே தானே இருக்கு. சாமிக்கு உயிர் வந்துடுச்சுன்னு தெரிஞ்சதும், அதனோட பக்தர்கள் எல்லாம் ஒன்னு சேர்ந்து, ஆடம்பரமா ஆர்வமா விழா கொண்டாடுவாங்க.

ராஜா : அப்படியாப்பா ?

அப்பா : வாழ்க வாழ்கன்னு சத்தம் போட்டுக்கிட்டே ஊரெல்லாம் கொடி புடிச்சபடி ஊர்வலம் வந்து, அந்த நாட்டில் உள்ள பாப்ரமிஸ்னு பெயர் உள்ள கோயிலுக்கு செல்ல முயற்சிப்பாங்க !

**சாந்தி :** அப்படின்னு ?

**அப்பா :** ஏற்கனவே கெட்ட சாமி ஆளுங்க தானே அந்த கோயில புடிச்சு வச்சிருக்காங்க. அவங்களே இவர்களை உள்ளே விட மாட்டாங்க. ஊர்வலம் வந்தவர்களும் உள்ளே போகாம திரும்பமாட்டாங்க.

**ராஜா :** அப்புறம் என்ன ? சண்டை தானேப்பா ?

**அப்பா :** ஆமா! ரெண்டு கோஷ்டியும் போடுற சண்டையில தடி கொடி, கம்பு, இரும்புத்தூண், கல் எல்லாம் பயன் படும். போட்ட சண்டையில் ஆண், பெண், வித்தியாசம் இல்லாமல் அத்தனை பேரும் கொல்லப் பட்டிருக்காங்க.

**சாந்தி :** பரிதாபமாகவும் இருக்கு! பயங்கரமாகவும் இருக்கு!

**ராஜா :** வருஷா வருஷம் இப்படித்தான் இருக்குமாப்பா?

**அப்பா :** ஆமா! வருஷா வருஷம் சாமி சாகும். பொழைக்கும். சண்டை போடுற மக்கள் கூட்டமும் போகும் சாகும். ஆனா, பொழைக்காது. இப்படி நடந்தது ரொம்ப நாளைக்கு அப்புறம்தான் அந்த மக்களுக்கு புரிய ஆரம்பிச்சுது. இந்த மாதிரி சண்டையே வேண்டாம் மனுஷரோட மண்டையை மனுஷர் உடைக்குற இந்த மடத்தனம் வேண்டாம்னு சொல்லிட்டு ஒரு முடிவுக்கு வந்தாங்க.

**இருவர் :** என்ன முடிவுப்பா ?

**அப்பா :** பொம்மலாட்டம் பார்த்திருக்கியா ?

**இருவர் :** பார்த்திருக்கோம்.

**அப்பா :** அது மாதிரி பொம்மைகளை நிறைய செஞ்சுவச்சு, நல்ல சாமிக்கு ஒரு கூட்டம், கெட்ட சாமிக்கு ஒரு கூட்டம்னு பிரிச்சு விழா நடத்த வைச்சி அதுகளை தடிக் கம்பால தாக்க ஆரம்பிச்சுட்டாங்க.

**சாந்தி :** அங்கேயும் தாக்குதல்தானா ?

அப்பா : இரும்பு புடிச்சவன் கையும், சிரங்கு புடிச்சவன் கையும் சும்மா இருக்குமா ? அவங்க அடிச்ச அடியிலே பொம்மையோட உடம்பு உடைஞ்சது, உடைகள் கிழிஞ்சுது.

ராஜா : எதுவுமே மீதியில்லையாப்பா ?

அப்பா : இருந்தது உன் தலை,

ராஜா : என் தலையாப்பா ?

அப்பா : இல்லை... இல்லை... பொம்மைகளோட தலைங்கதான். பொம்மையோட வெறும் தலை மட்டும் இருந்ததை குறி பார்த்து அடிக்கத் தொடங்கினாங்க, கீழே விழுந்து உருண்டு ஓடின தலையை, விரட்டி விரட்டி அடிச்சாங்க.

சாந்தி : தலை எப்படிப்பா உருண்டோடும் ?

அப்பா : பொம்மையோட தலையை உருண்டையா செஞ்சு வச்சிருந்தாங்க இல்லையா ! அது உருண்டையா செஞ்சு வச்சிருந்தாங்க. அது உருண்டோடியதையும், அதை ஓடி வந்து குச்சியாலே அடித்ததையும் மாறி மாறி மத்தவங்க அடித்ததையும் பார்த்துத்தான், இந்த பந்தே உருவாகி இருக்கிறது என்பது தான் கதை.

ராஜா : பொம்மையோட தலை யாப்பா பந்தா வந்திடுச்சு ?

அப்பா : எகிப்தியர்கள் இப்படி ஒரு கதையை எழுதி வச்சி நம்பிக்கிட்டு இருந்தாங்க மற்றவங்க என்ன சொல்றாங்க தெரியுமா ?

சாந்தி : அதுக்கு வேற கதையாப்பா ?

அப்பா : இதையும் கேளும்மா. பூமிக்கு இழுக்குற சக்தி இருக்குதுன்னு நியூட்டன் எப்படி கண்டுபிடிச்சார்னு தெரியுமா ?

**சாந்தி :** ஆப்பிள் பழம் மரத்துல இருந்து கீழே விழுந்ததைப் பார்த்துட்டுத்தான் சொன்னாரு.

**அப்பா :** அதே தான் பந்து வந்த கதைக்கும் பொருந்துது.

**இருவர் :** புரியலியேப்பா?

**அப்பா :** பொந்திலும் புதிரிலும் வாழ்ந்த காட்டுமிராண்டி மனிதர்கள், வேட்டை ஆடியும், வீடு கட்டியும் வாழத் தொடங்கிய பிறகுதான், ஓய்வெடுக்க ஆரம்பித்தார்கள், அப்பொ, பொழுது போக்குவதற்காக எத்தனையோ வேலைகள் செய்தாலும், உருண்டைக் கூழாங்கற்களைத் தள்ளி தள்ளி வேடிக்கையும் பார்த்தனர். உருண்டு ஓடுறதுக்குரிய பொருள் சின்னதாகவே இருந்தது. பெரிசா மரத்தலாலே எப்படிங்கறது தான் அவர்களுக்குப் புரியேலே.

**ராஜா :** அப்ப தான் பழம் மரத்திலேயிருந்து விழுந்ததோ?

**அப்பா :** ஆமா! பழம் விழுந்து உருண்டோடுவதை பார்த்த பிறகு, அவங்க பழங்களையும் உருட்டி மகிழ்ந்தாங்க, அழுகிப் போற பழம் எத்தனை நாளைக்கு உதவும்?

**சாந்தி :** அழுகிப் போனதை தூக்கி எறிஞ்சிட்டு அடுத்த பழத்தை....

**அப்பா :** அதான் இல்லே. பழத்தை பார்த்தாங்களா? உருண்டைக் கூழாங்கற்களையும் பார்த்தாங்க. பழம் போலவே மரத்தால உருண்டையா கட்டை பந்து செய்து விளையாண்டாங்க.

**ராஜா :** கட்டைப் பந்து அடிச்சாதானேப்பா ஒடும்?

**அப்பா :** ஆமா! தப்பி தவறி மேலே பட்டா வலிக்குமே, அதனாலே துணிகளை சுருட்டி, உருண்டையா பந்தாக்கிக் கிட்டாங்க. காலம் மாற மாற, துணிகளுக்குப் பதிலா

துணிகளையும், நூல்களையும் சேர்த்து, தோலை அதன் மேற்போர்வையாக வைச்சு தைச்சுட்டாங்க.

சாந்தி : ஆமா. அந்தப்பந்து அழுக்காகாமெ இருக்கனுங் கறது தானேப்பா நோக்கம்!

அப்பா : பிறகு தோலையே பையாக்கி, அதுக்குள்ளே மனுஷரோட தலை முடியை திணிச்சு பந்தாக்கிட்டாங்க! மனுஷன் தலை முடி நிறையவேணும்னு எங்கே போறது?

ராஜா : திருப்பதிக்குப் போக வேண்டியது தான்.

சாந்தி : குறுக்கே பேசாதேடா கிறுத்துத்தனமா! நீங்க சொல்லுங்கப்பா.

அப்பா : தலைமுடியும் போச்சு! தோல் பைக்குள்ளே மெல்லிய தோல் பையை நுழைச்சு அதுல காத்து அடிச்சு பந்தாக்கிட்டாங்க.

ராஜா : அதுதான் பந்து துள்ளுதாப்பா?

அப்பா : துள்ளுற பந்து வந்த பிறகு தான், விளையாட்டிலேயும் வேகம் வர ஆரம்பிச்சுது, விளையாட்டும் பல மாதிரியா பிரிஞ்சுது.

சாந்தி : அதெப்படி அப்பா பந்து வந்தா பல விளையாட்டு வரும்?

அப்பா : பந்தே பல தினுசா மாறும் போது, விளையாட்டு மட்டும் எப்படி மாறாமெ இருக்கும்? கல்லு மாதிரி கனமா இருக்குற கிரிக்கெட் பந்து. காத்து மாதிரி இருக்குற மேசை பந்தாட்டம்; மெத்தை மாதிரி இருக்குற மென் பந்தாட்டம்; கட்டை மாதிரி உருள்ற பிலியர்ட்ஸ் ஆட்டம். இப்படி பந்தாட்டம் பல மாதிரியா ஆயிடுச்சு...

ராஜா : பந்துதான் இப்படி விளையாட்டுக்குக் காரணம்னு நினைச்சேன்.

**சாந்தி :** அதே பந்துதான் பல விளையாட்டுகள் உண்டாகுறதுக்கும் காரணமா இருந்துருக்கு.

**அப்பா :** ஆமா! பணம் பத்தும் செய்யும்னு சொல்வாங்க. இங்க பார்த்தீங்களா. பந்து பத்தும் செய்திருக்கு.

**ராஜா :** ஆமாம்பா!! பந்து பத்தும் செய்திருக்கு! அம்மா சண்டை போட்டு முடிச்சாச்சு.

**சாந்தி :** அப்பாவும் கதை சொல்லி முடிச்சாச்சு...


**ராஜா :** நான் பந்து விளையாட புறப்பட்டாச்சு.

**அப்பா :** நானும் சாப்பிட புறப்பட்டாச்ச. (உள்ளிருந்து அம்மாவின் குரல்)

**அம்மா :** எல்லோரும் வாங்க.

**ராஜா :** ஆமா! ஆமா! போகலாம்! போகாட்டி அம்மா நம்மை பந்து மாதிரி உதைக்கப் போறாங்க... வாங்க வாங்க !

(சிரிக்கின்றனர்)



# 3. சதிராடும் சதுரங்கம்!

உள்ளே : அப்பா, ராஜா, சாந்தி

[ அப்பாவும் அண்ணனும் சதுரங்கம் ஆடிக் கொண்டிருக்கின்றார்கள். அதைப் பார்த்து, சற்று எரிச்சலாக சாந்தி பேசுகிறாள்.)

சாந்தி : அப்பாவுக்கும் அண்ணனுக்கும் வேறவேலையே இல்லே! எப்பப் பார்த்தாலும் கன்னத்துல கையை வைச்சுகிட்டு, கண்ணை அந்தப்பக்கம் இந்தப்பக்கம் திருப்பாம இந்த செஸ் ஆடிக்கிட்டே இருக்குறது! இது எப்பதான் முடியுமோ ? (ஏக்கத்துடன்)

ராஜா : இது செஸ் ஆட்டம். கொஞ்சம் மிஸ் பண்ணிட்டா எல்லாமே வீணாயிடும்! புரியுதா...

சாந்தி : குதிர் மாதிரி உட்கார்ந்துகிட்டே ஆடுறது நல்லா புரியுது. ம்... இப்படி எத்தனை நேரந் தான் ஆடாமெ அசையாமெ, சோம்பேறித்தனமா ஒரே இடத்தில் உட்கார்ந்து... உங்களுக்கு போரடிக்குலே...

ராஜா : பொறுமை இல்லாட்டி திறமை எப்படி வரும்? அறிவுங்கறது கொஞ்சங் கொஞ்சமாத்தான் வரும். வளரும். அடிக்குற மல ழையில, முளைக்குற காளான் இல்ல.. புரியுதா ? உனக்கெங்க புரியப் போகுது ?

சாந்தி : நீ என்ன என்னைப் பார்த்து புரியுதா புரியுதான்னு கேக்குற? இந்த ஆட்டத்தைப் பத்தி உனக்கென்ன தெரியும் ?....

ராஜா : எனக்கு எல்லாமே தெரியும். அப்பா என்கிட்டே சொல்லியிருக்காரு ... சொல்லட்டுமா ?

சாந்தி : நீயோ அரை குறை.... தப்பும் தவறுமா சொல்லிட்டா அதை நான் போய் நாலு பேருகிட்ட சொன்னு, உதை தான் கிடைக்கும்.

ராஜா : ஓ! (சமாளித்தல்) நீ அதை சொல்றியா... அப்பா சொன்னு ஆயிரம் தடவை கேட்டாலும் அலுப்பு தட்டாதே! சரி அப்பாவையே கேட்போம், அப்பா... இந்த கதையை கொஞ்சம் நீங்களே சொல்லுங்கப்பா—

அப்பா : விளையாடிக்கிட்டு இருக்கேன், முடியட்டும் சொல்றேன் !

சாந்தி : உங்க ஆட்டம் எப்ப முடியறது ? நாங்க எப்ப கேட்குறது ? அதுக்குள்ளே ஆட்டத்துமேல உள்ள ஆசையே முடிஞ்சு போயிடும்பா !

ராஜா : அப்பா! நீங்க சொல்லுங்கப்பா! செஸ் ஆட்டத்தை 'போர்'னு சொல்ரு. புரியாத புதிர்னு சொல்ரு... ஆடுறவங்களை அசையாத பதிர்னு கிண்டல் பண்ரு— எனக்கு வெட்கமா இருக்கு!

அப்பா : அவ்வளவு தூரத்துக்கு வந்தாச்சா.... ராஜா... உனக்கு வெட்கம் போற மாதிரி கதை சொல்றேன். சொல்லட்டுமா!

சாந்தி : என்னப்பா... அண்ணனுக்கு வெட்கம் போகணுமா! அது இருந்தாதானே!

அப்பா : ராஜா.... நீ உடம்பை முறுக்காதே... நான் உன் கட்சிதான். நம்ம செஸ் ஆட்டத்தை அவ்வளவு லேசா

விட்டுடுவேனு .. இங்க பாரு சாந்தி ! உனக்கு செஸ்னு என்ன அர்த்தம்னு தெரியுமா ?

**சாந்தி :** சதுரங்கம்னு கேள்விப்பட்டு இருக்கிறேன். அர்த்தம் தெரியாதுப்பா—

**அப்பா :** சதுர்... அங்கம்ங்கறது தான் சதுரங்கமா மாறி வந்திருக்குது, சதுர்னு நாலுன்னு அர்த்தம். அரசர்கள் கிட்டே இருக்கிற நான்கு படைகளையும் குறிக்குற பேருக்குத்தான் சதுரங்கம்னு பேரு.

**ராஜா :** அதாவது, ரத கஜ துரக பதாதிகள்னு அர்த்தம்.

**சாந்தி :** (திகைப்புடன்) அதென்னப்பா ரதகஜ துரக பதாதிகள்... புரியலியே !

**அப்பா :** ரதம்னு தேர் ; கஜம்னு யானை; துரகம்னு குதிரை, பதாதின்னு வீரர்கள்னு அர்த்தம். தேர்ப்படை, யானைப் படை, குதிரைப் படை, காலாட்படை என்ற நான்கு படைகளையும் வச்சி விளையாடுற விளையாட்டுக்குத் தான், சதுரங்கம்னு பேரு வச்சாங்க...

**சாந்தி :** ஏம்பா... அப்ப இது நம்ம நாட்டு ஆட்டம் இல்லியாப்பா ?

**ராஜா :** இல்ல சாந்தி... இதை உலகம் பூரா ஆடியிருக்குது. அதைப் போல நம்ம நாட்டிலேயும் இருந்திருக்குது. அவ்வளவு தான்.

**சாந்தி :** உலகம் பூரா இந்த ஆட்டம் இருந்து இருக்கா ?... எந்தெந்த நாடுப்பா ?

**அப்பா :** கிரேக்கம், ரோம், அரேபியா, பாபிலோனியா, சீனு, ஐரோப்பிய நாடுகள், இந்தியா, இராக்... எல்லா நாட்டிலேயும் இது ஆடப்பட்டு வந்தாலும், இதை ஆடுனவங்க அத்தனை பேருமே ராஜாக்கள் தான் ஆடியிருக்காங்க

கறது தான் ரொம்ப ஆச்சரியம். இதுக்கு பேரே ராஜா ஆட்டந்தான்.

**ராஜா :** அதனுல தான் நானும் ராஜாவாட்டம் இந்த ஆட்டத்தை ஆடுறேன். புரியுதா ?

**சாந்தி :** (எரிச்சலாக) நீ ராஜா இல்லே... கூஜா.

**ராஜா :** நீ சாந்தி இல்லே. காராபூந்தி.

**அப்பா :** அடடா ! ராஜான்னு சொன்னேன் ! அதுக்குள்ளே சண்டையா ?.... இப்படித்தான் அந்தக் காலத்து ராஜாக்கள் எல்லாம் அடிக்கடி சண்டை போட்டாங்க ! அதனுல தான் இந்த ஆட்டமே பிறந்திருக்கு !

**சாந்தி :** அதென்னப்பா அதிசயம் ? சண்டையா இந்த ஆட்டத்துக்கு காரணமா இருந்தது ? சொல்லுங்கப்பா— சீக்கிரம் சொல்லுங்க !

**அப்பா :** இந்தியாவை சிக்ராம்னு ஒரு ராஜா ரொம்ப காலத்துக்கு முன்னே ஆட்சி செஞ்சாராம். அவருக்கு சண்டைன்னு சர்க்கரைப் பொங்கல் மாதிரி ! அவர் தன் ஆயுள் காலம்பூரா போர்க்களத்திலேயே சண்டைபோட்டு கழிச்சுட்டாராம். சண்டை போட்டுக்கிட்டே இருந்தா வயசாகாமெ இருக்குமா ? அவருக்கு வயசு அதிகமானதும் முதுமை வந்திடுச்சு—

**சாந்தி :** வயசானு என்னப்பா கவலை ?

**அப்பா :** வயசு அதிகமாக போனதுனுலெ, அவரால சண்டைக்குப் போக முடியலே— என்னுல சண்டைக்குப் போகாமெ இருக்க முடியாதே— இதுக்கு என்ன பண்ணப் போறீங்கன்னு மந்திரிங்ககிட்ட சண்டை போட்டாரு சிக்ராம். மந்திரிங்க எல்லோரும் ஒண்ணு சேர்ந்து, நான்கு வகை சேனைகளும் போர்களத்துல மோதிக் கொள்ளுற மாதிரி, ஒரு ஆட்டத்தை கண்டு

பிடிச்சு, கொண்டு வந்து தந்தாங்களாம். சிக்ராம் சந்தோஷப்பட்டாராம்.

ராஜா : சிக்கல் தீர்ந்தது. சதுரங்கம் பிறந்தது. இது தானேப்பா கதை...

அப்பா : இது ஒரு கதை தானு ! இன்னும் 24 கதை இருக்கே...

சாந்தி : அடேயப்பா! சதுரங்க ஆட்டத்துக்கு இத்தனை கதையா ?

அப்பா : ஆராய்ச்சியாளர்களுக்கு கிடைச்சிருக்கற கதைகள் இவ்வளவுதான். இன்னும் கொஞ்சம் சிரமத்தை பார்க்காம ஆராய்ச்சி பண்ணினு, நிறைய கிடைக்கும்னு அறிஞர்கள் சொல்றுங்க.

ராஜா : அத்தனை கதைகளையும் சொல்லுங்க அப்பா ! சண்டைன்னு எனக்கு ரொம்ப பிடிக்கும் !

அப்பா : எல்லா கதைகளையும் நான் சொல்லப் போறதில்லை. கதைகளை எல்லாம் ஆறு வகையா பிரிச்சு, அதிலே உள்ள ஒவ்வொரு கதையா சொன்னு போதும்னு நினைக்கு றேன். கவனமா கேட்கணும்... கொஞ்சம் அசட்டையா இருந்தாலும் அப்புறம் கதை புரியாது. ஆமா !

ராஜா : சாந்தி : சரிப்பா...சொல்லுங்கப்பா !

அப்பா : பாரசீக நாட்டிலே ஒரு ராஜா, அவன் புலியை விட, பாம்பை விட கொடியவனு இருந்தான். அவன் தன் நாட்டு மக்களை புழுவை விட கேவலமா நடத்தினான். கொடுமைப் படுத்தினான். அவன் செய்யுற அட்ட காசத்தை சகிக்காத ஐஸ்டன்ங்கற தத்துவஞானி ஒருவர், இப்படி ஒரு சதுரங்க ஆட்டத்தைக் கண்டு பிடிச்சு ராஜா முன்னுல விளையாடிக் காட்டினர். அதுல ராஜாவை வீரர்கள் எப்படி காப்பாத்தறுருங்கறதை விளக்கமா

காட்டி, மக்கள் இல்லாட்டி மன்னன் இல்லேங்கற தத்துவத்தை அருமையா விளக்கிக் கூறுறார்...

சாந்தி: ராஜாவுக்கு அப்பத்தான் புத்தி வந்திருக்கும்.

ராஜா: பாருப்பா... எனக்கு புத்தி வந்திருச்சுன்னு சாந்தி சொல்ரு...

அப்பா: கவலைப்படாதே.... உனக்கு எப்பவுமே புத்தி வராது. (சாந்தியும் அம்மாவும் சிரிக்கின்றனர்)

ராஜா: புத்தி வந்திடுச்சு! அப்புறம் சொல்லுங்கப்பா...

அப்பா: மேல் நாட்டுல; ஒரு இளவரசன்! அவனுக்கு சண்டைன்னு ஒரே பயம். படைகளை எப்படி நடத்திச் செல்றது, சண்டை போடுறது எப்படின்னு தெரியாமலே வளர்ந்துட்டான். எதிரிகளோட ஒரு முறை சண்டை போடுறதுக்கு இவனுக்கு சந்தர்ப்பம் வந்தது. இளவரசனே நடுங்கிப் போய், பக்கத்திலே இருந்த மந்திரிகள் கிட்ட போய் எப்படி சண்டையை நடத்துறதுன்னு கேட்டான். அவனது பயத்தைப் போக்கவும், போர்க்களத்திலே எப்படி படையை நடத்தி வெற்றி பெறுவது என்பதையும், அனுபவப்பூர்வமா கத்து தர்றதுக்காக. சதுரங்க ஆட்டத்தை மந்திரிகள் கண்டுபிடிச்சாங்கன்னு ஒரு கதை.

ராஜா: ஏப்பா! சண்டை போடுறதுக்காகத் தான் இந்த ஆட்டத்தையே கண்டு பிடிச்சாங்களா?...

அப்பா: அப்படின்னு இல்லே... பொழுது போக்குறதுக்கும் சுறுசுறுப்பா இருக்கவும் தான் இந்த ஆட்டம் வந்ததுங்கறதுக்கு நிறைய ஆதாரம் இருக்கு.

சாந்தி: எங்கேப்பா?

அப்பா: சைனாவிலதான், சைனாவை ஹன்சிங்னு ஒரு அரசன் ஆண்டு வந்தான். அவன், தன் எதிரியை

எப்படியாவது ஜெயிக்கணும்குற அவசரத்தில. படையோட புறப்பட்டுட்டான். அவன் போன நேரம் பனி பெய்யுற நேரம். ஒரே குளிர். வீரர்களாலே வெளியே வந்து சண்டை போட முடியலே அதனால வீரர்கள் எல்லோரும் கூடாரத்துக்கு உள்ளேயே உட்கார்ந்துகிட்டு தூங்க ஆரம்பிச்சுட்டாங்க.

ஹன்சின் பார்த்தான், இப்படியே விட்டுட்டா, நம் வீரர்கள் எல்லோரும் சோம்பேறியா போயிடுவாங்கன்னு நினைச்சி, அவர்களை சுறுசுறுப்பா மாற்ற என்ன வழின்னு யோசிச்சான். ஏதாவது விளையாடிகிட்டு இருந்தாதான் வீரர்கள் சோம்பேறித்தனம் இல்லாம இருப்பாங்கன்னு முடிவுக்கு வந்து, அங்கு உள்ள அறிஞர்களுக்கு ஆணையிட்டான். அவர்கள் எல்லோரும் ஒன்று கூடி ஒரு ஆட்டத்தைக் கண்டு பிடிச்சாங்க அதுக்கு பேர் என்ன தெரியுமா? சோக் கூ ஹாங்கி.

**சாந்தி :** பொழுது போக்குறதுக்குன்னு ஒரு கதையா?

**அப்பா :** அதோடு மட்டுமல்ல...... அழுது வடிஞ்சவங்களுக்கும் ஒரு கதை. ஒரு அரசன் பெரிய வீரன். அவனுக்கு மனசுல ஏகப்பட்ட கவலை. என்ன கவலை தெரியுமா? போரிலே எல்லா எதிரிகளையும் ஜெயிச்சுட்டேன். இனிமே ஜெயிக்க யாருமே இல்லையேன்னு கவலைப் பட்டான். அந்த கவலையே அதிகமாக ஆக, அவன் கைகால் முடங்கிப் போச்சு.

அந்த அரசனுடைய மன நோயையும் உடல் நோயையும் தீர்க்க அவருடைய மந்திரிகள் யோசனை செஞ்சாங்க.

**ராஜா :** உடனே ஒரு ஆட்டத்தைக் கண்டு பிடிச்சாங்க. அப்படிதானேப்பா.

**அப்பா :** சரிதான்.

ராஜா : ஏம்பா ! கவலை எல்லாம் ராஜாவுக்கு தானு...ஒரு ராணிக்கு கூட வரலையா ?...

அப்பா : ஏன் வரலே! ... நிறைய ராணிகளுக்கு வந்திருக்கு து. அதுல ஒரு ராணி கதைய மட்டும் சொல்றேன். முஸ்லிம் நாட்டை ஒரு ராணி ஆட்சி செய்து வந்தாள். அவளுக்கு ரெண்டு மகன். அவனை முன்விரோதம் காரணமா அவளுடைய மூத்த மகனே குத்தி கொன்னுட்டான். அந்த சோகமான செய்தியை ராணி கிட்ட சொன்ன, ராணி உயிருக்கு ஏதாவது ஆபத்து வந்துடும். இல்லேன்னு சொல்றவங்க தலை பறி போய்டும்னு பயந்து யாருமே சொல்ல முன் வரலே.

அந்த மந்திரிகளில் கப்ளான்ங்கற மந்திரி ஒருத்தர், இந்த மாதிரி ஆட்டம் ஒன்றை கண்டு பிடிச்சு, ராணி முன்னுலே இரண்டு பேரை விளையாடச் சொன்ஞரு, ராணியும் ரொம்ப ஆர்வமா ஆட்டத்தைக் கவனிச்சு சந்தோஷப்பட்டுகிட்டு இருக்கிறப்போ, ஒருத்தன் 'ஷாமத்'னு கத்தினுன்.

சாந்தி : ஷாமத்துனு என்னப்பா அர்த்தம் ?

அப்பா : 'ஷான்னு' அரசன், 'மத்'னு செத்துப் போயிட்டானுன்னு அர்த்தம். அரசன் இறந்து போயிட்டாருன்னு சொன்ன உடனே, ராணிக்கும் வருத்தம். கொஞ்சம் கொஞ்சமா கப்ளான் உண்மை நிலையைச் சொல்லி, அவளோட மகன் செத்துப் போன விஷயத்தையும் விளையாட்டைப் போலவே விளக்கி, சமாளிச்சதா ஒரு கதை.

ராஜா : இப்படி ஒரு அசட்டுக் கதையாப்பா ?...

அப்பா : இதை விட பயங்கரமா ஒரு கதை இருக்கு... சொல்லட்டுமா...

ராஜா : பயங்கரமா... அப்படின்னு படுகொலையா இருக்கும் போலிருக்கே !

அப்பா : ஆமாம்! ஒரு காலத்துல, கிரேக்க நாட்டை கெடசாடு நேசல் என்ற அரசன் ஆண்டு வந்தான் அவனுக்கு ஆமல்மொடக்னு ஒரு மகன். என்ன காரணமோ தெரியலே மகனுக்கு அப்பாவை கண்டா மகா கோபம். ஒரு நாள் கோபப்பட்ட மகன், கத்தியை எடுத்துக்கிட்டு போய், துண்டந்துண்டமா அப்பாவை வெட்ட....

சாந்தி : (பயந்தவாறு) பாவிப்பய...

அப்பா : அந்தப் பாவி, தன் தந்தையை 300 துண்டமா வெட்டி, 300 பருந்துகளுக்கு இரையாக்கிட்டானும். அவனது பைத்தியக் காரத்தனமான வெறியை போக்கணும்னு அந்த நாட்டு அமைச்சர்கள் எல்லோரும் முயற்சி செய்து, சதுரங்க ஆட்டத்தைக் கண்டு பிடிச்சு, அமல் மொடக்கோட வெறியைத் தணிச்சு, நல்ல மனுஷனா மாத்திட்டதாக ஒரு கதை

ராஜா : என்னப்பா? கொலையை சொல்லி பயமுறுத்தறீங்க....

அப்பா : அப்பாவை மகன் கொன்னுன்னு கவலைப்படுறே. இந்த அப்பாவைப் பாரு! மகன் செத்து போயிட்டான்னு கேள்விப் பட்ட பிறகு, துடிச்ச துடிப்பை....

சாந்தி : யாருப்பா அந்த அப்பா...

அப்பா : முதல் மனுஷன்னு பைபிள் கூறுகிற ஆதாம் தான் அந்த அப்பா. அவருக்கு இரண்டு பையன்கள், ஆபேல் காயேய், இந்த காயேய் தான் மூத்தவன், தன் தம்பி மேல் கொண்ட பொறாமையினாலே, ஆபேலை அடிச்சு கொன்னுட்டான். இந்த சேதியை கேள்விப்பட்ட ஆதாம், மனம் கலங்கிப் போய், வேதனை தாங்க முடியாம தவிக்கும் போது, ஆறுதலுக்காகவும் மன அமைதிக்காகவும், இப்படி ஒரு ஆட்டத்தைக் கண்டு பிடிச்சு விளையாடியதாக ஒரு கதையும் உண்டு.

**ராஜா :** அப்ப எல்லா மதத்திலேயும் சதுரங்க ஆட்டத்தைப் பற்றிய கதை இருக்கு. இல்லியாப்பா ?

**அப்பா :** ஆமா... முகம்மது நபி கூட இந்த ஆட்டத்தை விரும்பி ஆடியதாக ஒரு சரித்திர குறிப்பு கூட இருக்குது. அந்த கதையெல்லாம் நான் ஏன் சொன்னேன்னு; சதுரங்க ஆட்டம் ஒரு ராஜ பரம்பரை விளையாட்டுன்னு சொல்லத் தான்.

**ராஜா :** அதெப்படி... இதை ராஜபரம்பரை விளையாட்டுன்னு சொல்ல முடியும் ?

**அப்பா :** கிறிஸ்து பிறப்பதற்கு 6000 வருஷங்களுக்கு முன்னே, எகிப்து ஈராக் போன்ற தேசங்களை ஆண்ட சக்கரவர்த்திகளுடைய கல்லறையைத் தோண்டி பார்த்த பொழுது, சதுரங்கம் ஆடுற பலகையும் ஆட்டக் காய்கள் இருந்ததாகக் கண்டு பிடிச்சிருக்காங்க.

அங்கேயிருந்து தொடங்கி, நான் சொன்ன கதை பூராவும் பார்த்தா, எல்லா கதைகளிலும் ராஜா, ராணி, மந்திரி, தளபதி, மதகுரு இப்படித்தான் ஆட்கள் வந்திருக்கிறார்களேயொழிய, சாதாரண மனிதர்கள் ஒருத்தருமே இல்லை பார்த்தியா... அதனாலதான் சொன்னேன். இது ராஜபரம்பரை ஆடுற ஆட்டம்.

**சாந்தி :** இப்ப ராஜா ஆடுறானே... அவனும் ராஜபரம்பரை தானே ?

**ராஜா :** ஏண்டி எதற்கெடுத்தாலும் என்னையே இழுக்குறே...

**அப்பா :** இரும்மா நான் சொல்றேன் ! ராஜபரம்பரை, அவர்களுக்கு தொடர்பினரான பிரபுக்கள், அவருடைய வம்சத்தினர் இப்படியே மாறி மாறி. அறிவுள்ளவர்கள் மட்டுமே ஆடமுடியும்ங்கற நிலமைக்கு வந்து, இப்ப.

சதுரங்க ஆட்டம் அறிவாளிகள் ஆட்டம்னு மாறி வந்தாச்சு—

ராஜா : கேட்டியா சாந்தி ! என்னைப் போல அறிவாளிகள் தான் இந்த ஆட்டத்தை ஆடுறாங்க தெரியுமா....

சாந்தி : ராஜாவைப் போல அறிவாளியா... (சிரிக்கிறார்கள்)

அப்பா : பெரிய பெரிய மேதைகளுக்கு எல்லாம் இந்த ஆட்டம்ன்னு உயிர்தான். சொல்றேன் கேளு—கிரேக்கத் தத்துவ ஞானிகள் சாக்ரடீஸ், பிளேட்டோ, அரிஸ்டாடில், உலகத்தையே ஆள விரும்பிய பெரிய வீரன் நெப்போலியன், அமெரிக்க ஜனாதிபதி ஜார்ஜ் வாஷிங்டன், உட்ரோவில்ஸன், ரஷ்ய தந்தை லெனின் போன்றவர்கள் எல்லோரும் விளையாடி மகிழ்ந்ததாக வரலாறே இருக்குது.

ராஜா : அப்பா ! கதை புரிஞ்சிருக்கு, இதை என்ன காரணத்துக்கு எல்லோரும் ஆடுறாங்கன்னு சொல்லிட்டா, சாந்திக்கு நல்லா புரிஞ்சிடும்பா.

அப்பா : இது சோம்பேறித்தனமான ஆட்டம் இல்லேம்மா ! இது சாதுசான ஆட்டம் ! சுயமான அறிவை, திறமையை பயன்படுத்தி, அதிகமா வளர்த்துக்குறதுக்கு ஒரு ஆட்டம். பொழுதை கவலையில்லாம மட்டுமல்ல, பயனோட கழிக்கலாம். மனசுக்கு நிம்மதி. எதையும் ஆழ்ந்த சிந்தனைக்குப் பிறகுதான் செய்யனுங்கற அமைதியான தன்மை. எவ்வளவு நேரம் ஆனாலும் உற்சாகம் குறையாம ஒரு காரியத்தில் ஈடுபடக்கூடிய மனத் திண்மை, எதிர்க்கிட்டே ஏமாந்து போகாம கெட்டிகாரத் தனமா தப்பிக்கவும், எதிரியை மடக்கவும் போன்ற தந்திரத்தை கற்று தர்ர வாழ்க்கை மந்திரம் தான் இந்த சதுரங்க ஆட்டம்.

சாந்தி : அப்பா ! எனக்கு எல்லாம் புரிஞ்சது இன்னும் ஒரே ஒரு சந்தேகம் !

அப்பா : என்னம்மா ?

சாந்தி : சதுரங்கம்னு நீங்க சொல்றீங்க. ஆங்கிலத்திலே 'செஸ்'னு சொல்றாங்க... உலகம் பூரா ஆடுறாங்கன்னு, அவங்கல்லாம் எப்படி ஆட்டத்தை சொன்னாங்க ?

அப்பா : பேர்களை புரிஞ்சுக்கறது கஷ்டம்தான். இருந்தாலும் உன் திருப்திக்காக சொல்றேன். கேட்டுக்கோ.

பாரசீக நாட்டிலே இதுக்கு பேரு சத்ரஞ்ச், ரோம் நாட்டிலே லூடஸ் லேட்ரம் குளோரம்; சீனாவிலே சோங்கி. அயர்லாந்தில் ''பிப்த்சீயல்'' வேல்ஸ் நாட்டிலே ''தாவல் ஃபோர்டு'' இத்தாலி நாட்டில் ''சாசி ஆலா ராபியாச.'' ஸ்பெயின் நாட்டிலே ஆக்சி டிரக்ஸ் டைலடிராமா

சாந்தி : அப்பப்பா ! போதும் போதும் !

அப்பா : பேருதாம்மா புரியாது. ஆட்டம் நல்லா புரியும்.

ராஜா : சாந்திக்கு ஆட்டம் புரியாட்டியும் அறிவாவது வரட்டும், அல்லது அவசரப்படாத பொறுமையாவது வரட்டும். சதுரங்கத்தை சொல்லித்தாங்கப்பா.

சாந்தி : எல்லாத்தையும் கத்துகிட்டு உன்னை ஜெயிக்கிறேனா இல்லியா பாரு !

ராஜா : வீட்டுக்கு ஒரு கதை சொல்ற அப்பா இருந்துட்டா என்ன குறைச்சல் ! பேச்சை குறைச்சு விளையாடுவோம். அப்பதான் ஜெயிப்போம்.

சாந்தி : ராஜா சொல்றது! கேட்டுங்க...

ராஜா : இதனால் எல்லோருக்கும் தெரிவிப்பது என்ன வென்றால், நல்லா விளையாடி சந்தோஷமா இருங்க... சமர்த்தா இருங்க... சமாதானமா இருங்க.... இருங்க... இருங்க... (கத்தி சொல்றான். மூவரும் சிரிக்கின்றனர்)

# 4. கிரிக்கெட்

---

**மோகன் :** மாமா மாமா! காலையில எங்கே புறப்பட்டீங்க?

**மாமா :** எங்கே போறீங்கன்னு கேட்டுட்டே இல்லே' இனிமே போற காரியம் உருப்பட்ட மாதிரிதான். ஏண்டா, கோதர் போதே எங்கே போறீங்கன்னு கேட்காதேன்னு உனக்கு எத்தனை தடவை சொல்றது?

**பாபு :** தெரியாம கேட்டுட்டான். தப்பு மாமா தப்பு, கேட்டதுக்கு பதிலா நீங்க கோபப்பட்டும் முடிஞ்சாச்சி, இப்ப நீங்க எங்கே போறீங்கன்னு நான் கேட்கலாமா?

**மாமா :** போக்கிரி பசங்களா! பேச்சுலேயே என்னை மடக்கப் பார்க்கிறீங்களா? சொல்றேன். ஒரு முக்கியமான விஷயத்துக்குப் போறேன்.

**மோகன் :** அப்படி என்ன மாமா அவ்வளவு பெரிய முக்கியமான விஷயம்!

**மாமா :** பேப்பர்லயெல்லாம் பக்கம் பக்கமா எழுதி விளாசியிருக்காங்களே கிரிக்கெட் மேட்சைப்பத்தி. அந்த மேட்சுக்கு டிக்கட் வாங்கப் போறேன் தெரியுதா?

**பாபு :** அடேயப்பா! இதுவா பெரிய காரியம்! என்னமோ ஏதோன்னு நானும் பயந்தேன், பூ (அலட்சியம்) கிரிக்கெட் மாட்சுதானே?

**மாமா :** டேய்! என்னை எதுவேணா பேசு, பொறுத்துக் கறேன். கிரிக்கெட் ஆட்டத்தைப் பத்தி ஏதாவது பேசினே......

**மோகன் :** பதினொரு முட்டாளுங்க ஆடுற ஆட்டத்தை பதினாயிரம் முட்டாளுங்க வேடிக்கை பார்க்கறான்னு சொன்ன பெர்னாட்ஷாவை யார் என்ன செஞ்சாங்க?

**மாமா :** மோகன்! ஒருத்தருக்குப் பிரியமாயிருக்கிற உணவு, இன்னொருத்தருக்கு விஷம்னு சொல்வாங்க பெரியவங்க. அதே மாதிரி, தனக்குப் பிடிக்காததையெல்லாம் தரை மட்டமா அடிச்சு பேசறது அறிவுள்ளவங்களுக்கு அழகு இல்லே. அதனால பேசாம விட்டுடுங்க பாபு! மோகன்! இந்த கிரிக்கெட் ஆட்டம் இருக்கே இதைவிட பெருந் தன்மையான ஆட்டத்தை நீங்க பார்த்திருக்கவே முடியாது!

**பாபு :** கிரிக்கெட் பணக்கார விளையாட்டுன்னு எல்லாம் பேசிக்கறாங்க. நீங்களோ, பெருந்தன்மையான ஆட்டம்னு சொல்றீங்க? இதுல நாங்க எதை மாமா நம்பறது?

**மாமா :** உண்மையிலேயே இந்த விளையாட்டு கொஞ்சம் 'காஸ்ட்லி கேம்' தான். செலவு அதிகமா ஆகுங்கறதுனால பணக்காரங்க மட்டும்தான் ஆடமுடியும்னு இருந்த காலமெல்லாம் மலையேறிப் போச்சப்பா. இன்னைக்கு ஆர்வமுள்ள யாருமே ஆடலாம்ங்கற நிலைமை வந்தாச்சு தெரியுமா? இப்ப உலகம் முழுதும் விளையாடுற சிறந்த விளையாட்டுக்கள்ல கிரிக்கெட்டும் ஒரு ஆட்டம் தெரியுமா?

**மோகன் :** உலகம் முழுதும்னா எல்லா நாடுமா ஆடுது?

**மாமா :** அதாவது இங்கிலாந்து, இந்தியா, இலங்கை, ஆஸ்திரேலியா, பாகிஸ்தான், மேற்கிந்திய தீவுகள், கனடா, அமெரிக்காவில் ஒரு சில பகுதிகள் ஆகிய நாடுகள்ளயும் ஏகபோகமா ஆடிக்கிட்டு இருக்காங்களே!

**பாபு :** நீங்க சொல்றதைப் பார்த்தா, இங்கிலீஷ்காரங்க எங்கெங்கே போய் இருந்து ஆட்சி செய்தாங்களோ அங்கெல்லாம் இந்த ஆட்டம் பரவி இருக்குதுன்னு தானே மாமா அர்த்தம்.

**மாமா :** உண்மை தான். இங்கிலாந்து தான் இந்த ஆட்டத்துக்கு மூலகாரணம்னு சொல்றாங்க. உலகத்துல ஒவ்வொரு நாடும் இது மாதிரி ஆட்டம் எங்க நாட்டில இருந்ததுன்னு சொல்றாங்க, ஆனா இப்படித்தான் ஆடினாங்க இப்படித்தான் இந்த ஆட்டம் பிறந்ததுன்னு யாராலுமே ஒழுங்கா சொல்ல முடியலே.

**மோகன் :** நம்ம நாட்டில கூடத்தான் கிட்டிப்புள் ஆட்டம் இருக்குது.

**மாமா :** ஆமா! ஒரு பொருளை தூக்கி எறியறது. இன்னொருத்தன் தடுக்கறது இப்படித்தான் இந்த ஆட்டம் ஆரம்பிச்சிருக்கணும். அந்த மாதிரி நிலைமை இங்கிலாந்து நாட்டிலிருந்த வரலாறு விளக்கிச் சொல்லும் போது, விளையாட்டும் அங்கே தான் தொடங்கி இருக்கணும்னு நாம நம்பறதுப்புலதான் இருக்குது

**பாபு :** எப்படி மாமா? கொஞ்சம் விளக்கமா சொல்லுங்களேன்.

**மாமா :** இங்கிலாந்து நாட்டில் ஒரு மூலையில இருந்த ஒரு சாதாரண கிராம மக்களுக்கு பொழுது போக்காக இருந்ததுதான் இந்த ஆட்டம். சாதாரண மக்களுக்கு பிடிச்ச ஆட்டமா இருந்தது அந்த சாம்ராஜ்யத்தை ஆளுற சக்ரவர்த்தியே ஆடுற ஆட்டமா மாறிப் போச்சுன்னா அந்த ஆட்டம் எப்படி மாறியிருக்கணும்னு பார்த்தியா?

**மோகன் :** புரியும் படியா சொல்லுங்க மாமா! சஸ்பென்ஸ் வச்சு பேசுறீங்களே!

**மாமா :** சொல்றேன். இங்கிலாந்து நாட்டுல கென்ட் என்குற மாகாணம். அதுல வீல்டு'ங்கற கிராமம். அந்த

கிராமத்துல தான் இந்த ஆட்டம் தொடங்கிச்சுன்னு வரலாறு சொல்லுது, வேலை செய்துட்டு வீடு திரும்பற விவசாயிக்கும் உழைப்பாளி மக்களுக்கும் இந்த ஆட்டம் ரொம்ப இன்பமா இருந்ததாம்.

பாபு : வெயில் இல்லாத ஊருல வெயில் காயவும், விளையாடி உடலை சூடுபடுத்தவும்தான் இந்த ஆட்டம் தொடங்கிச்சுன்னு சொல்றாங்களே அது உண்மையா மாமா?

மாமா : வெயில் காயவும், பொழுது போக்கவும். மனம் சந்தோஷப்படவும், உடலுக்கு நல்ல தெம்பையும் கொடுக்கத்தான் இந்த ஆட்டத்தை எல்லோரும் ஆடினாங்க. இதைப் பார்த்த பக்கத்து மாகாண மக்கள், சரோசங்கஸ்னு பேரு— அவர்களும் ஆடத் தொடங்கிட்டாங்க.

மோகன் : நம்ப ஊர் சடுகுடு ஆட்டத்துக்கு ஆரம்பம் இல்லேங்குறமாதிரி கிரிக்கெட்டுக்கும் ஆரம்பம் இல்லே, அப்படித்தானே மாமா?

மாமா: ஆமா! பழங்காலத்து பண்பாட்டோட ஒன்றிப் போய் பிறந்த விளையாட்டுகளில் இதுவும் ஒன்று. கி.பி. 1550ம் ஆண்டுக்கு முன்னால் இருந்துதான் கிரிக்கெட் பற்றிய விவரமே தெரிய வந்தது. ஒரு சிறிய கிராமத்துல புல் தரையிலே ஆடப்பட்ட ஆட்டம். உலகம் பூரா பரவின கதைதான் இதுல ரொம்ப விசேஷம்.

பாபு : ரொம்ப அதிர்ஷ்டம் உள்ள ஆட்டம் போல இருக்கு!

மாமா : உண்மைதான், கிராமவாசிகள் விளையாடிக் கிட்டிருந்ததை ஒரு நாள் பணக்கார பிரபுக்கள் பார்த்துட்டாங்க, அவர்களுக்கு வேற வேலை வெட்டியே கிடையாது. சும்மா பந்தயம் கட்டி ஆடி ஏதாவது ஒரு ஆட்டத்தை ஆடி பொழுது போக்கறது தான் வேலை,

பழைய ஆட்டங்கள் மேல பணம் கட்டி ஆடி, அலுத்து சலித்துப் போன சமயத்துலத்தான் இந்த ஆட்டம் அவர்கள் கண்ணுலப்பட்டது. உடனே கொக்கு மீனை கொத்துற மாதிரி, ஆட்டத்தைக் கொத்திக் கிட்டுப் போய் விட்டாங்க.

மோகன் : அதாவது குடிசை வாசிகள் கிட்டேயிருந்து கோபுரவாசிகள் பக்கம் கிரிக்கெட் ஆட்டம் போயிடுச்சு!

மாமா : கரெக்ட், கிராம மக்கள் பணம் கட்டி ஆடாம, வெறும் பொருள்களை கட்டித்தான் ஆடுவாங்க. அதாவது கரடித் தோலால் செய்யப்பட்ட கையுறை. தங்கப், வெள்ளிச் சரிகைப் போட்ட தலை தொப்பி, கோடு போட்ட கோட்டு. இப்படித்தான் இந்தப் பணக்காரங்க பந்தயம் கட்டினாங்க! இந்த பணக்காரங்க கட்டின பந்தயம் இருக்கே...

பாபு : என்ன மாமா ஒரு ஆயிரம் ரூபா கட்டியிருப்பாங்களா?

மாமா : பட்டிக்காட்டு பணக்கார பிரபுக்கள் பத்தாயிரம் கட்டினா, லண்டன் பிரபுக்கள் பத்தாயிரத்துல இருந்து இருபதாயிரம் வரைக்கும் கட்டி ஆடினாங்க.

மோகன் : பட்டிக்காட்டுலே இருந்து லண்டனுக்கு எப்படி மாமா இந்த ஆட்டம் போனது?

மோகன் : பட்டிக்காட்டு பிரபுக்கள் அடிக்கடி லண்டன் போய் தங்கி பொழுது போக்கறது பழக்கம். அது அவங்க பணப்பெருமை மட்டுமல்ல. அதுல ஒரு அப்படியொரு வெறி. அங்கே போய் லண்டன்ல தங்கி இந்த ஆட்டம் ஆடிக்கிட்டிருந்தபொழுதுதான், லண்டன் பிரபுக்களோட பார்வை இதன் மேல பட்டது. காய்ந்த சருகு மேல தீப்பொறி விழுந்த மாதிரி ஆயிடுச்சு.

பாபு : அப்படி என்ன ஆயிடுச்சு.

மாமா : அவங்க கட்டுன பந்தயத்துனால தான் இந்த ஆட்டம் இந்த அளவு வளர்ந்தது துன்னு, உனக்கு ஆச்சரியமா இருக்கும். அதுதான் உண்மை அவங்க 40, 000 ரூபாயிலிருந்து 50, 000 ரூபாய் வரை பந்தயம் கட்டி ஆடினாங்கன்னு இந்த ஆட்டத்துல எவ்வளவு வெறி இருக்கும்னு பார்த்தியா?

மோகன் : அடேயப்பா இவ்வளவு பணமா? தோற்றுப்போனா சண்டை வருமே?

மாமா : அதுதான் இல்லே. வெறும் வாய் சண்டை எப்போதாவதுதான் வருமாம். பெரிய அடிதடி சண்டை வந்ததே இல்லையாம். பணக்காரங்க இல்லியா. அப்படியே அடங்கிப் போயிட்டாங்க. அதோட, தான் பந்தயம் கட்டும்போது நல்ல ஆட்டக்காரர்களை கூட்டி வந்து ஆடவச்சி, பந்தயத்துல ஜெயிக்கப் பார்த்தாங்க. அதுனால தான் ஆட்டம் ரொம்ப வேகமா சீக்கிரமா வளர ஆரம்பித்தது.

பாபு : பந்தயத்துனால தான் கிரிக்கெட் வளர்ந்தது உண்மை தான் மாமா. ஆனா சூதாட்டம் மாதிரி ஆயிடுச்சே.

மாமா : என்ன செய்யறது? 100க்கு 3 அல்லது 4 பேர்தான் இங்கிலாந்துல சூதாட்டத்தில ஈடுபட்டிருந்தாங்களாம். அவங்க கையில சிக்குன கிரிக்கெட் அப்படித்தான் பயன் பட்டது! இருந்தாலும் கிரிக்கெட் யாருடைய கோபத்துக்கும் கலாட்டாவுக்கும் ஆளாகாமெ அப்படியே படிப்படியா முழு நிலவு மாதிரி வளர்ந்தது.

மோகன் : வளர்ந்ததுன்னு நீங்க எந்த அர்த்தத்தில சொல்றீங்க?

மாமா : பந்து, பந்தடிக்குற மட்டை, விக்கெட், காலில் கட்டிக்குற காலுறை, பந்தெறியுற முறை இத்தனையிலும் மாற்றம் ஏற்பட்டிருக்குதே அதுதான் வளர்ச்சின்னு சொன்னேன்.

பாபு: பந்து ஏன் மாமா சிவப்பா இருக்கு?

மாமா: பச்சை புல்தரையில விளையாடுறப்ப சிவப்பு பந்துன்னு பளிச்சின்னு தெரியும்னுதான். ஹாக்கி ஆட்டத்துல உள்ள பந்துமாதிரி தான் அதே அளவு அதே கனம். ஆனா நிறம்தான் வித்தியாசம். இது சிவப்பு. அது வெள்ளை.

மோகன்: விக்கெட்னு என்ன மாமா? அதுல எப்படி மூணு குச்சி வந்தது?

மாமா: விக்கெட்ங்கற ஆங்கில சொல்லுக்கு சின்னவாசல் கதவன்னு அர்த்தம். அது எப்படி வந்ததுன்னு சொல்றேன். கவனமா கேட்டாதான் புரியும். பந்தை ஒருத்தன் எறிவான். பந்தை ஒருத்தன் மட்டையில தடுப்பான். தடுத்து அடிக்கும்போது பந்து தூரமா போகும். அதுக்குள்ளே ஒரே குழுவைச் சேர்ந்த ரெண்டுபேர் எதிரும் புதிருமா ஓடி ஒரு ஓட்டம் அதாவது ஒரு ரன் எடுப்பாங்க.

பாபு: இதுதான் தெரியுமே. ரன் எடுக்குறது கூடவா எங்களுக்குத் தெரியாது.

மாமா: கொஞ்சம் பொறு. சொல்றேன். இப்ப விக்கெட்டுன்னு ரெண்டு பக்கமும் இருக்குற இடத்துல, பந்தடிக்குற ஆளுக்குப் பின்னாலே ஒரு சின்ன குழிதான் இருக்கும். அந்தக் குழிக்குள்ளே விழுறதுபோல பந்தை உருட்டிவிட்டுட்டா அந்தக் குழி முன்னாலே நின்னு ஆடுற ஆளு அவுட்டாகிவிடுவான்.

இப்படி இருந்து ஆடும்பொழுது பந்து ரொம்பதூரம் அடிபட்டு போகிற நேரத்துலே, பந்தை ஓடி எடுக்குறவனுக்கு குழி எந்த இடத்துல இருக்குதுன்னு கண்ணுக்குத் தெரியாம போயிடுச்சு. அதனால குறிபார்த்து குழிக்குள்ளே பந்தை உருட்ட முடியாம போச்சு.

அந்தக் குழி இருக்கிற இடத்தை அடையாளங் காட்ட ஒரு புழக்குச்சியை ஊன்றி வச்சு ஆட்டத்தை ஆடினாங்க.

மோகன் : இப்ப குழிக்குள்ளே பந்து விழுந்தாலும் குச்சுமேல பந்து பட்டு விழுந்தாலும் அதன் பக்கத்துல இருந்து அடித்தடுபவர் அவுட்டாயிடுவார். அப்படித்தானே மாமா.

மாமா : கரக்ட். பந்து தூரத்துக்குப் போனபிறகு அந்த ஒரு குச்சியையும் குறிபார்த்து அடிக்க முடியலே. அதனால ரெண்டு குச்சி இருந்தா பரவாயில்லேன்னு ஒரு யோசனை வந்தது. அப்படி ஊன்றி வச்சது கதவுவைக்கிற நிலை மாதிரி அமைஞ்சு போச்சு. அப்படி இருக்கிற சந்துல பந்து நுழைஞ்சு போய் குச்சிகள் மேல படாம போச்சு. அதனால நடுவில ஒரு குச்சியை ஊன்றி மூணு குச்சிகளா வச்சிட்டாங்க

பாபு : அடேயப்பா! அனுபவம்தான் இப்படி ஆட்டத்தை மாத்தியிருக்குதுன்னு சொல்லுங்க. ஏன் மாமா! பந்தடிக்குற மட்டையும் இப்படித்தான் மாறி வந்துருக்குதா ?

மாமா : ஆமா! இப்ப பந்தாடுற மட்டையோட அகலந் இருக்குதே அதோட அகலம் 4½ அங்குலம். இந்த அமைப்பு வந்ததே ஒரு பெரிய கதைதான்.

இங்கிலாந்தல ஒருநாள் 1000ரூபாய் பந்தயம் கட்டி இரண்டு கோஷ்டிகள் விளையாடும்பொழுது ஒயிட் என்பவர் ஆடவந்தார். அவர் கொண்டு வந்த மட்டையின் அகலம் விக்கெட் அளவு இருந்தது. எந்தப் பந்து வந்தாலும் தடுத்து நிறுத்தி ஆட்டம் இழக்காம ஆடிக்கிட்டிருந்தார். எதிராளிகள் எல்லோரும் எவ்வளவோ முயற்சி செய்தும் அவரை அவுட்டாக்க முடியாமல்

போகவே, பந்தடிக்கும் மட்டையின் அகலம் 4¼ அங்குலத்திலதான் இருக்கணும்'னு சண்டைபோட்டு சமாதானமாகி இந்த முடிவுக்கு வந்தாங்க. அதே மாதிரிதான் பந்தை எறியுற முறையில் கூட மாற்றம் வந்தது. முதல்ல தரையோடு தரையா உருட்டி விட்டாங்க அடிக்குற ஆட்டக்காரர்கள் ஓங்கி அடிக்க பழகிக்கிட்ட பிறகு, கையை சுற்றி எறியலாம்'னு முடிவுக்கு வந்தாங்க.

மோகன் : அப்பொ கால்ல போட்டுக்குற காலுறைகள் எப்படி வந்தது ?

மாமா : பந்தை ரொம்ப கடுமையாக வீசி எறிய பழகிக்கிட்ட பிறகு தடுத்து ஆடுறவங்க தாக்குப்பிடிக்க முடியுமா ? அடிக்கடி கால்ல அடிபட்டு அவஸ்தை படுறதை பார்த்துட்டு காலுறை மாதிரி இருந்தாதான் பயப்படாம ஆட முடியும்'னு காலுறைகளையும் கண்டுபிடிச்சு கட்டிகிட்டு ஆடுனாங்க கைவிரல்களை காப்பாத்திக்க கைகளுக்கும் உறை மாட்டிக்கிட்டாங்க.

பாபு : இவ்வளவு தடுப்பு சாதனங்களையும் போட்டுகிட்டு அடிபடுமோன்னு பயந்துகிட்டு ஆட்டம் ஆடணுமா ?

மாமா : சாதாரண மனுஷர்கள் ஆடுனாலும் பரவாயில்லே! சக்ரவர்த்தி ஒருத்தர் ஆடி அதனால இறந்தேபோய்ட்டார் இது தெரியுமா உனக்கு ?

மோகன் : எப்படி மாமா ?

மாமா : பிரடரிக் என்பவர், கிரிக்கெட் ஆட்டத்துல ரொம்ப ஆர்வம் உள்ளவர் அவர் விளையாடும்பொழுது கால்ல பந்து பட்டு காயமாகி, அந்த காயத்தின் அதிர்ச்சி தாங்காமலேயே இறந்து போனதாக சரித்திரம் இருக்கு.

பாபு : அதனாலே ஆட்டத்தையே தடைசெய்து இருப்பாங் களே!

மாமா : ம்ஹூம்! அதுதான் இல்லே! அரசர் இறந்த பிறகும் அந்த நாட்டின் ராஜபரம்பரையே கிரிக்கெட் ஆட ஆரம்பிச்சாச்சு. அவரோட பையன்களே விரும்பி ஆடிய தோடுமட்டுமல்ல, கிரிக்கெட் ஒரு ராயல் கேம்'னு பேர் வர்ர அளவுக்கு ஆக்கிட்டாங்க!

மோகன் : இப்படி வளர்ந்த ஆட்டத்திலும் விதிகள் எப்படி வந்தது?

மாமா : அதுவா எம்.சி.சின்னு அடிக்கடி பேப்பர்ல பார்த்திருப்பியே! மெரில்போன் கிரிக்கெட் கழகம்'னு பேரு. அந்தக்கழகம் தான் கிரிக்கெட்டுக்கான புதிய விதிகளை யெல்லாம் தொகுத்து வெளியிட்டது. அந்த விதிகள் தான் நாடுபூரா பரவியது. கிரிக்கெட் பற்றிய முழு அதிகாரத்தை யும் அந்தக்கழகம் தான் பெற்றிருந்தது இப்ப சொல்லு கிரிக்கெட் எப்படி?

பாபு : மாமா! விளையாட்டு சாமான்கள் வாங்கத் தகுதியுள்ள வர்கள் தான் கிரிக்கெட் ஆட முடியும்'னு நினைச்சேன்.

மாமா : அப்படி இல்லே! பத்துபேர் ஒன்று சேர்ந்தா ரொம்ப எளிதாவே வாங்கி ஆடலாம். பந்தெறிய ஓடுறது. பந்தைத் தடுத்து ஆடுறது, பந்தெடுக்க ஓடுறது, பிடிக் கறது எல்லாமே ரொம்ப அழகா இருக்கும்.

மோகன் : அந்த ஆட்டக்காரர்கள் நடக்குறது கூடத்தான் ஸ்டைலிலா இருக்கும்.

மாமா : பார்த்தியா! கிரிக்கெட் கிரிக்கெட் தான். அதை ஆடி மகிழுறவங்களை விட பார்க்குற ரசிகர்கள் கூட்டம் அதிகம். நேரில் பார்க்குறவங்களைவிட வானொலி பெட்டியை காதோடு காதா வச்சு வருணனை கேட்டு

மகிழுருங்களே அவங்க கோடிக்கணக்குல இந்த உலகம் பூரா இருக்குருங்க புரியுதா.

பாபு : மாமா! நேரமாகுது! சீக்கிரம் போங்க! டிக்கெட் தீர்ந்துடப் போகுது.

மாமா : அப்படி வா வழிக்கு. இதோ புறப்பட்டுட்டேன்.

மோகன் : நீங்க சொன்ன கதைக்கும் வாங்கப்போற டிக்கெட்டுக்கும் ரொம்ப நன்றி மாமா.

மாமா : (சிரித்துக்கொண்டே) ரொம்ப நன்றி.

---திரை---

# 16. இளைஞர்களுக்கான புத்தகங்கள் எவ்வாறு பதிப்பிக்கப்பட வேண்டும்?

ஆசிரியர் குறிப்பு :

(இந்தக் கட்டுரையைப் படிப்பதற்கு முன் ஒரு குறிப்பினை விளக்கிட வேண்டுமென்று விரும்புகிறேன். வானொலியில் விளையாட்டுக்கள் என்ற தலைப்புள்ள இந்த நூலில், இந்தத் தலைப்பு தேவை தானா என்ற வினாவுக்குரிய விளக்கம் தான் இது. நல்ல உடலில் நல்ல மனம் என்பார்கள். விளையாட்டு எப்படி ஒருவருக்கு உற்ற துணையோ, அதுபோலவே நல்ல நூலும் ஒரு நல்ல நண்பனுக்கு சமம் என்பதாகத் தான் அறிஞர்கள் கூறுகின்றார்கள்.

ஏறத்தாழ இளைஞர்களுக்காகவே விளையாட்டுக்கள் பற்றி வானொலியில் பேச நேர்ந்தது. அதனைத் தொடர்ந்து, நல்ல நிலையில் உயர, புத்தகங்களும் உதவுகின்றன என்பதால், அத்தகைய நூல்களை எவ்வாறு பதிப்பிக்கப்பட வேண்டும் என்பதனையும் வானொலியில் பேச வாய்ப்புப் பெற்றமையால், அந்தக் கட்டுரையும் இங்கே இடம் பெற்றிருக்கிறது. உடல் வளர்ச்சியும் மூளை வளர்ச்சியும் ஒருவருக்கு இருகண்கள் போல். ஒரு நாணயத்திற்கு இரண்டு பக்கங்கள் போல. இனி நீங்கள் படிக்கத் தொடங்கலாம்.)

ஆண்டவன் படைப்பிலே அருமையும் பெருமையும், மூழுமையும் முதன்மையும் கொண்டது மானிடப் பிறவி, ஆறாவது அறிவான பகுத்தறிவைப் பெற்றதோடல்லாமல், சிந்திக்கவும், சிரிக்கவும், சுவைபடப் பேசவும் போன்ற பல ஆற்றல்களைப் பெற்றிருக்கிறார்கள் மனிதர்கள்.

மனித குலத்தின் மாண்பே, அறிவில் தான் அடங்கியிருக்கிறது. அதனால்தான் தேகத்திலும் வலிமையிலும், திறமையிலும் தன்னைவிட மேலான மிருகங்களை, அலட்சியமாக ஆட்டிப் படைக்கிறான் மனிதன்.

அதன் ரகசியம் அறிவு தான் என்றால், அது மிகையாகாது.

காட்டை மேடாக்கியதும், வீடாக்கியதும், வீதியாக்கியதும், விசாலமான ஊரை அமைத்ததும், வாழ்வதற்கேற்ற உலகைப் படைத்ததும், அவனது மதிநுட்பமே காரணமாகும்.

விதியை மதியால் வெல்லலாம் என்பார்கள். மதி என்றால், அறிவு என்றும், நிலவு என்றும் பொருள் தரும்.

நம்முடைய மதி வளர்மதியே தவிர, தேய் மதியல்ல. வாழுகின்ற மனிதனுக்கும் அறிவு வளர்ந்து கொண்டே தான் போகிறது.

அறிவு எவ்வாறு வருகிறது, வளர்கிறது என்று கேட்கலாம். முதலில் அறிவை நாம் இரண்டு வகையாகப் பிரித்துப் பார்க்கலாம். ஒன்று பட்டறிவு. இரண்டாவது படிப்பறிவு.

பாடுபட்டு உணரும் போதும், பட்டுப் பட்டுத் தேறும் போது வருவதும் ஒருவகை அறிவு. அது அனுபவங்களாக மாறிபெறும் அறிவு. இதுவே பட்டறிவாகும்.

இந்த அனுபவமான பட்டறிவு, தானே அனுபவிக்கும் போதும் வரும். பிறர் அனுபவிக்கின்ற நிலையைப் பார்த்தும்

புரிந்து கொள்ளும்போதும் வரும் இந்த அறிவானது, கற்றவர்கள், கல்லாதவர்கள், மிருகங்கள் சிலவற்றிற்குங் கூட எந்த நேரத்திலும் கிடைக்கும்.

படிப்பறிவு என்பது, புத்தகங்கள் வாயிலாகப் பெறுவது. ஆர்வ மிகுதியால் கற்ற அறிஞர்கள், தங்களது ஆழ்ந்த அனுபவத்தை, அபூர்வமான ஆராய்ச்சித் திறனை, அழகான கருத்துக்களை அருமையாக, தெளிவாக, நயமாக, நீரோட்டம் போல, நீண்ட தேரோடும் வீதியிலே வரும் தேரோட்டம் போல தீந்தமிழ் நடையிலே தந்திருப்பார்கள்.

அப்படிப்பட்ட நூல்களைக் கற்கும் பொழுது பெறுகின்ற அறிவே படிப்பறிவாகும். படிப்பறிவு என்பது படித்தும் உணரலாம். பிறர் படிக்கக் கேட்டும் அறியலாம். 'செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம்' அன்றோ!

அத்தகைய அறிவுச் செல்வம் வாழ்க்கைக்கு இன்றியமையாததாகும்.

பாடுபட்டுப் பணத்தைத்தேடு, திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்பது பழமொழி. 'கண்டது கற்கப் பண்டிதன் ஆவான்' என்பதும் பழமொழி. கல்வி என்பது மனிதருக்கு மிகவும் தேவையானதல்லவா!

அதனால்தான் எந்தக்காலத்திலும் கூட இருந்து உதவும், குலம்காக்கும் கல்வியைக் கற்றவர்களுக்கு, சென்ற இடம் எல்லாம் சிறப்பு கிடைக்கிறது. மன்னனில் கற்றோன் சிறப்புடையவன் என்பது மாநிலம் அறிந்த உண்மையன்றோ!

இப்படிப்பட்ட சிறப்பு மிக்கக் கல்வியை எவ்வாறு பெறுவது? எப்பொழுது பெறுவது என்ற கேள்வி எழுவது இயல்பே!

'அரிது அரிது மானிடப் பிறவி' என்ற ஔவைப்பாட்டி, 'கொடிது கொடிது வறுமை கொடிது. அதனிலும் கொடிது இளமையில் வறுமை' என்றாள்.

ஏன் கொடுமை என்றுள்? கற்க வேண்டிய காலம் இளமைக் காலம் என்பதால் தான்.

முத்தை விளைக்கின்ற சிப்பியானது, மழைக்காக வாய் பிளந்து காத்திருப்பது போல, கற்பவர்கள் இருக்க வேண்டும். மனிதகுலத்தைக் காக்கின்ற நாளைய சிற்பிகளை இன்று உரு வாக்குவது கல்வியல்லவா! இந்த நிலையில், இணையற்ற காலமாக விளங்குகிறது இளமைக்காலம்.

பசுமரத்தில் ஆணி பதிவது போல, பிஞ்சு நெஞ்சிலே கல்வியும் பதியும்.

ஆகவே, சிறுவர்கள் நெஞ்சம்தான் அறிவுக்கு ஊற்று. இங்கு ஊறுகின்ற அறிவு நீர், இனிக்கும் சுனையாகும். குதிக்கும் அருவியாகும். இசைபாடும் ஆறாகும். எழிலாகத் தவழும் நதியாகும் ஆடி அலைபாயும் அகன்ற கடலாகும். இங்குதான் வாழ்வு எனும் கப்பல் செம்மாந்து செல்லும். இந்த இனிய நிலையை இணைப்பது நல்ல நூல்களே!

தினை விதைத்தால் தினை. வினை விதைத்தால் வினை என்பது பழமொழி. வினையை விதைத்து விட்டு தினையைத் தேடினால் கிடைக்காது.

தேவையானதைத் தேடி விதைக்க வேண்டும். அதையும் தரமாக, நல்ல இடமாகத் தேர்ந்தெடுத்து விதைக்க வேண்டும். விதையிலே பழுதிருந்தால், முடிவிலே பதர்தான் கிடைக்கும் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது.

கற்கக் கசடற என்பதும் மிக முக்கியம். கசடு இல்லாமல் எப்பொழுது கற்க முடியும்? கற்கப் பயன்படுகின்ற நூல்கள் கசடில்லாமல் அதாவது குற்றங் குறைகள் இல்லாமல் பூரண நிலவு போல பெருமையுடன் விளங்கும் போதுதான்.

கற்கும் இளைஞர்கள் இதயத்திலே இனிய மொழி பேசுவன வாக, இனிய வழி காட்டுவனவாக நூல்கள் இருக்க வேண்டும்.

சுமையாக இல்லாமல் சுவையான விஷயங்கள் உள்ளதாகவும் புத்தகங்கள் இருக்க வேண்டும்.

'இன்றைய இளைஞர்கள் நாளைய குழந்தைகளின் பெற்றோர்கள்' என்றும் கூறுவார்கள். இன்றைய இளைஞர்கள் நாட்டின் நாளைய தலைவர்கள் மட்டுமல்ல. சரித்திர நாயகர்களும் ஆவார்கள்.

பாலர்களின் மனம் பதமான மண்போன்றது. பச்சை மூங்கிலைப் போன்றது.

பதமான மண்ணைப் பயன்படுத்தி, பக்குவமான பாண்டங்களைச் செய்யும் பண்புள்ள குயவர் போல; தீயிலே பச்சை மூங்கிலை இட்டு தேவைக்கேற்ப நேராக நிமிர்த்தி விடும் தேர்ந்த வேலைக்காரர்கள் போல, பாலர்களை நம் பாரதத்தின் மேன்மைக்காக உழைக்கும் பக்குவத்தை நூல்கள் மூலமாக நாம் உருவாக்க வேண்டும்.

தியாகம் என்ற பரந்த மனப்பான்மையையும், சிறந்த பண்பாட்டையும் பெருக்குகின்ற நூல்களையே, பதிப்பகத்தார் அனைவரும் படைத்திடல் வேண்டும்.

நீரானது பூவிலே புகுந்து தேனாகிறது. பழத்திலே புகுந்து சாறாகிறது. சிப்பியில் புகுந்து முத்தாகிறது. ஆவியாக மாறி மேகமாகி மழையாகிறது.

நீரானது தான் புகுந்த இடத்தின் மேன்மையைப் பெறுவதுபோலவே, அறிவினை நாடும் இளைஞர்களின் நெஞ்சங்கள் மேன்மையடைய நூல்கள் உதவ வேண்டும்.

நூல்களைப் பதிப்பிக்க நிச்சயம் பணம் தேவைதான் பதிப்பகத்தார் இதனை ஒரு வியாபாரமாகக் கருதத்தான் வேண்டும். வியாபாரம் என்று எண்ணிவிட்டால், லாபம் என்பதையும் அவசியம் எதிர்பார்க்கத்தான் வேண்டும். லாபம் என்று எண்ணிவிட்டால், ஆசையும் கொஞ்சம் அதிகமாகவே

வந்துவிடும். ஆசை என்பது வந்து விட்டால், பிறகு, அதற்கு எல்லையே கிடையாது.

அகிலமெல்லாம் கட்டி ஆண்டாலும், அதற்கும் மேல் இன்னொரு உலகம் இல்லையே என்ற ஓர் ஏக்கம் வந்துவிடும் என்று நமது முன்னோர் பாடியதை, பதிப்பித்துவரும் ஒரு பதிப்பகத்தாரே!

வியாபாரமாகவும் இருக்கவேண்டும். லாபமும் வர வேண்டும். அதே சமயத்தில், "சமூகத்திற்கும், சமுதாயத்திற்கும், நாட்டின் பண்பாடு கலாசாரம், இப்போது வாழ்ந்து கொண்டிருக்கும் இனிமேல் வந்து வாழப் போகின்ற தலைமுறையினருக்கும் நாம் சிறந்த வழிகாட்டிகளாக இருக்கிறோம்". என்ற ஒரு புனித நிலையில் இருந்து கொண்டிருக்கிறோம் என்ற உண்மையை பதிப்பகத்தார் மறந்து விடக் கூடாது.

நோக்கம் நல்லதாக இருந்தால், செயலும் சிறப்பாகவே இருக்கும். எனவே, ஒரு நூலைப் பதிப்பிக்கும் முன்னர். ஒரு சில கருத்துக்களைக் கவனித்துக் கொள்ளுதல் சாலச் சிறந்த முறையாகும்.

குழந்தைகள் முதல் பெரியோர்கள் வரை, அனைவரையும் கவர்வது புத்தகத்தின் தலைப்பே பெயர் கவர்ச்சிகரமாக இருப்பதுடன், எளிதாக உச்சரிக்கக் கூடிய முறையில் அமைந்தால், தலைப்பைத் தயக்கமின்றி சொல்வதற்கும் படிக்கின்ற ஆவலைத் தூண்டுவதற்கும் அத்தலைப்பே ஆவன செய்து விடும். நூலைப் பார்த்தவுடனே வாங்கிடத் தூண்டுமாறு புத்தகத்திற்குப் பெயர் சூட்டுதல் வேண்டும்.

புத்தகத்தின் தலைப்பைப் போலவே, நூலின் மேல் அட்டை முகப்பும், வண்ணமும் சீராக சிறப்பாக இருந்தால், அதுவும் இளைஞர்களுக்கு அதிக ஈடுபாட்டை உண்டாக்கும்.

தலைப்பும் முகப்பும் சிறப்பாக இருந்தால் மட்டும் புத்தகம் சிறந்தது என்ற தகுதியை அடைந்து விடாது.

தலைப்புக் கேற்றக் கருத்துக்களைத் தெளிவாகத் தர வேண்டும். கூறும் அறிவுரையை குழப்பமில்லாமல் சொல்ல வேண்டும். குழந்தைகளின் கற்பனைக்குத் தூண்டுகோலாக, அவர்கள் உற்சாகத்திற்கு உணவாக உழைப்பை நோக்க மாக்கும் நினைவாக, நூல் அமைய வேண்டும்.

தேவையான இடங்களில் சிறப்பான, உயிரோட்டமுள்ள ஓவியங்களை அச்சிட்டு, படிப்பவர்களுக்கு ஓர் ஆனந்த நிலையை உண்டு பண்ண வேண்டும். கதை நிகழ்ச்சி நடக்கின்ற இடங்களை கற்பனை செய்து கொண்டே படிக்கின்ற வாசகர்களுக்கு, அச்சித்திரங்கள் உற்சாகத்தை அளிக்கும்.

அச்சிடும் காகிதம் வெண்மையாகவும், அச்சிடும் எழுத்துக்கள் ஓரளவு பெரிதாக இருந்தால், கண்களுக்கு வலியும் எரிச்சலும் ஏற்படாமல் இருக்கும். அச்சிடும் முறையில் அழகினைச் சேர்ப்பது புத்தகத்திற்குக் கவர்ச்சியைத் தருவதாகும்.

கண்ணாடித் தரையிலே கல்லை வைப்பது போன்ற கவனம், பதிப்பாசிரியருக்கு இருப்பது மிகமிக முக்கியம்.

எதையாவது எழுதி, எவ்வாறோ பதிப்பித்துவிட்டு, எப்படியோ விற்று விடலாம் என்பது முக்கியமல்ல.

'இந்த ஒரு புத்தகத்தால் எத்தனை நெஞ்சங்கள் பயன் பெறும், எத்தனை இதயங்கள் அறிவுறும்' என்பதை ஒரு நூல் உருவாவதற்கு முன்னர், ஓராயிரம் முறை சிந்தனை செய்வது இன்றியமையாத கடமையாகும்.

இறுதியில் ஒன்று. நம் நாட்டு இளைஞர்களை அறிவிலும் ஆற்றலிலும் அவனியிலே முதன்மை பெற்று விளங்க, நமக்குக் கிடைத்த ஒரு புனித வாய்ப்பு என்று பதிப்பாசிரியர்கள் நினைந்து செயல்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

# 17. அனைவரிடத்தும் அன்பு

காலையிலே கண் விழிக்கிறோம். காரிருளில், கண்ணுறக்கத்தில் நம்மைக் காத்திருந்த இறைவனுக்கு நன்றி சொல்கிறோம். தூங்கும் போது மூச்சு போனால் நாமென்ன செய்ய முடியும்? ஆகவே நம் ஜீவனைக் காத்து வாழ்வைத் தருகின்ற ஆண்டவனை வாழ்த்துகிறோம், வணங்குகிறோம்.

சாகாமல் வாழ்ந்துவிட நாம் எத்தனை எத்தனை சாகசங்களை மேற்கொள்ளுகின்றோம். ஆசை,— எத்தனைப் பேராசை நமக்கு! இந்த உலகத்தில் எப்பொழுதும் வாழ்ந்திருக்க அவ்வளவு ஆசை ஏன்? ஒரு முறை உயிர் போனால் மீண்டும் வருமா?

எல்லா உயிரினங்களுக்கும் இந்த ஆசை பொருந்துமே! ஏன் பிறந்தோம் நாம் என்று எப்பொழுதாவது தான் நம்மை நாமே கேட்கிறோம். ஆனால், எப்படியும் வாழ்ந்து விட வேண்டும் என்ற எண்ணத்திலே தான் வாழ்க்கைப் போராட்டம் இருக்கிறது.

மாயமாக மறைகின்ற உயிரைக்காக்க ஓர் மரணப் போராட்டம், மர்மமாக நமக்குள்ளே நடக்கிறது. அது ஓயாத போராட்டம். இந்தப் போராட்டத்தில் எல்லா ஜீவராசிகளும் பங்கு பெறுகின்றன. எது ஆற்றல் உள்ளதோ, அது கொன்று வென்று விடுகிறது. ஆற்றல் இல்லாத உயிர்

அழிக்கப்படுகிறது. ஆமாம்! காட்டிலே மிருகங்களும் மனிதர்களும் ஒன்றாக வாழ்ந்தபோது, இப்பிரச்சினைக்காக மனிதன் போராடினான். வெறிபிடித்த மிருகங்களின் பசி வேட்டைக்கு இரையான போது, பயந்து ஓடினான். பின் நின்று தாக்கினான். தாக்கிக் கொன்ற மிருகத்தின் தசை, அவனது பசியைப் போக்க உதவியது.

வெறும் காயுர், கனியுர், கிழங்கும் தின்றவாய்க்கு மிருகத்தின் தசைக் கூட்டம் ஒரு புதிய சுவையை ஊட்டியது.

பிறகு, தன் உயிரைக் காக்கும் உணவுக்காக பிற உயிர்களைக் கொல்ல ஓடினான், தேடினான், சாடினான்.

கற்காலம் மாறியது. இரும்புக் காலம் வந்தது. பொற்காலம் பிறந்தது. மின்காலம் என்றும் ஆனது. என்றாலும் முன் காலம் போலவே, உயிர்களைக் கொல்கின்ற வேட்டையணர்வன் வேட்கை, இன்னும் அடங்கிய பாடில்லை. அறிவும் அடக்கிய பாடில்லை. அவனியும் அகற்றவே முடியவில்லை.

இடம் தேடி, பயம் கூடி, உரிமைக்காக மிருகத்தைக் கொன்ற மனிதன், வயிற்றுக்காகக் கொன்றான். காட்டிலே உயிர்களைக் கொல்வதை 'வேட்டைக்கலை' என்றான் அங்கே கொலை கலையாக மாறியது. அப்பொழுதுதான் உள்ளுணர்வு, தெய்வீக உணர்வு விழித்துக் கொண்டது.

'ஓர் உயிரை அழிப்பது சுலபம். அந்த உயிரையே உன்னால் திருப்பிப் படைக்க முடியுமா என்று கேட்டது ஓர் அன்பு மனம்.

இந்த உலகத்தில் நீ வாழ வேண்டும் என்று எப்படி விரும்புகிறாயோ. அப்படித்தானே மற்ற உயிர்களும் விரும்பும். இதை நீ ஏன் நினைக்கவில்லை. என்று கேட்டது ஓர் உரிமை மனம்.

பிற உயிர்களுக்கு நன்மை செய்யாவிட்டாலும், தீமையாவது செய்யாமல் இருக்கக் கூடாதா என்று கேட்டது ஓர் அருள் மனம்.

இதனை எண்ணிப்பார்க்க அறிவு தலைப்பட்ட பொழுது தான் அகிம்சை நெறி, அறவழி உதயமாயிற்று.

ஆகவேதான் 'அறவினை யாதெனில் கொல்லாமை!' என்றார் வள்ளுவர். நீ செய்கின்ற தருமக் காரியம் என்ன? வாரிவாரி வழங்குவதா, ஆயிரம் பேருக்கு அன்னதானம் செய்வதா? அல்லவே அல்ல. உயிரைக் கொல்லாத உத்தமப் பண்பே அறவினை என்றார்.

ஏன்? ஓர் உயிரைக் கொல்கின்ற செயலானது, எல்லா பாவத்திற்கும் இட்டுச் செல்கிறது. என்பதால்தான். அறவினை யாது எனின் கொல்லாமை, கோறல், அப்படிக் கொல்வதானது பிறவினை எல்லாம் தரும் அதாவது மற்றப் பாவச் செய்கைகள் அனைத்திற்கும் பாதை அமைத்துத்தரும் என்கிறார் வள்ளுவர்.

அந்த அறவினை பற்றிய அறிவினை, அந்த அறிவினை ஏற்றார் உறவினை ஆறறிவு படைத்த மாந்தர் அனைவரும் பின்பற்றும் திருவினை என்று இந்த உலகம் ஏற்றுநடக்கிறதோ அன்றுதான் நம் வாழ்வும் வழியும் இன்பமாகத் தோன்றும்.

இன்ப வாழ்வின் அடிப்படை பாவம் செய்யாத வாழ்வாகும். பாவமில்லாத வாழ்வு பண்பிலே பிறக்கும். பண்பானது அன்புடை நெஞ்சத்தால் ஆக்கப்படும். அன்புடை நெஞ்சம் அறிவுத்திறனால் உருவாக்கப்படும்.

அறிவும், அன்பும், பண்பும், பயனும் எல்லா உயிரையும் காக்கவே என்று வாழ்ந்தால், நமக்கும் இன்பம். நாடெல்லாம் இன்பம்.

இந்த உலகம் அருமையாக ஆனந்தமாக இயங்கிக் கொண்டிருக்கிறது என்றால் என்ன காரணம்? எத்தனையோ காரணங்கள் நம் இதயத்திலே வந்து நீந்தும். ஆனால் புறநானூற்றுப் புலவர் ஒருவர் பாடுகின்றார்

'உண்டாலம்ம இவ்வுலகம்; இந்திரர் தம் அமிழ்தம் அமையவதாயினும் தமியராய உண்டலும் இலரே!

இந்திரர் உண்ணுகின்ற சாகாவரம் தரும் சஞ்சீவியாகிய அமுதம் தனக்கு கிடைத்தாலும் அதனைத் தானே தனியாக உண்ணாமல் எல்லோருக்கும் பகிர்ந்து தந்து இன்பம் பெறுகின்ற தமிழ்ப் பண்பு படைத்தவர்களால் தான் இந்த உலகம் இன்னும் இருக்கிறது என்று பாடுகின்றார்

அறிவுக்கு உணவாகும் ஆன்ற இலக்கியங்களை மட்டுமே தொகுத்துப் பழகியவர்கள் நமது முன்னோர்கள். ஆனால், யான் பெற்ற இன்பம் பெறுக, இவ் வையகம், என்று எல்லாவற்றையும் பொதுவாக வைத்து பகிர்ந்து தரக்கூடிய பண்பு மனத்தினரைத் தான் நம் இலக்கியங்கள் மனிதர்கள் என்று பாடி மகிழ்கின்றன.

விருந்தில்லா சோறு மருந்தென்று எண்ணி வீட்டிலே சோற்றை வைத்துக்கொண்டு, வாசலிலே வருவோர் விருந்துக்காக செம்பினை ஏந்திக் கொண்டு காத்திருந்து விருந்தோம்பினார்கள் என்றால் பாருங்களேன் !

அரிய நெல்லிக் கனியை ஔவைப் பாட்டிக்கீந்து அநேக ஆண்டுகள் வாழ்விக்க ஆசைப்பட்டான் அதிகமான் என்ற ஒரு மன்னன்.

கேவலம், வெறும் சோற்றை மட்டுமல்ல, சாகா வரம் தரும் சஞ்சீவியையே பகிர்ந்துண்ட வரலாறு ஏராளம் நம் இலக்கியங்கள் கூறும்.

அதனால் தான் யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று பரந்த மனப்பாங்குடன் பாட முடிந்தது. வாழ முடிந்தது.

எல்லோரும் சுற்றத்தார் என்று ஒப்புக்கொண்ட நெஞ்சால் தான் எதனையும் பகிர்ந்து அளிக்க முடியும்.

உலகம் பரந்து விரிந்து கிடப்பது உண்மைதான். ஆனால் மக்கள் உணர்வால், மனதால் ஒன்றி நெருங்கி வாழ்ந்தனர். அது பண்பட்ட அறிவின் முதிர்ச்சியால் வந்ததாகும்.

ஓர் அறிவு உயிர் முதல் ஆறறிவு உயிர்கள் என்று பிரித்தனர் நமது முன்னோர். புல்லுக்கும், மரத்திற்கும் ஓரறிவு. சங்குக்கும், சிப்பிக்கும் ஈரறிவு. எறும்புக்கும் கறையானுக்கும் மூன்றறிவு. தும்பிக்கும் வண்டுக்கும் நான்கறிவு. பறவைக்கும் விலங்குக்கும் ஐந்தறிவு. பகுத்துணரும் ஆறாவது அறிவு பெற்ற மனிதருக்கு ஆறாவது அறிவு.

இந்த அறிவை வைத்துக் கொண்டுதான் மனிதன் உலகை ஆட்டிப் படைக்கிறான். ஆட்டிப் படைப்பவனே ஆசைப் பட்டால் உயிர்களைக் கொல்வது வாடிக்கை, வெறும் வேடிக்கை என்றால், அதை ஆணவம் என்பதா அறியாமை என்பதா? அறிவிருந்தும் அலட்சியப் படுத்தும் அகம்பாவம் என்பதா?

அதனால் தான், உயிரைக் கொல்வது பாபம் என்று கூறிய வள்ளுவர், பல்லுயிரையும் ஓம்ப வேண்டும் என்றார். எப்படி? பகுத்துண்டு பசித்த உயிர்கட்குப் பகிர்ந்து தருதல் எல்லா தருமகாரியங்களிலும் தலை சிறந்தது என்று பேரறிஞர்களே ஏற்றுக் கொண்ட உண்மை என்பதால், பகுத்துண்டு பல்லுயிர் ஓம்பவேண்டும் என்றார்.

ஒளவைப் பாட்டி பசித்து வருகிறாள். எதிரே ஒரு உழவன் வருகிறான் பசிக்கு உணவு கேட்கிறாள் அவன் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்று, திண்ணையிலே அமரச் செய்து வீட்டிற்

குள் சென்று, தன் மனைவியை அழைத்து, இன்பமொழி பேசி, கூந்தலை அவிழ்த்துப் பேன் பார்த்து, எல்லா உபசாரங்களும் செய்து, வீட்டின் வாசலில் விருந்தென்றான். பிய்ந்த முறத்தை எடுத்துக் கொண்டு கணவனை அவள் அடிக்க, அவன் ஓ—, ஓலை மனம் நொந்து இப்படியும் ஓர் வாழ்வா ? கூறாமல் சந்நியாசம் போ ! என்று பாடுகின்ற அளவுக்கு பேய் மனக் கூட்டமும் இருக்கத்தான் இருந்தது.

அதனால் தான் பகுத்துண்டு பல் உயிர்களையும் உண்பித்து அதனால் வருகின்ற மன நிறைவுடன் குறைவிலா வாழ்வு வாழ வேண்டும் என்று வற்புறுத்திய நிலையைத்தான் பாரதியும் 'தனி ஒருவனுக்கு உணவில்லையேல் இந்த ஜெகத்தினையே அழித்திடுவோம்' என்று வீராவேசத்தோடு பாடினான்.

பெற்ற பொருள் அனைத்தும் பிறர் நலம் பேணத்தான் என்ற பெருந்தன்மை உருவாக வேண்டும். ஆகவே தான் ஓர் உயிரைக் கொல்லாமல் இருப்பது அறவினை என்றும், ஓர் உயிருக்கு உணவு தந்து காப்பது நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாந்தலை என்று, பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர் தொகுத்தவற்றுள் எல்லாந்தலை எனப் பாடுகின்றார்.

தொகுத்து வைப்போம், பகிர்ந்து உண்போம். அதுதானே நாம் எடுத்த மனிதப் பிறவிக்கு பெருமை !

எத்தனை ஆறுகள் எங்கே ஓடினாலும், இறுதியில் தேடி வந்து கூடிக் களிப்பது பொங்குமா கடலில் தான். வாழ்க்கையில் நாம் எங்கு இருந்தாலும் எங்கே அலைந்தாலும் எப்படி வாழ்ந்தாலும் நமது எண்ணங்கள் தேடி அலைவது இன்பத்தைத்தான்.

ஆறுகளுக்கு எத்தனை தேக்கம். இடையிலே வந்தாலும் நோக்கம் ஒன்று தான். நமக்கு தாக்கமோ, ஆக்கமோ எது வந்தாலும் நோக்கம் ஒன்று தான். அதுதான் இன்பம்.

அந்த இன்பம் உடலுக்காக இருக்கலாம், மனதுக்காக இருக்கலாம். உடலுக்குத் தேடுகின்ற இன்பம், பாறையில் பட்ட நீர் போல பட்டென மறைந்து போகும். மனதுக்கு உண்டாகின்ற இன்பம இருக்கிறதே, அது மாறாது. மறையாது. வாழ்நாள் முழுவதும் கூடவே வரும், குதூகலம் தரும்.

மனதிலே ஏற்படுகின்ற இன்பம் மனநிறைவினால் மட்டற்ற திருப்தியால் உண்டாவதாகும். அத்தகைய மன நிறைவு தானே உண்ணுவதாலோ, தனியாக துணையாக பஞ்சு மெத்தையில் உறங்குவதாலோ வந்து விடாது. உண்மையான மனநிறைவும் திருப்தியும் தியாகத்திலே தான் தோன்றும்.

தியாகம் என்பது என்ன? தன்னை மறந்து தன்னைப் போன்ற இன்னொரு உயிருக்கு, வேண்டிய நேரத்தில் வேண்டிய வகையில் தேவைப்படும். உதவியைச் செய்கின்ற அரிய பண்பே தியாகமாகும்.

அந்த உதவியை ஆற்றும் பொழுது ஏற்படுகின்ற இன்ப துன்பத்தைப் பொருட்படுத்தாது எல்லாவற்றிற்கும் ஆட்பட்டு ஏற்றுக் கொண்டு, வெற்றி கண்டு இறுதியில் பெறுகிற மன திருப்தியிலே இன்பம் பொங்குகிறது.

அவ்வாறு செய்கின்ற தியாகம், போகும் ஓர் உயிரைக் காப்பாற்றுவதாக இருக்கலாம் அல்லது அல்லற்படும் ஓர் உயிரை சேர்ப்பதில் இருக்கலாம். என்றாலும் தூய மனதுடனும் எந்தப் பிரதிபலனையும், கைமாறையும் கருதாமல் பணி செய்வதே தியாகம்.

'உன் கடமையைச் செய், பிரதிபலனை எதிர்பார்க்காதே' என்று போதிக்கும் கீதையின் படி, கடமையைச் செய்பவன் மனிதன், அந்தக் கடமைக்குரிய பலனைத் தருபவன் இறைவன்' என்று வாழ்வதே அறிவுடைமையாகும்.

எல்லா மதங்களும் உயிர்களைக் காப்பாற்றவே தோன்றின, 'உயிர்களைக் கொலை வதை' பஞ்சமா பாதகம் என்று பறை சாற்றின. கொல்லா நோன்பினை பெருங் கௌரவமாகவே கருதின. போரிலே நடந்த பொல்லாக் கொலைகளைப் பார்த்து அசோக சக்ரவர்த்தி புத்த மதத்திலே சேர்ந்ததுடன் மட்டும் திருப்தி அடையவில்லை.

இனி வேட்டைக்கே போக மாட்டேன் என்று கூறியதுடன் அமைதி அடையவில்லை. புலால் உணவை அரசாங்க விருந்தில் போடக் கூடாது. என்று ஆணையிட்டுங்கூட ஆனந்தம் அடையவில்லை. பின் எப்பொழுது திருப்தி அடைந்தான்?

எந்த உயிருக்கும் தீங்கு செய்யக் கூடாது என்று எல்லா இடங்களிலும் எழுதிவைத்து. மக்களுக்கு ஆணையிட்டு, மக்களுக்குப் போலவே மிருகங்களுக்கும் வைத்திய சாலைகள் அமைத்துக் காத்த பிறகே, உண்மையான புத்த சந்நியாசி ஆனான்.

ஆகவே உயிரைக் கொல்லா விரதர், பல உயிர்களைக் காப்பதற்கு இணையாகும், அதனைத்தான் வள்ளுவரும், தரும நெறி காக்கும் தக்கோர் வகுத்த தன்மையான அறங்களிலே தலையாய இடம் வகிப்பது கொல்லாமை என்றார்.

கொல்லாமை விரதம் மேற்கொண்டால், நெஞ்சிலே கொடூரம் தலை தூக்காது. கொடூரம் இல்லை என்றால், கோபம் அங்கே குடியிருக்காது. கோபம் குறையக் குறைய நிதானம் அந்த நெஞ்சை ஆட்சி செய்யும். நிதானம் வர வர நெஞ்சுடன் அறிவு உறவாடும். அறிவு பெற பெற உண்மை நிலைபெறும். பொய்மை போயே விடும்.

ஆமாம், உலகில் அத்தனைப் புரட்டுக்கும் திருட்டுக்கும் முரட்டுத்தனமான காரியங்களுக்கும் பொய்யே துணை

புரிவதால் தான் பொய்யா மொழிப் புலவர் கூறுகின்றார் 'ஒன்றாக நல்லது கொல்லாமை', மற்றதன் பின்சாரப் பொய்யாமை நன்று" என்கிறார்.

கொல்லாமையை விட நன்று பொய்யாமை என்கிறார். யாமெய்யாக் கண்டவற்றுள், பெருமை மிக்கது பொய்யாமை என்று ஏன் கூறினார் என்றால் கொல்லாமை நன்று என்றால், பொய்யாமை அதனினும் மிக நன்று என்பதற்காகவே.

செயலால் தீங்கு செய்வதினும், மனதால் தீங்கு நினைக்கும் பொழுதே உண்மை வழி மாறி, பொய்யே ஆட்சி புரியத் தொடங்குவதால் தான் பொய்யாமை நன்று என்றார்.

நாம் கொல்லா விரதத்தைக் கைப்பிடிப்போம். பிறன் முன் பொய் சொல்லாமையுடன் தினம் நடப்போம். பொய்யை மறந்தால் பூத்துக் குலுங்கும் புது மலர் போல நெஞ்சம் தூய்மையாக விளங்கும். வாழ்வும் வழியும் தூய்மையாகத் துலங்கும்.

தூய்மையான பாதையில் சென்றால் துன்பமேது? துயரமேது? அரிதாகப் பெற்ற அற்புத மானிடப் பிறவியை ஆனந்தமுடன் அனுபவிக்க இன்றே ஓர் உறுதி எடுப்போம்! கொல்லா விரதத்தை ஏற்போம். எல்லா உயிரையும் காப்போம். அனைவரிடத்தும் அன்பு செய்வோம். ஆனந்தம் பெறுவோம்!



டாக்டர் எஸ். நவராஜ் செல்லையா அவர்கள் தப
இலக்கியத்தில் விளையாட்டுத் துறை நூல்கள் அதிகம
வெளிவர வேண்டும் என்ற முயற்சியில் இதுவரை 60-க்கு
மேற்பட்ட நூல்களையும் 20-க்கும் மேற்பட்ட கதை
கவிதை, நாடக நூல்களையும் எழுதி வெளியிட்டிருக்கிறா
இவர் எழுதிய 'ஒலிம்பிக் பந்தயத்தின் கதை' எனும் நூ
1977ம் ஆண்டும் விளையாட்டுக்களின் கதைகள் எனும் நூ
1981ம், ஆண்டும் விளையாட்டுக்களின் வழிமுறைகளு
வரலாறும் எனும் நூல் 1984ம் ஆண்டும் தேசிய விருதினை
பெற்றிருக்கின்றன.

தமிழிலும், உடற்கல்வித் துறையிலும், முதுகலைப் பட்ட
(M. A., M. P. Ed.,) பெற்றுள்ள ஆசிரியர் சடுகு
பாடல்களை ஆராய்ச்சி செய்து டாக்டர் (Ph.D.) பட்ட
பெற்றுள்ளார். வானொலி, டெலிவிஷன், வாரப் பத்திரிக்
களில் தொடர்ந்து விளையாட்டுத் துறை பற்றி பேசி
எழுதியும் வருகிறார்.

தமிழில் முதன் முதலாக "விளையாட்டுக் களஞ்சிய
எனும் விளையாட்டுத் துறை மாத இதழை 1977
ஆண்டிலிருந்து தொடர்ந்து நடத்திப் பணியாற்றி வருகிறா

---

கிரேஸ் பிரிண்டர்ஸ், சென்னை-600 0